# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 58 தை 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 23 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 20
பக்கங்கள்: 28


# விசாரணை அறிக்கைகள் இன்று நாடாளுமன்றுக்கு

### பெரும் புள்ளிகளின் பெயர்கள் அம்பலமாகும் அறிகுறி

கொழும்பு, ஜனவரி 23

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விசாரணை அறிக்கையும், மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றன என்று கூறப்படும் பெரும் ஊழல், மோசடிகள் தொடர்பான 34 விசாரணை அறிக்கைகளும் நாடாளுமன்றில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நாடாளுமன்றில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் இந்த அறிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அறிக்கைகள் சமர்ப்பிப்பு மாத்திரமே இன்று இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவை தொடர்பில் விவாதம் நடத்துவதற்கான திகதியைப் பெப்ரவரி 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரின என்றும் தெரியவருகின்றது.

பிணைமுறி மோசடி தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன. அவை முடிவடைந்த பின்னரே விவாதத்துக்குரிய திகதி தீர்மானிக்கப்படும் என்று அறியமுடிகின்றது.

இன்று நாடாளுமன்றம் கூடிய >> 06

## யாழ்.பல்கலை மாணவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெரும்பான்மையின மாணவர்கள் நால்வர் யாழ்ப்பாண நீதிமன்றால் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 4ஆம் வருட பெரும்பான்மையின மாணவர்கள் இருவரைத் தாக்கிய குற்றச்சாட்டிலேயே முகாமைத்துவ பீட 3ஆம் வருட பெரும்பான்மையின மாணவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 4ஆம் வருட மாணவர்கள் இருவர் மீது 3ஆம் வருட பெரும்பான்மையின மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு பல்கலைக்கழகத்துக்கு முன்பாக வைத்துத் தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர். விசார >> 06

## ரவி இன்று சிறப்புரை

கொழும்பு, ஜன. 23

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் முன்னாள் நிதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவருமான ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் இன்று சிறப்பு உரையாற்றவுள்ளார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி அறிக்கையை அரச தலைவர் ஆணைக்குழு கடந்த மாதம் 30ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்திருந்தது. அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் ஐ.தே.கவின் >> 06

## ஏ.இ.மனோகரன் காலமானார்

கொழும்பு, ஜன.23

சுராங்கனி புகழ், பொப்பிசைச் சக்கரவர்த்தியும் திரைப்பட நடிகருமான ஏ.இ.மனோகரன் காலமானார். பொப்பிசைச் சக்கரவர்த்தி என அறியப்பட்ட அவர் சிலோன் மனோகர் என்ற பெயரில் >> 06

## பிணைமுறி அறிக்கை மீது பெப்ரவரி 20இல் விவாதம்!

கொழும்பு, ஜன. 23

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய அரச தலைவர் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மீது இரண்டு நாள்கள் விவாதம் நடத்தப்படவுள்ளது என்று தெரியவருகின்றது.

பெப்ரவரி 20 மற்றும் >> 06

## முல்லையில் 42 தேர்தல் விதிமீறல் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜன.22

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் நேற்று வரை 42 சம்ப >> 06



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபைக்கான தேர்தல் அறிக்கை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.23

"சுத்தமான பசுமை மாநகரை நோக்கி" என்ற தொனிப்பொருளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாநகர சபைக்கான தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

நல்லூரில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் தேர்தல் அறிக்கையை தமிழரசுக் கட்சி >> 06

## அர்ஜுன மகேந்திரன் எந்நேரமும் கைதாகலாம்

### சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை எந்தநேரத்திலும் கைது செய்யமுடியும் என்று சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் தற்போது வசித்துவரும் அர்ஜுன மகேந்திரனை எந்த நேரத்திலும் கைதுசெய்யக்கூடிய ஆற்றல் இலங்கைக்கு உண்டு என்றும் சட்டமா அதிபர் கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜை என்றபோதிலும், நாட்டின் தற்போதைய சட்டதிட்டங்களின் அடிப்படையில் அவரைக் கைதுசெய்யமுடியும். வெளிநாட்டு >> 06

## கூட்டமைப்பை உடைக்க முழுவீச்சில் சதித் திட்டம்

### மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

தென்னிலங்கையில் இலங்கை அரசை எவ்வாறு கவிழ்க்கலாம் என்று சதி இடம்பெறுகின்றதோ அதே போல வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதறடிக்க முழுவீச்சில் சதி இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவைசேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் >> 06

## அறிக்கையை விவாதிக்க பின்னடிக்கின்றது அரசு

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.23

தேர்தலுக்கு முன்னர் பிணை முறி அறிக்கையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள அரசு மறுக்கின்றது என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ் சாட்டியுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் மத்திய வங்கி பிணை >> 06

## ரஞ்சனுக்கு எதிரான வழக்கு

## காணொலி இறுவட்டுகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

கொழும்பு, ஜன. 23

சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி - அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான வழக்கில், மனுவுடன் தொடர்புடைய காணொலிப் பதிவு அடங்கிய இறுவட்டின் நகலை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றப் பதிவாளரை உயர்நீதிமன்றம் நேற்றுப் பணித்தது.

இந்த இறுவட்டை ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும் என்று சிரச தொலைக்காட்சிக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், அந்த இறுவட்டு >> 06

## தேர்தல் வன்முறைகளுக்கு தேர்தலின் பின்பே பிணை

யாழ்ப்பாணம், ஜன. 23

தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் வேட்பாளரோ, வாக்காளரோ கைது செய்யப்பட்டால் தேர்தல் முடிவடையும் வரை அவர்களுக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றால் பிணை வழங்கப்படமாட்டாது என்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தெரிவித்தார்.

54 கிலோ கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்குப் பிணை கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை மேல்நீதிமன்றில் நேற்று நடைபெற்றது. அதன்போதே நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தேர்தல் ஆணையகம் நீதியான, ஜனநாயக தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நீதிமன்றங்கள் செயற்பட வேண்டும். யாழ்ப்பாண >> 06

## சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறை

### யாழ். மேல் நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 10வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து யாழ்ப்பாண மேல் நீதிமன்று நேற்றுத் தீர்ப்பளித்தது.

2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிளிநொச்சியைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமியை கடத்திச்சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் >> 06




see more news in NEWUTHAYAN.COM

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்
## தபால் மூல வாக்களிப்பு

கொழும்பு, ஜன.23

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது. இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்காக சுமார் 560,000 பேர் தகுதி பெற்றுள்ளனர்.







பொலிஸ் அதிகாரிகள், தேர்தல் அலுவலக மற்றும் மாவட்ட செயலக தேர்தல் அலுவலக அதிகாரிகளுக்கான வாக்களிப்பே நடைபெறுகின்றது என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து 476 பேர் வாக்களிப்பதற்கான தகுதி பெற்றுள்ளனர்.

இதில் தபால் மூல வாக்களிப்பில் 17 ஆயிரத்து 273 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

ஹற்றன் பிரதேசத்தின் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

பெப்ரல் அமைப்பு உட்பட சிவில் அமைப்புகள் மற்றும் ஹற்றன் பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொலிஸ் பரிசோதகர் மொஹமட் ஜெமில் கண்காணிப்பில் நடைபெற்ற இந்த தபால் மூல வாக்களிப்பில், ஹற்றன் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் வாக்களித்தனர்

ஏறாவூர் பொலிஸ் நிலையத்திலும் நேற்றுக் காலை ஆரம்பமானது. தபால் மூல வாக்களிப்பிற்காக 199 உத்தியோத்தர்கள் தகுதிபெற்றிருந்ததாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் சிறப்பு பொலிஸ் பரிசோதகருமான சிந்தக பீரிஸ் தெரிவித்தார்.

ஏறாவூரில் நேற்று வாக்களிக்கத்தவறுவோர் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தபால்மூல வாக்கினைப் பதிவு செய்யமுடியுமென அறிவிக்கப்பட்டது.

இதேவேளை அடுத்த கட்ட தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 25 மற்றும் 26 திகதிகளில் இடம்பெறவுள்ளது. (ற)



## சு.கவின் கிளை அலுவலகம் திறப்பு

அம்பாறை.ஜன.23

நிந்தவூர் பிரதேசத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளை அலுவலகம் திறக்கும் நிகழ்வும் மக்கள் சந்திப்பும் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூர ாட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

மீராநகர் வட்டாரத்தில் கைச்சின்னத்தில் போட்டியிடும் அரசதலைவரின் கிராமிய அபிவிருத்திப் பிரதிநிதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிந்தவூர் தொகுதி அமைப்பாளரும், தலைமை வேட்பாளருமான வை.எல்.சுலைமாலெவ்வையின் அழைப்பின் பேரில் பிரதான கிளைக் காரியாலயத்தை திறக்கப்பட்டது. (ற.ரி4)

## பேதங்களை மறந்து முன்னேற்றமடைவோம்

எம்.பி.மஸ்தான் தெரிவிப்பு



பேதங்களை மறந்து ஒன்றுபட்டு உழைத்து எமக்கென்று ஓர் அரசியல் தலைமையை நாமே உருவாக்கி அபிவிருத்தியின் பங்காளராக விளங்குவோம் இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி.மஸ்தான் காதர் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு கணேசபுரம் வட்டாரத்தில் போட்டியிடும் வி.மகேந்திரனை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் எமது கட்சியின் வேட்பாளர் திரு. வி.மகேந்திரன் அவர்களை வெற்றிபெறச் செய்வதன் மூலம் நாம் இப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை இலகுவாக செய்யமுடியும் அதற்கு உங்களது ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமானதாகும். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வின் இறுதியில் கனேசபுரம் வட்டாரத்திற்கான தேர்தல் அலுவலகமும் திறக்கப்பட்டது. (ற.ரி4)

## விபத்தில் இருவர் உயிரிழப்பு

வலஸ்முல்ல ஹக்மன பிரதான வீதியில் ஜூலோ சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். வலஸ்முல்ல - கொஹோலான - கலஹிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடையவர்களே உயிரிழந்தனர்.

வேகத்தை கட்டுப்படுத்த முடியாத உந்துருளியொன்று, பாரவூர்தியில் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)




## மக்களுக்கு நன்மை செய்யவே யானை வாலைப் பிடிக்கின்றோம்

தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர் தெரிவிப்பு

நுவரெலியா.ஜன.23

தமிழ் முற்போக்கு கூட்டணி யானையின் வாலை பிடித்துக் கொண்டு செல்கிறது என மலையகத்தில் ஒரு சில தலைவர்கள் கூறுகின்றார்கள். நாங்கள் யானை வாலை பிடித்தாவது மக்களுக்கு நன்மை செய்கின்றோம். இதுவே அவர்களுக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் இருக்கின்ற வித்தியாசம். இவ்வாறு கொட்டகலை பிரதேச சபைக்கு போட்டியிடும் பிரதான வேட்பாளர் விஸ்வநாதன் புஸ்பா தெரிவித்துள்ளார். கொட்டகலை அவிஸ்கா விருந்தகத்தில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு சில கட்சிகள் மக்களுக்கு தங்கள் செய்த சேவை என்ன என்பதை கூறுவதற்கு பதிலாக தமிழ் முற்போக்கு கூட்டணியை விமர்சிப்பதை மாத்திரமே மேடை பேச்சாக கொண்டிருக்கின்றார்கள்.

எனவே எப்படியாவது எத்தனை பொய்யை கூறியவதாவது இழந்த செல்வாக்கை மீண்டும் பெற்றுக் கொள்ள முயற்சி செய்கின்றார்கள். எதிர்காலத்தில் மலையக மக்களின் வரலாற்றை எழுதுகின்றவர்கள் பிரதேச சபைகள் அதிகரிப்புக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி முக்கிய காரணமாக அமைந்துள்ளதை கட்டாயமாக சுட்டிக்காட்ட வேண்டிய ஒரு நிலைமையை நாம் உருவாக்கியுள்ளோம் என்றார். (ற.ரி4)

## வேட்பாளர் அறிமுக நிகழ்வு

கிளிநொச்சி.ஜன.23

தமிழ் தேசிய விடுதலை கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகமும், முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டமும் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி பொது சந்தை வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, ஈபிஆர்எல் எவப் கட்சியின் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற.ரி4)

## 13 அலுவலகங்களை நேற்றுத் திறந்தது சு.க.



மன்னார்.ஜன.23

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதின் மூன்று கட்சி அலுவலகங்கள் நேற்று மன்னாரில் திறக்கப்பட்டன. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் மற்றும் அரசதலைவரின் பிரத்தியேக செயலாளர் சேனக்க அபேகுணசேகரவும் இந்த அலுவலகங்களை திறந்தார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் காதர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மன்னாரில் துரித வளர்சி கண்டு மக்களிடம் பலத்த வரவேற்பை பெற்றுள்ளதை எமது கூட்டங்களுக்கு வருகை தந்திருக்கும் பெருந்திரளான் ஆதரவாளர் பறைசாற்றுகிறது.

பல உள்ளூராட்சி மன்றங்களை இலகுவாக கைப்பற்றும் அளவுக்கு எமது கட்சி மக்களுடைய பேரபிமானத்தைப் பெற்றிருக்கிறது. என்றார்.

# அதிகாரிகளின் செயற்பாடுகளால் மாகாணசபைக்குப் பெரும் சவால்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

கைதடி,ஜன.23

2013ம் ஆண்டில் வடமாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்று மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி அதிகாரங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் எமது அரச உத்தியோகத்தர்கள் தமது பழக்கத்தின் நிமித்தம் ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்க எத்தனித்தனர். இது வடமாகாணசபைக்குப் பெரும் சவாலாக அமைந்தது.

இவ்வாறு வடக்கு மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கைதடியிலுள்ள முதன்மை செயலாளர் அலுவலகம் மற்றும் உதவி முதன்மை செயலாளர் (நிர்வாகம்), திறைசேரி அலுவலகங்களின் திறப்பு விழா நேற்று இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது.

"மாகாணசபை நிர்வாக முறைமைகள் பலவருடங்களுக்கு முன்னர் அறிமுகப் படுத்தப்பட்ட போதும் அந்தக் காலத்தில் வடமாகாணத்தில் காணப்பட்ட குழப்ப நிலைகள் காரணமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குரிய நிர்வாக அலகுகள் திருகோணமலை நகரத்தில் தொடர்ந்து இயங்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

திட்டமிட்டு தமிழ் மக்களின் இருப்புக்களை, நிலங்களை, தொழில்களைச் சூறையாட தென்னவர்கள் கங்கணம் கட்டி நிற்கின்றனர் எனப் புலப்படுகிறது. அவர்கள் தமக்கு உதவுவதற்காகப் பல திணைக்களங்களை எம் மத்தியில் உலவ விட்டு தமது காரியங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். எமது நில புலங்களை வன இலாகா, வனவிலங்குத் திணைக்களம், தொல்பொருள் ஆராய்ச்சி, கனிய வளம், பறவைகள் சரணாலயம், கடற்கரையோரப் பாதுகாப்பு என்று பல்வேறு திணைக்க ளங்கள்மூலம் தினமும் கையகப்படுத்தி வருகின்றனர். இந்த நிலைமைகளில் இருந்து நாம் எமது மக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் இவ்வகையான தவறான நடவடிக்கைகளை துணிந்து எதிர்ப்பதற்கும் எடுத்துக் கூறுவதற்கும்நீங்கள் யாவரும் முன்வர வேண்டும். தற்போது நிலைமைகள் எமது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அனைத்து செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் சுதந்திரத்துடன் தமது முழு ஆதரவை வழங்குவதன் மூலம் எமது அலுவலகக் கடமைகளை இலகுவாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக உள்ளது. நீண்ட போருக்குப் பிந்திய இந்தச் சூழலில் மக்களின் பிரச்சனைகள் நீண்டு செல்கின்றன.

வடமாகாணசபை இலங்கையிலுள்ள அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரு முன்மாதிரியான சபையாக ஏற்கனவே சில விடயங்களில் தனது தனித்துவத்தைக் காட்டியுள்ளது.

நாம் எமது சேவையையும் செயற்றிறனையும் மேம்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம்" என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண அவைத் தலைவர், வடமாகாணசபையின் முதன்மை செயலாளர் திரு.அ.பத்திநாதன், உதவி முதன்மை செயலாளர் (நிர்வாகம்) திருமதி. மோகனதாஸ், உதவி முதன்மை செயலாளர் (நிதி), திரு. சந்திரகுமாரன் மற்றும் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு மற்றொருவர் படுகாயம்

கொழும்பு,ஜன.23

கொழும்பு கண்டி உத்துவன்கந்த பகுதியில், இடம்பெற்ற, விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் 18 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உந்துருளி ஒன்றும் டிப்பர் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து ஏற்பட்டது. என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

# மரதன் ஓட்டம் முடிந்ததும் மயங்கி வீழ்ந்த மாணவி

தென்மராட்சி,ஜன.23

மரதன் ஓட்டம் முடிந்ததும் நீர் அருந்திய மாணவி மயங்கி வீழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் கைதடி நவீல்ட் பாடசாலைய்யில் நடந்துள்ளது.

புலேந்திரன் திசாளினி (வயது-15) என்ற மாணவியே மயக்கமடைந்த நிலையில், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதடி நவீல்ட் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஓர் அங்கமான மரதன் ஓட்டப் போட்டிகள் இருபாலருக்கும் நடத்தப்பட்டது. போட்டியில் கலந்து கொண்டு முடிவிடத்துக்கு வந்த மாணவி நீர் அருந்தி விட்டு அமர்ந்ததாகவும் சிறிது நேரத்தில் மயங்கி வீழ்ந்ததால் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டி விதிமுறைகளுக்கமைய பாடசாலை மாணவரகள், மருத்துவ சான்றிதழ் பெற்றே போட்டியில் கலந்து கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ரி2,9)



# தண்டுவான் அ.த.கவின் பவள விழா நிகழ்வுகள்

மாங்குளம், ஜன.23

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள தண்டுவான் அ.த.க. பாடசாலையின் பவள நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் கே.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனும், சிறப்பு விருந்தினரா துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரனும் கலந்து கொண்டனர்.

பாடசாலையில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். அதிதிக்ளால் மரக் கன்றும் நடப்பட்டது. (ற-72)

# மீன்வாடி தீக்கிரை

மன்னார்,ஜன.23

மன்னார் பள்ளிமுனை கடற்கரை பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவருடைய மீன் வாடி ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீயின் காரணமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன் உரிமையாளர் அந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த சுமந்தன் என்ற மீனவரது வாடியே எரிந்து சாம்பலாகியுள்ளது.

வாடியை இனம் தெரியாத நபர்கள் தீ வைத்து எரியூட்டியிறுக்கலாம் என சந்தேகிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ற.ரி5,56)



# மாணவர்களுக்கு பாதுகாவலர் பயிற்சி

வவுனியா,ஜன.23

வவுனியா நெளுக்குளம் கலை மகள் மகாவித்தியலாயத்திலுள்ள மாணவர்களுக்கு போக்குவரத்து விதி முறைகள் தொடர்பான பாதுகாவலர் பயிற்சி நேற்று இடம்பெற்றது.

நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸாரால் வழங்கப்பட்ட இப் பயிற்சி நேற்றுக் காலை பாடசாலையின் மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான பாதுகாவலர் அறிவூட்டல் செயற்றிட்டம் நேற்று நான்காவது முறையாகவும் நெளுக்குளம் போக்குவரத்துப் பொலிஸாரினால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் நெளுக்குளம் போக்குவரத்துப் பொலிஸார் மாயதுன்ன ஹேரத் ராஜபச்சே நிரோஷன் ரணசிங்க ஆகிய போக்குவரத்தப் யொலிசார் கலந்துகொண்டு மாணவர்களுக்கு தெளிவூட்டலை மேற்கொண்டனர். (ரி2)

# இயந்திரக் கோளாறால் பாரவூர்தி விபத்து

ஹற்றன்,ஜன.23

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நோர்வூட் பிரதான வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் சிறு சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. மஹியங்கனைப் பகுதியிலிருந்து நோர்வூட் பகுதிக்கு மணல் ஏற்றிச் சென்று இறக்கி விட்டு மீண்டும் மஹியங்கனை பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த பாரவூர்தியே விபத்துக்குள்ளானது.



பாரவூர்தியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக வாகன சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாக விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

# வீட்டாரை அச்சுறுத்த நஞ்சருந்தியவர் சாவு

தென்மராட்சி.ஜன.23

வீட்டாரை அச்சுறுத்த நஞ்சுத் திராவகத்தை அருந்தியவர் சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார். மிருசுவில் உசனைச் சேர்ந்த 51 வயது குடும்பத்தர் ஒருவர் அடிக்கடி உயிரை மாய்க்கப் போகிறேன் என குடும்பத்தினரை அச்சுறுத்தி வந்தார். நேற்றுமுன்தினமும் அவ்வாறே அச்சுறுத்துவதற்காக நச்சுத் திராவகப் போத்தலை வாயில் வைத்துக் கொண்டார். அப்போது கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சை அருந்தியுள்ளார் அதனால் மயங்கி வீழ்ந்துள்ளார்.

அதையடுத்து சாவகச்சேரி மருத்தவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உடனடியாக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்குக் அனுப்பி வைக்கப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ப.குகனேஸ்வரன் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட பதில் நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசாரணைகளை மேற்கொண்ட திடீர்சாவு விசாரணை அதிகாரி மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாரைப் பணித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.
மிருசுவில் உசனைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் விக்னேஸ்வரன் என்பவரே சாவடைந்தவராவார்.
வீட்டாரைப் பயமுறுத்துவதற்காக விளையாட்டாக முற்பட்டு உயிரை மாய்க்கின்ற சம்பவங்கள் குடாநாட்டில் அண்மைக்காலமாக நடந்தேறி வருகின்றன. அண்மையிலும் பெண்ணொருவர் வீட்டாரை பயமுறுத்த தீமூட்டியதில் தீ பரவி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-9)

### முச்சக்கரவண்டி மோதியதில்
# மாணவர்கள் மூவர் காயம்

சாவகச்சேரி.ஜன.23

முச்சக்கரவண்டி மோதியதில் மூன்று மாணவர்கள் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கொடிகாமம் கச்சாய் சாலையில் இடம்பெற்றது.
காயமடைந்த 10 வயதுடைய குறித்த மாணவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
கொடிகாமம் கச்சாய் சாலையில் உள்ள தனியார்கல்வி நிலையத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய வேளையில் கற்களால் எறிந்து விளையாடிக் கொண்டு சாலையைக் கடக்க முற்பட்ட வேளையில் விபத்து இடம்பெற்றது என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.
கெற்பேலியைச் சேர்ந்த அருள்வாசன் அபிநாத், பாலாவி தெற்கைச் சேர்ந்த சிவகுமார் பவிதாஸ், சிவரூபன் மதீஸ் ஆகியோரே காயமடைந்த மாணவர்களாவர்.
மாணவர்களை மோதியதில் முச்சக்கரவண்டியின் முன் பக்க கண்ணாடி சேதமடைந்தது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம்.ஜன.23

யாழ்ப்பாணம் அல்வாய் இந்து தமிழ்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் நவரத்தினம் இராசலிங்கம் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சிதம்ப ரப்பிள்ளை தில்லைநாதன் கலந்து சிறப்பிக்க வுள்ளார். (எ-4)

## பாலத்தினுள் பாய்ந்தது முச்சக்கரவண்டி




வடமராட்சி அல்வாய் மாலு சந்திக்கு அருகில் உள்ள வைரவர் கோயில் சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி ஒன்று அருகில் உள்ள பாலத்தினுள் பாய்ந்தது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (எ-4)

## வலி.மேற்கு, வலி.தென்மேற்கு எங்கும் வீட்டு சின்ன சுவரொட்டி

வலிகாமம்.ஜன.23

பல வர்ணங்களில் அச்சிடப்பட்ட வீட்டுச் சின்னம் பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் வலி.தென்மேற்கு, வலி.மேற்கு பிரதேசம் எங்கும் வீதி வீதியாக சுவர்களில் ஒட்டப்பட்டுள்ளன.பிரதேசம் எங்கும் தேர்தல்களம் சூடு பிடித்துள்ளது. வீதிகளில் வீடும் புள்ளடியும் இடப்பட்ட சின்னங்கள் வெள்ளை, மஞ்சள் வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. (எ-50)

# பாதணிகள் வழங்கிவைப்பு

வலி.மேற்கு,ஜன.23

கட்டுடை சைவ வித்தியாசாலை மாணவர்களுக்கு புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் திருநெல்வேலி தீபம் நிறுவனப் பணிப்பாளர் எம்.இராஜநாயகம் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பாதணிகளை வழங்கியுள்ளார்.
கல்லூரி மண்டபத்தில் அதிபர் கடம்பானந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன.
பின் தங்கிய நிலையிலுள்ள மேற்படி வித்தியாசாலையில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களின் நலன் கருதியும் அவர்களைக் கல்வித் துறையில் ஊக்குவிக்கும் வகையிலும் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் ஓய்வுநிலை ஆசிரியர் த.சிவசுப்பிரமணியம் உட்படப் பெற்றோர் மாணவர்கள் கலந்து கொண்டனர். (எ-115)

## இயந்திரம் மூலம் நெல் அறுவடை

வலிகாமம்.ஜன.23

வலி.தென்மேற்கு கமநல சேவைகள் பிரிவுக்கு உட்பட்ட நவாலி, கட்டுடை, வழுக்கையாறு பிரதேசங்களில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பித்துள்ளது.
குறுங்கால நெல்லை விதைத்த விவசாயிகள் நெல் அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை செய்து வருகின்றனர்.
கடந்த வருடக் கடும் மழையால் பெரும்போகச் செய்கையில் வலி. தென்மேற்கில் 67 வீதமான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன. எனவே மொத்த வயல் பரப்பில் அழிவடைந்தவை தவிர்ந்த ஏனைய நெற்பயிர்கள் பரப்பு ஒன்றுக்கு ரூபா 300 என்ற அடிப்படையில் நெல் அறுவடை செய்யப்படுகின்றது என விவசாயிகள் தெரிவித்தனர். (எ-50)

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு உபகுழு நியமிப்பு

வலி.மேற்கு.ஜன.23

மானிப்பாயில் மருதடி விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சி கருதி மேலும் 7 பேர் கொண்ட உபகுழு உறுப்பினர்கள் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள னர்.
வழிபடுவோர் சங்க உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டு இரு வருடங்களாக இயங்கிவந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாசபை நிர்வாகத்துக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து மல்லாகம் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆறுபேர் கொண்ட பெறுநர் குழு ஆலயத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று வழிநடத்தி வந்தது. தற்போது ஆலயத்தின் வளர்ச்சி கருதி மேற்படி உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது. இரு குழுக்களையும் சேர்ந்த 13 உறுப்பினர்கள் இணைந்து ஆலயத்தை வழிநடத்தி வருகிறார்கள். இதே வேளை, மக்களால் தெரிவு செய்யாப்பட்ட 7 பேர் கொண்ட தர்மகர்த்தாசபை உறுப்பினர்களுக்கெதிரான வழக்கு அடுத்த மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-115)

### பெரும்பாலான மீனவர்கள்
# தைப்பூசத்துக்குப் பின்னரே கடற்றொழிலில் ஈடுபடுவர்

யாழ்ப்பாணம்.ஜன.23

வடமாராட்சி கிழக்குக் கடற்பகுதி மீனவர்கள் எதிர்வரும் தைப்பூசத்துக்குப் பின்னர் கடல்தொழிலில் ஈடுபடுவதற்கு தயாராகி வருகின்றனர்.
தற்போதைய காலநிலை வேறுபாடு காரணத்தால் அதிகமான மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிப்பதற்கு செல்வதில்லை. சிலர் கரை வலை மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்தநிலையில் தைப்பூசத்தின் ஆழ்கடல் மீன் பிடியில் ஈடுபடுவதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

# வேட்பாளர்களுக்கு அடையாள அட்டைகள்


வலி.மேற்கு.ஜன.23

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பு நிலையங்களுக்குத் தடையின்றிச் செல்வதற்காக உதவித் தேர்தல் ஆணையாளரால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
அடையாள அட்டையில் வேட்பாளரின் புகைப்படம், தேசிய அடையாள அட்டை இலக்கம், கட்சி, வாக்களிப்பு நிலையம் போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தற்போது இந்த அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அடையாள் அட்டைகளுக்கு விண்ணப்பித்த ஏனைய கட்சி வேட்பாளர்களுக்கும் உதவித் தேர்தல் ஆணையாளரால் அட்டைகள் வழங்கப்படவுள்ளன. (எ-115)

## இராமநாதபுரத்தில் கசிப்பு உற்பத்தி: ஆறு பேர் கைது

கிளிநொச்சி, ஜன.23

இராமநாதபுரம் சம்புக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை இடப்பட்டு 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
கடந்த வெள்ளிக்கிழமை கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த பகுதியில் இரு கசிப்பு உற்பத்தி நிலையங்களை சுற்றிவளைத்தனர். சந்தேகத்தின்பேரில 6 பேரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 48 போத்தல் கசிப்பு மற்றும் கோடா, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் மற்றும் மூன்று மோட்டார் சைக்கில்களையும் கைப்பற்றினர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-6)



# பருத்தித்துறையில் கரையொதுங்கியது அதிசய மூங்கில் படகு

வடமராட்சி.ஜன.23
பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்கரையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மூங்கில் மரங்களால் கட்டப்பட்ட 'மீக் படி' படகு ஒன்று கரை ஒதுங்கியது. வீடு போல் அமைந்துள்ள படகை பெருந்தொகையான மக்கள் பார்த்து வருகின்றனர். படகு இந்தோனிசியா அல்லது தாய்வான் நாட்டுக்கடலில் இருந்து இங்கு கரை ஒதுங்கி இருக்கலாம் என கருதப்படுகின்றது.
வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டிலும் மூங்கில் படகு ஒன்று கரை ஒதுங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.
(எ-73)

# வேட்பாளர்களின் சொத்து விவரங்கள் கையளிப்பு

வலிகாமம்,ஜன.23
தமிழ்தேசியக் கூட்டமைப்பால் வீட்டு சின்னத்தில் போட்டியிடும் வலி. தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபைக் குட்பட்ட சகல வேட்பாளர்களும் முறைப்படி சொத்து விண்ணப்பப் படிவங்களைத் கையளித்துள்ளனர்.
தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் வேட்பாளராக களமிறங்கும் அனைவரும் சட்டத்தின் முன் சொத்து விவரங்களை வெளிப்படுத்தி சமாதான நீதிவான் முன்னிலையில் வெளிப்படுத்த வேண்டும்.
இதன் பிரகாரம் குறித்த வேட்பாளர்கள் அனைவரும் படிவங்களை முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன் ஊடாக கையளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இல்ல மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி ஜன. 23
கச்சாய் அ.த.க.பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற சுகாதாரம், போசாக்கு மற்றும் விளையாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டிலான இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் நாளை புதன்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறும்.
அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசனும் சிறப்பு விருந்தினராக வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.சிறிகாந்தாவும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# தொழிற்பயிற்சிக்கான நேர்முகத் தேர்வுகள்

தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராப் பிரிவினரால்; ஆரம்பிக்கப்படவுள்ள வருமானம் ஈட்டித் தரக்கூடிய தொழிற் பயிற்சிகளுக்கு ஆள்களை இணைப்பதற்கான நேர்முகத் தேர்வுகள் வலயக் கல்வி அலுவலகத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளன.
மட்பாண்டம் தயாரித்தல், கடற்சிப்பிகள் மற்றும் சங்குகளால் உற்பத்திப் பொருள்கள் தயாரித்தல், ஆயுள்வேத உற்பத்தி, தெங்கு உற்பத்தி, கழிவுப் பொருள்களிலான சித்திரப் பொருள்கள் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.
கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் அன்றைய தினம் உரிய ஆவணங்களுடன் வருகைதந்து பெயர்களைப் பதிவு செய்து நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள முடியுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.
பயிற்சிகளின் பின்னர் சுயதொழில்களை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் உள்ளதால் வயது வேறுபாடின்றி அனைவரும் பயிற்சியில் கலந்து கொள்ள முடியும் என மேலும் அறிவித்துள்ளார். (எ-9)

# யாழ். மாநகரை தூய்மைப்படுத்த மக்களின் ஒத்துழைப்புத் தேவை!

## மாநகர சபை ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்.ஜன.23
யாழ்ப்பாண மாநகரை தூய்மையான பிரதேசமாக மாற்ற மக்களின் ஒத்துழைப்புத் தேவை என்று யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:
எமது பிரதேசத்தின் சுத்தம் எங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து பொறுப்புடன் திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபட்டால் மட்டுமே மாநகர அழகு, தூய்மை, சுகாதாரம், அபிவிருத்தி என்பன விரைவில் சாத்தியமாகும்.
வீடுகளில் பயன்படுத்தப்படும் உக்கக் கூடிய பொருள்களை எரியூட்டுவதைத் தவிர்த்து கொள்ளுங்கள். அதனை வீட்டுக் காணிகளிலேயே புதைத்து மண்வளத்தை மேம்படுத்துங்கள். தொற்று நோய் அபாயமுள்ள கழிவுகளை பொது இடங்களில் வீசுவதை தவிர்த்து கொள்ளுங்கள். திண்மக்கழிவுகளை தரம் பிரித்து வழங்கி பணியாளர்களுக்கு உதவி செய்யுங்கள்.
பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழிவு அகற்றும்
தொட்டிகளில் தரம்பிரித்து கழிவுகளைப் போடுங்கள். இறந்த விலங்குகள், இறைச்சிக் கழிவுகள் வீசுவதை தவிர்த்து கொள்ளுங்கள். இலத்திரனியல் கழிவுகளை மாநகர சபையின் கழிவு சேகரிப்பு நிலையங்களில் ஒப்படையுங்கள் என்றுள்ளது.
(எ-ரி)

# தையல் இயந்திரம் வழங்கிவைப்பு



உடுவில், குடத்தனை, கைதடி வடக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த முன்னாள் போராளி மற்றும் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த மூவருக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் அவரது இல்லத்தில் வைத்து நேற்றுமுந்தினம் தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (எ-ரி)

# குறுக்கே சென்ற நாயால் விபத்து


தென்மராட்சி ஜன. 23
மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது திடீரென்று வீதியின் குறுக்கே நாய் ஓடியதால் மோட்டார் சைக்கிளில் பயணித்த 26 வயது நபருக்கு காலில் பாதிப்பு ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கெற்பேலி மேற்கில் இடம்பெற்றது.
இதே இடத்தைச் சேர்ந்த இராசதுரை சசிலவன் (வயது - 26) என்பவரே சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
(4-9)

# தென்மராட்சிப் பிரதேச கலாசார அதிகார சபையின் பொங்கல் விழா



சாவகச்சேரி, ஜன. 22
தென்மராட்சிப் பிரதேச கலரசார அதிகார சபையின் பொங்கல் விழா சாவகச்சேரி ஸ்ரீபழநி ஆண்டவர் ஆலய முன்றலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெற்ற விழாவில் இயற்கை நல வாழ்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அதிகார சபையின் யோகாசனப் பிரிவினரால் ஆலய வளாகத்தில் மரக்கன்றும் நட்டப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4-9)

# நெல்லியடியில் சீர்கேடான உணவகம் சீல்வைத்து மூடப்பட்டது



யாழ்ப்பாணம், ஜன. 23
நெல்லியடியில் சுகாதார முறைப்படி இயங்காத உணவகம் நேற்று சீல் வைக்கப்பட்டது.
நெல்லியடிப் பகுதியில் சுகாதார முறைப்படி இயங்காத உணவகத்துக்கு 17 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் உடனடியாக உணவகத்தை சீல் வைக்குமாறும் பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
நெல்லியடி பொதுச் சுகாதார பரிசோதகர் சுகுமாரன் ரவிவர்மா குறிப்பிட்ட உணவகத்துக்குச்சென்று பரிசோதித்தபோது முறையற்ற கழிவு முகாமைத்துவம், சீலிங், சுவர் அழுக்காக இருந்தமை, பொருத்தமற்ற சமையல் அறை, நிலம் துப்பரவின்மை என்று 6 குறைபாடுகள் கண்டறியப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.
அவருக்கு 17 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி உடனடியாக உணவகத்தைச் சீல் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.
அத்துடன் நெல்லியடி பகுதியில் மற்றொரு உணவகம் ஒன்றில் இருவர் பொருத்தமான உடை மற்றும் தொப்பி அணியாமைக்கு 6 ஆயிரம் ரூபாவும் மற்றையவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (4,422)

# 'செயற்பட்டு மகிழ்வோம்'

வலிகாமம்,ஜன.23
வலி.மேற்கு திருவடிநிலை இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த 'செயற்பட்டு மகிழ்வோம்' நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.
பாடசாலை அதிபர் து.ஷிவஞானம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாம வலய பிரதி கல்வி பணிப்பாளர் எஸ்.தேவமனோகரும் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்க அதிகாரி எஸ்.சுரேஷ்குமார், வெண்கரம் செயற்பாட்டாளர் முருகையா கோமகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-50)

## பிணைமுறி...

21ஆம் திகதிக ளில் மேற்படி விவாதத்தை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் அறியமுடிகின்றது.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்குப் பிறகு ஜனவரி மாதத்துக்குரிய சபை அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது. அதில் பிணைமுறி விசாரணை அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மொழிபெயர்ப்பு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கையை ஆராய்வதற்கான காலம் உள்ளிட்ட விடயங்களால் இந்தவாரம் விவாதம் நடைபெறாது என்றும், பெப்ரவரி மாத முற்பகுதியில் தேர்தல் நடைபெறுவதால் தேர்தலுக்குப் பிறகு கூடும் சபை அமர்விலேயே அறிக்கை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது. இந்த அறிக்கையை விரைவில் விவாதத்துக்கு எடுக்குமாறு எதிர்க்கட்சிகள் இன்று வலியுறுத்தினாலும், தேர்தலைக் கருத்திற்கொண்டு இது விடயத்தில் ஆளுந்தரப்பு இழுத்தடிப்பை செய்யுமென்றே தகவல்கள் வெளியாகியுள்ளன. (ղ-4)

## யாழ்.பல்கலை...

ணைகள் முன்னெடுக்கப்பட்டன. தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் 4 பெரும்பான்மையின மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று யாழ்ப்பாண்ம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். மாணவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையேயான மோதல்கள் தற்போது அதிகரித்து வருவதால், விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் 4 மாணவர்களையும் வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ղ-21,8)

## விசாரணை...

பின்னர் இந்த அறிக்கைகள் தொடர்பில் ஜே.வி.பி. கேள்விகளை எழுப்பவுள்ளதுடன், விவாதத்தை உடன் நடத்துமாறும் வலியுறுத்தவுள்ளது.

அதேவேளை, இன்று மாலையும் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஊவா மாகாண முதலமைச்சரின் செயற்பாடு, அரச தலைவரின் சிறப்பு அறிவிப்பு என அரசியல் களம் பரபரப்பாகக் காணப்படும் சூழ்நிலையிலேயே இன்று நாடாளுமன்றம் கூடுகின்றது. (ղ-4)

## ஏ.இ...

தென்னிந்தியத் திரைப்படங்களில் தமது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தார்.

நேற்று மாலை 7.30 அளவில் அவர் காலமானார் என்று அவருடைய உறவினர்கள் தெரிவித்தனர். அன்னாரது இறுதிக்கிரியை கள் நாளைமறுதினம் புதன்கிழமை சென்னை யில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ղ)

## அறிக்கையை...

முறி மோசடி தொடர்பான அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாது எனவும், தேர்தலுக்குப் பின்னர் தேவையாயின் ஒரு தினம் தரமுடியும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார் என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

கட்சித் தலைவர்கள் கூட்டம் நிறைவடைந்த பின்னர் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இன்று நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு மாத்திரமே இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் இந்த அறிக்கையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் தினம் குறித்து ஆராய கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி இந்த அறிக்கை தொடர்பிலான விவாதத்தை தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் நடத்துவதற்கு தேவையான அனைத்து அழுத்தங்களையும் கொடுக்கும். என்றார். (ղ)

## கூட்டமைப்பை...

கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாநகர சபைக்கான தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வு நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது திட்டமிட்ட வகையில் பொய்யான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலும் தமிழரசுக் கட்சியை இல்லாது ஒழிக்கும் முயற்சியில் சிலர் களமிறங்கியுள்ளனர். நாங்கள் கொலையாளிகள் அல்லர். கொள்ளையர்களும் அல்லர். அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2 கோடி ரூபா இலஞ்சம் வாங்கினார் என்று தெரிவித்தார் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்திருந்தேன்.

நான் சாகடிக்கப்படும் காலத்தில் கூட கண்ணீர் விட்டதில்லை. சாதாரணமாக பல விடயங்களுக்குக் கண்ணீர் விட்டுள்ளோம். நேற்று ஊடகம் ஒன்றில் செய்தி ஒன்றைப் பார்த்தேன். முழுக்க முழுக்க தேர்தல் பரப்புரைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொய்யைக் கூறியுள்ளார். அது மக்களின் அபிவிருத்திக்காக கொடுக்கப்பட்ட திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஆகும். இது அரச வழமை ஆகும்.

என்றும் இல்லாதவாறு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. முன்னாள் போராளிகளுக்காக விசேட வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இந்த முறையும் எமது மக்களுக்காக 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இவ்வாறு பல சாதகமான விடயங்கள் இருந்தமையாலேயே நாம் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவு கொடுத்தோம். இந்த நிலையில் மிகப் பெரிய பொய்யை ஊடகம் வெளியிட்டுள்ளது. அதைப் பார்த்து நான் கண்ணீர் விட்டேன். இந்த விடயத்தை சும்மா விடப் போவதில்லை. இதற்கு நாம் முழுமையாக விளக்கத்தை ஆதாரத்துடன் வழங்கவுள்ளேன்.

அந்த உறுப்பினர் கூறுவது போல நாம் வெறுமனே 2 கோடி ரூபாவுக்குத்தான் விலை போக வேண்டுமா?. விலை போவதாக இருந்தால் எத்தனையோ மில்லியன் ரூபாவை கேட்டிருப்போம். நாம் அவ்வாறான மனநிலையுடன் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. இங்குள்ள பல சிறு கட்சிகள் எல்லாம் அமைச்சுப் பதவியை தக்க வைத்துள்ளன. முன்னைய காலத்திலும் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளனர். நாம் அமைச்சுப் பதவிகள் கூட வேண்டாம் என்று கூறி மக்களுக்காகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

தற்போதைய அரசிலும் கூட எம்மை அமைச்சுப் பதவியை ஏற்க வேண்டும் என்று கோரியிருந்தார்கள். நாம் அதனை நிராகரித்து தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி வருகின்றோம். எம்மீது திட்டமிட்டு சில பொய்யான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் கூறியதாக வெளிவந்த செய்தி தொடர்பாக நாம் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம். சட்டத்தரணிகளுடன் ஆலோசனை செய்து வருகின்றோம். இந்த விடயத்தை நாம் சும்மா விடமாட்டோம்-என்றார். (ղ-8)

## தேர்தல்...

மேல் நீதிமன்ற நியாயாதிக்கு எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நடைபெறும் பாரதூரமான குற்றங்களுக்குத் தேர்தல் முடிவடையும் காலம் வரையில் பிணை வழங்கப்படமாட்டாது.

யாழ்ப்பாணத்தில் இதுவரை பாரதூரமான தேர்தல் வன்முறைகள் எதுவும் பதிவாகவில்லை. ஒரு சில வாள் வெட்டுச் சம்பவங்கள், கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றுடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களைப் பொலிஸார் தேடி வருகின்றார்கள்.

கொலை , கொள்ளை வாள்வெட்டுச் சம்பவங்கள் போன்ற சமூக விரோதச் செயல்களுக்குத் தேர்தல் காலத்தில் பிணை வழங்கினால் தேர்தல் கால வன்முறைகள் அதிகரித்து விடலாம். பாரதூரமான குற்றங்களுக்கு தேர்தல் முடிவடையும் வரையில் பிணை வழங்க முடியாது. அவை தொடர்பான அனைத்து வழக்குகளும், தேர்தல் முடிவடைந்த பின்னர் எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னரே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்- என்றார்(ղ-4,37,106)

## முல்லையில்...

வங்கள் முறைப்பாடாக கிடைக்கப்பெற்றுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத் தகவல்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு , கரைதுறைப்பற்று , துணுக்காய் மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கும் பல்வேறு கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இன்று வரையான காலத்தில் 42 தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ղ)

## சிறுமியை...

செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்ப்பாண மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

பாதிக்கப்பட்ட சிறுமி நீதிமன்றில் சாட்சியம் அளித்திருந்தார். எதிரியும் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். தான் மதுபோதையில் இருந்த சமயமே அவ்வாறு நடந்துகொண்டேன் என்று தெரிவித்தார்.

எதிரி தரப்பு சட்டத்தரணி, "எதிரி திருமணம் ஆனவர், அவருக்கு குழந்தைகள் உள்ளன, அதனால் குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும்" என்று கருணை விண்ணப்பம் செய்தார். அதன்போது அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் குறித்த குற்றச் செயல் பாரதூரமானது அதற்கு ஆக கூடியது 20 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டும். குறைந்த பட்சம் 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று குறிப் பிட்டிருந்தார்.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. அதன்போது, எதிரியை இந்த மன்று குற்றவாளியாக இனங் காண்கிறது. சிறுமியைக் கடத்திச் சென்றமைக்காக 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும், வன்புணர்வுக்கு உட்படுத்தியதற்காக 10வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்படுகின்றது. இரண்டு சிறைத்தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்க முடியும்.

10ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படுகின்றது. அதனைப் கட்டத் தவறின் 6 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 இலட்சம் ரூபா இழப்பீடாக வழங்க வேண்டும். அதனை வழங்க தவறின் 2வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பளித்தார். (ղ-4,37,106)

## யாழ்...

யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா வெளியிட முதல் பிரதியை புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் பெற்றுக் கொண்டார்.

1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியன்று அழிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகரசபைக் கட்டடம் மீண்டும் அதே இடத்தில் அனைத்து வசதிகளையும் கொண்டதாக புதுப் பொலிவுடன் அமையும், மாநகர திண்மக் கழிவகற்றல் முறைமை நவீன பொறிமுறையில் வினைத்திறனுடன் செயற்பட்டு நகரம் சுத்தமாகப் பேணப்படும், சாத்தியமான வழிமுறையின் கீழ் மாநகரம் முழுவதற்கும் சுத்திரிக்கப்பட்ட குடிநீர் வழங்கல், நிலத்தடி நீர் மாசடைதலைத் தடுக்கும் வகையில் மலக் கழிவு அகற்றலுக்கான பாதாள சாக்கடைத்திட்டம், மாநகருக்கு நவீன தொழிநுட்ப முறைமையில் வடிகால் அமைப்பு முறை அறிமுகம், மாநகர எல்லையில் காணப்படும் போக்குவரத்து நெரிசலுக்கு உடனடித் தீர்வு, முன்னைய நிர்வாகங்களில் இடம்பெற்ற முறைகேடுகள், ஊழல் மோசடிகளுக்கு உடனடி விசாரணை போன்ற விடயங்கள் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், மாகாண சபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, ஜெயசேகரம், கஜதீபன், யாழ்ப்பான மாநகர சபை வேட்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ղ-8)

## காணொலி...

மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

நேற்று உயர்நீதிமன்ற நீதியரசர்களான சிசிர டி அப், நளின் பெரேரா விஜித் கே. மலல்கொட ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இறுவட்டு வழங்கப்பட்டுள்ளதால் பிரதிவாதிக்கு எதிரான குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் முற்பட்டிருந்த அரச தலைவர் சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய கோரினார். அதன்பின்னரே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளில் 95 சதவீதமானோர் மோசடிக்காரர்கள் என்று ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கூறியிருந்தார் என்றும், இந்தவிடயம் நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

பொதுபலசேனா அமைப்பின் மாகல்கந்த சுதந்த தேரர் மற்றும் சுனில் பெரேரா ஆகியோரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த விடயம் நீதிமன்ற அவமதிப்பு என்றும் அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டது.

இதனால் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய பன்னாட்டு நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தை அமைப்பதற்கு பன்னாட்டின் அழுத்தம் பிரயோகிக்கப்படலாம் எனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நாவம, அரச மூத்த சட்டத்தரணி சுஹர்ஷி ஹேரத் ஆகியோர் முற்பட்டிருந்தனர். (ղ-4)

## ரவி...

முக்கிய தலைவர்கள் சிலரின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவராக முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க காணப்படுகிறார்.

பொய் சாட்சியம் வழங்கியதன் அடிப்படையில் இவருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தொடுக்கப்பட வேண்டுமென்று ஆணைக்குழுவின் பரிந்துரையில் கூறப்பட்டிருந்தது. ஆனால் "ஐ.தே.கவுக்கும் எனது கௌரவத்துக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கில் அறிக்கை திரிபுபடுத்தப்பட்டுள்ளது" என்று ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். பிணைமுறி மோசடி விவகாரம் குறித்து நாடாளுமன்றில் இன்று சிறப்பு உரையொன்றை நிகழ்த்தவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார். (ղ-4)

## அர்ஜுன...

சுற்றுலாப்பயணி ஒருவர் இலங்கையில் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவ்வாறானவர்களை கைதுசெய்ய முடியும்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராகவும் இவ்வாறு சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பிலான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் தற்பொழுது ஆராயப்பட்டு வருகின்றது.

சாட்சியங்கள் மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பில் ஆராயப்பட வேண்டியிருப்பதால் எப்போது சரியாக வழக்குத் தொடரமுடியும் என்பது பற்றிய தகவல்களைத் தற்போதைக்கு வெளியிடமுடியாது-என்றார். (ղ-4)



## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மேலாடையின்றிப் போராட்டம்

அக்கரைப்பற்றில் இடம்பெறுகின்ற வன்முறைக்கு எதிராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் உள்ளிட்ட ஆதரவாளர்களினால் மேலாடை அற்ற போராட்டம் ஒன்று நேற்று அக்கரைப்பற்று மணிக்கூட்டு சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்றில் அரசியல் வாதிகள் வன்செயலில் ஈடுபட்டு வருவதாகவும், அவர்களை உடனடியாக கைது செய்யக் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அக்கரைப்பற்றில் வன்முறைக்கு எதிராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் தவத்தினால் இந்த மேலாடை அற்ற போராட்டம் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத்தை கூட்டியதற்கு பொலிஸ் விசாரணை

மட்டக்களப்பு.ஜன.23

ஏறாவூர் முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத்தினரைக் கூட்டி சங்க உறுப்பினர்களின் சேமநலன்கள், சங்கத்துக்கான நன்மை பயக்கும் விடயங்கள் சம்பந்தமாக கலந்தாலோசித்தமைக்காக தான் பொலிஸ் விசாரணைக்கு முகம் கொடுத்ததாக ஏறாவூர் முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத்தின் தலைவர் முஹம்மத் வஹாப் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக கட்சிகள் சுயேச்சைக் குழுக்கள் சிறந்த திட்டங்களை, தேர்தல் அறிக்கைகளை வெளியிடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்த போதும் முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்டின் ஆலோசனைகளோடு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் வெளியிட்ட ஏறாவூர் பெரு நகர அபிவிருத்திக்கான தேர்தல் அறிக்கையில் மக்களுக்கான பல அனுகூலங்கள் இருந்தன.

அந்த அனுகூலங்கள் ஏறாவூர் முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கும் நன்மை பயப்பதாகக் காணப்பட்டதால் அது சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்கு முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத்தைக் கூட்டி கலந்தாலோசித்தோம்.

இதனைப் பொறுத்துக் கொள்ளாத அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டோரால் தவறாக வழி நடத்தப்பட்ட ஒரு சிலர் பொலிஸாருக்குப் பிட்டிசன் அடித்துள்ளார்கள்.

அதனால் நான் பொலிஸ் விசாரணைக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது - என்றார்.

## கஞ்சாவுடன் 22 பேர் கைது

நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலிருந்து கேரளக் கஞ்சா 57000 மில்லிகிராம் கஞ்சா எடுத்துச் சென்ற 22 பேர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் விசேட குற்றத் தடுப்பிரிவு மோப்ப நாயின் உதவியுடன் கடந்த சனிக்கிழமை ஹற்றன்- கொழும்பு பிரதான வீதியில் தியகல பகுதியில் மாலை 4 மணி தொடக்கம் இரவு 8 வரை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 20 பேரும் ஹற்றன் புகையிரத நிலையத்தில் மேற்கொண்ட தேடுதலின் போது 02 பேருமாக 22 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அவிசாவளை, பாதுக்க, ஹங்வெல்ல உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளை சேர்ந்தவர்கள் என்றும் இந்தச் சந்தேக நபர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஹற்றன் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# பொருளாதாரக் கொள்கை தவறவிட்டுள்ளது ஐ.தே.க.

### அரச தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 23

இலங்கையின் பொருளாதார கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சியால் சரிவர செய்யமுடியவில்லை. மூன்று ஆண்டுகளில் மக்களுக்கான பொருளாதார கொள்கை உருவாகவில்லை என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்.



மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் யார் திருடர் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரிகின்றது. ஊழல் வாதிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை முன்னெடுத்து தண்டனை வழங்குவேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கேகாலை பிரதேசத்தில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அரசதலைவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய அரசு அமைக்கப்பட்டதன் நோக்கம், அதனை அமைக்க கடினமான நகர்வுகளை கையாண்ட விதம் என்பன இன்று பலருக்கு நினைவில் இல்லாது போயுள்ளன. எனினும் நான் எதற்காக அரசை அமைத்தேனோ அதே நோக்கத்தில் இருந்தே இன்றுவரையில் செயற்பட்டு வருகின்றேன்.

கடந்த மூன்று வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்துக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அவர்களின் வேலைத்திட்டங்கள், பொருளாதார முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியன ஐக்கிய தேசியக் கட்சியால் முன்னெடுக்கப்பட்டன. எனினும் மக்கள் திருப்தியடையும் பொருளாதார நிவாரணங்கள் கடந்த காலங்களில் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே மக்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டும். வாழ்வாதாரச் சுமையைக் குறைக்க வேண்டும். ஆகவே இந்த வருடம் முதல் அந்தப் பொறுப்பை நான் கையேற்கவுள்ளேன். இதற்காக மூன்று மாதங்களுக்கு முன்னர் தேசிய பொருளாதார சபையை நான் அமைத்தேன். இதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்து மக்களுக்கு நிவராணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் திட்டங்களை நான் கையாள்வேன். தேசிய கைத்தொழில், தேசிய உற்பத்தி மற்றும் தேசிய முதலீடு அனைத்தையும் பாதுகாத்து நாட்டின் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தும் பொறுப்பை நானே ஏற்றுகொள்கின்றேன் - என்கிறார்.

## எல்லை வரைபடம் தயாரிப்பு

இலங்கையின் அரச நில அளவையாளர் திணைக்களம் நாட்டிலுள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகளை குறிக்கும் வரைபடம் ஒன்றைத் தயாரித்துள்ளது. 14018 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளைக் கொண்ட இந்த வரைபடம், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் வரையப்பட்டுள்ளது. இந்த வரைபடம் அரச நில அளவையாளர் திணைக்களத்தின் www.survey.gov.lk எனும் இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தேவைப்படும் எவராலும் தமது கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராமம் வீதி முதலானவற்றின் விவரங்களை அறிந்துகொள்ள முடியும் என்று நில அளவையாளர் பீ.எம்.பீ.உதயகாந்த தெரிவித்தார்.

## கதிர்காமத்தில் ஏற்பட்ட கலவரம் மக்களை அகற்றவே கண்ணீர் புகை பிரயோகம்

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் ஒருவர் பலியானதையடுத்து, ஏற்பட்ட அமைதியின்மையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்து, மக்களைக் கலைக்க வேண்டிய நிலை கதிர்காமம் பொலிஸாருக்குஏற்பட்டுள்ளது.

20ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம், கதிர்காமம் சோதனைச் சாவடியில், பொலிஸாரின் கட்டளையையும் மீறி அதிவேகத்தில் செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மீது, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் பலியானார்.

கதிர்காமத்தைச் சேர்ந்த 44 வயது நிரம்பிய நபரே, இந்தத் துப்பாக்கிச் சூட்டில் பலியானவரென்று, கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தார். ஆனால், அவரது பெயரை பொலிஸார் கூற மறுத்துவிட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, கிளர்ந்தெழுந்த மக்கள் கூட்டம், குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, கற்களால் பொலிஸ் நிலையத்தைத் தாக்கி, அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

பொலிஸாருக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். இந்த அமைதியின்மையை நிவர்த்தி செய்யும் பொருட்டும், மக்களைக் கலைக்கும் பொருட்டும், பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகத்தை மேற்கொண்டு, மக்களைக் கலைத்தனர்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானவரின் சடலம், சட்ட வைத்திய பரிசோதனைக்கென்று கதிர்காமம் அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கியச் சூட்டை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார். கதிர்காமத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பூரண அமைதி நிலவுகின்றது.

# சிரமங்களின் மத்தியிலும் அரசை முன்னகர்த்தினோம்

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.23

கடும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக பொருளாதாரத்தையும் அரசையும் சிரமங்களுடன் முன்னெடுத்துச் சென்றோம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

குருணாகல் நிக்கவரெட்டிய பிரதே சத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் போர் முடிந்த பின்னர், நாட்டை முன்னேற்றி, வேலை வாய்ப்புப் பிரச்சினையை தீர்ப்பேன் என்று கூறினார். அவர் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. இருந்த பிரச்சினைகள் மேலும் உக்கிரமடைந்தன. பெருமளவில் கடனைப் பெற்றனர். கடனைத் திரும்பச் செலுத்த நாட்டின் வருமானம் போதுமானதாக இருக்கவில்லை.

கடும் பொருளாதாரப் பிரச்சினைக்கு மத்தியில் நாங்கள் அரசைப் பொறுப்பேற்ற போது, எங்களால் அரசை முன்னெடுத்துச் செல்ல முடியாது என மகிந்த ராஜபக்ச எண்ணினார். ஒரு வருடத்தில் பொருளாதார வீழ்ச்சியடைந்து, அரசு கவிழும், அவர் ஆட்சியைப் பிடிக்கலாம் எனக் கருதினார். தற்போது நாடு பொருளாதார ஸ்திரத்தன்மையில் உள்ளது. -என்றார். (ற)

# மேல் மாகாண விவகாரம் மன்றில் விவாதிக்கப்படும்

## வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபரை, மாகாண முதலமைச்சர் மண்டியிட வைத்த விவகாரம் தொடர்பாக, இன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

மேலும் இந்த விவகாரம் குறித்து, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவை விசாரணைக்குட்படுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிவிரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும், அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில், குறித்த விவகாரம் தேசியமட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வுகிடைக்க விருப்பதும் விசேடஅம்சமாகும்.

குறித்து ஆசிரியசங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினும் பாதிக்கப்பட்டஅதிபர் சார்பாகவழக்குத் தாக்கல் செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண முதலமைச்சர் சாமரசம்பத் தசநாயக்க, தமக்குக் களங்கத்தை ஏற்படுத்தியவர்களுக்கெதிராக 500 மில்லியன் ரூபா நிதி கோரி மான நஷ்ட வழக்கைத் தாக்கல் செய்யப் போவதாகவும், சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருவதாகவும் கூறினார்.



# 3ஆம்கட்ட இந்தியவீடமைப்பு மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மேலும் 131 இந்திய வீடுகளுடன் 3ஆம் கட்ட இந்திய வீடமைப்புத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மேலும் 131 குடும்பங்களுக்கான 3ஆம் கட்ட இந்திய வீட்டுத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான நிகழ்வு கடந்த சனிக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலர் உள்ளிட்ட அதிகாரிகளின் பங்கேற்புடன் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கரடிப்பூவல் கிராமத்தில் இந்த வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 5000 இந்திய வீட்டுத் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2871 வீடுகள் முன்னாள் அரச மாவட்டச்செயலர் அதிபர் சறோஜினிதேவி சார்ள்ஸ் அவர்களின் நிர்வாகக் காலகட்டத்தில் முழுமையாகவும் வெற்றிகரமாகவும் அமைக்கப்பட்டன.

அதன் முழுமையான வெற்றியையடுத்து அரச அதிபர் சறோஜினி தேவியின் வேண்டுகோளுக்கு அமைய மேலதிகமாக மேலும் 270 வீடுகள் இந்திய அரசால் வழங்கப்பட்டன.

இதனையடுத்து ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாது விடுபட்ட மேலும் 131 வீடுகளையும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வழங்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ் தற்போது 3ஆம் கட்ட இந்திய வீடமைப்புத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீடமைப்புத் திட்டம் சம்பந்தமாக ஆராய மட்டக்களப்புக்கு வந்த இந்திய அதிகாரிகள் குழுவில், புதுடில்லியிலுள்ள இந்திய அயலுறவு அமைச்சின் மேலதிக செயலரும் நிதியியல் ஆலோசகருமான கலாநிதி சுமீத் ஜெராத் தலைமையில் அபிவிருத்தி மற்றும் கட்டுமானத் துறையின் ஆலோசகர் பங்கஸ் குமார் சிங், பதவி நிலைச் செயலர் கலாநிதி எம். சிவகுரு, கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்திப் பிரிவு கவுன்சிலர் டி.சி. மஞ்சுநாத், பொருளாதார வர்த்தகப் பிரிவு முதல் செயலாளர் சுஜா மேனன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

# அத்தியாவசியப் பொருள்களை நிவாரண விலையில் வழங்க நடமாடும் வாகன சேவை அறிமுகம்

கொழும்பு,ஜன.23

அத்தியாவசியப் பொருள்களை நிவாரண விலையில் வழங்குவதற்காக நடமாடும் வாகனசேவை நாடு முழுவதிலும். மேற்கொள்ளப்படவுள்ளதாக கூட்டுறவு மொத்த வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட்றிஸ்வான் ஹமீட் தெரிவித்தார்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் 100 நடமாடும் வாகன சேவைகள் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் இதில் நாடு முழுவதிலும் உள்ள 700 வாராந்த சந்தைகளை உள்ளடக்கியவகையில்முன்னெடுக்கப் படவுள்ளதாகவும், இந்தத் திட்டம் சிவில் படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்படுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கல்கமுவ தல பூட்டுவா யானை சுடப்பட்டமைதொடர்பில் கிராம அலுவலர் சேவை நிறுத்தம்

கல்கமுவ தல பூட்டுவா யானையை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் மூன்று கிராம அலுவலர்களின் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பொல்பிதிகம பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான ஹேரத்கம, மகுல்பொத மற்றும் தொரவெவ்ருவ பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர்களின் சேவையே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த கிராம அலுவலர்கள் தொடர்பில் நிறுவன மட்டத்தில் ஒழுக்காற்று விசாரணைகளும் இடம்பெறுகின்றன.

# கிழக்கு மாகாணத்துக்கு பயணமாகிறார் மகிந்த



முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கிழக்கு மாகாணத்துக்கானபயணத்தை இந்த மாத இறுதியில் மேற்கொள்ளவுள்ளார். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா பொதுஜன முன்னணி கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளருமான பீ.எச்.பியசனே நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெறவுள்ள தேர்தல் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். இந்த இரு கூட்டங்களிலும் அவர் தனது எதிர்கால அரசியல் தொடர்பில் உரையாற்றவுள்ளார்.

அன்றைய தினத்தில் சிறில்ங்கா பொதுஜன முன்னணிக் கட்சியின் அரசியல் தொடர்பான அறிக்கையையும் முன்னாள் அரச தலைவர் வெளியிடவுள்ளார் என்றும் பீ.எச். பியசனே தெரிவித்தார்.


# அரசதலைவர் ஆணைக்குழுவின் அறிக்கை திரிபுபடுத்தப்பட்டுள்ளது– ரவி கருணாநாயக்க

பிணைமுறி குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை திரிபுபடுத்தப்பட்டுள்ளது. அதன் உண்மைத் தன்மையை நாளை வெளிப்படுத்துவேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும்போது வீழ்ச்சியுற்றிருந்த பொருளாதாரமே நாட்டில் இருந்தது. இந்தப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாங்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். அதற்காகவே தேசிய அரசாங்கம் ஒன்றுக்கு நாங்கள் சென்றோம். இன்று நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து செல்வதாக ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சிப்பது எங்களுடன் இருப்பவர்களாகும்.

அரசாங்கத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இருக்கும் தயாசிறி ஜயசேகர, திலான் பெரேரா, ஜோன் செனவிரத்ன, சுசில் பிரேமஜயந்த, மகிந்த அமரவீர போன்றவர்கள் மகிந்த ராஜபக்சவுடனே இருந்தார்கள். அன்று நாட்டின் பொருளாதாரம் அடிமட்டத்தில் இருக்கும்போது இவர்கள் வாய்திறக்கவில்லை. ஆனால் இன்று அரசாங்கத்தில் இருந்துகொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சித்து வருகின்றனர். அரசாங்கத்துக்காக அர்ப்பணித்த எங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி வருகின்றமையே எமக்கு வேதனையாக இருக்கின்றது.

அத்துடன் கடந்த அரசாங்க காலத்தில் பல மில்லியன் ரூபாக்களை மோசடி செய்ததாக மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் முடிவுற்றதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு உறுதிப்பத்திரம் அளிக்கின்றது. இது நல்லாட்சியின் அடையாளமாக இருக்க முடியாது. அதேபோன்று மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை வெளிவந்துள்ளது. அதில் சொல்லப்பட்ட விடயங்கள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. எனவே மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாக பல விடயங்கள் அறிக்கையில் இருப்பதாகத் தெரிவித்து எங்களுக்கு சேறுபூசி வருகின்றனர். அதனால் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக நாளை விசேட உரையொன்றை மேற்கொண்டு அதன் உண்மைத் தன்மையை நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பேன் - என்றார்.



## மன். நானாட்டான் மகா வித்தியாலய மாணவன் தேசிய மட்டத்தில் சாதனை

மன்னார்,ஜன.23
அகில இலங்கை ரீதியில் கல்வி அமைச்சின் அனுசரணையின் பேரில் சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை நீரிழிவு சம்மேளனம் இணைந்து நடத்திய மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டியில் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலய மாணவன் ச.பிரியதர்சன் அகில இலங்கை ரீதியில் 3ஆம் இடத்தை பெற்று தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளார்.
கொழும்பு தாமரை தடாக ராஜபக்ச அரங்கில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் இவருக்கான விருது வழங்கி வைக்கப்பட்டது. (எ-4)

## வடக்கு ஆளுநரின் சகோதரர் காலமானார்


யாழ்ப்பாணம்,ஜன.23
வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயின் சகோதரர் சிரந்த விராஜ் குரே கடந்த சனிக்கிழமை காலமானார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கருணாகரன் நேற்று இந்தத் தகவலைத் தெரிவித்தார். (எ-50)

# ஓமந்தையில் காணி அனுமதியின்றி 145 குடும்பங்கள் அவதி

## ஆளணி இல்லை என்கிறார் செயலர்

வவுனியா, ஜன.23
வவுனியா ஓமந்தைப் பிரதேசத்தில் 145 குடும்பங்களுக்கு 40 வருடங்களாக காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என மக்கள் குற்றச்சாட்டுகின்றனர்.முன்னர் விடுதலைப்புலிகள் சோதனைச்சாவடிகளை அமைத்திருந்த ஓமந்தை புதியவேலன் சின்னக்குளம் சூனியப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்களுக்கேஇவ்வாறு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

இப்பகுதியில் கடந்த 1977ஆம் ஆண்டு நிரந்தரக்குடியிருப்பாளர்களாக ஒரு ஏக்கர் காணியில் மக்கள் குடியேறினர். ஆனால் இன்றுவரையில் இக்குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. கடந்த போர்க்காலத்தில் இந்தமக்கள் மூன்று தடவைகள் இடப்பெயர்வைச் சந்தித்தனர். கடந்த 2011ஆம் ஆண்டு மீண்டும்இங்குமீள்குடியேறினர். மீள்குடியேறிய மக்கள் காணி அனுமதி இல்லாமல் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.
இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
50 குடும்பங்கே வீட்டுத்திட்டம் கிடைக்க ப் பெற்றுள்ளது. ஏனையவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதற்கhன எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஏனையவர்கள் தற்காலிக வீடுகளிலேயே வசித்து வருகின்றனர். குடியிருக்கும் காணியின் ஆவணம் இல்லாத காரணத்தினால் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. காணியை உறுதிப்படுத்தவதுக்கு ஒரு கைத்துண்டு மட்டுமே உள்ளது. உதவித்திட்டங்களைப் பெற்றுக்கொள்வதுக்கு இக் கைத்துண்டைக் கொண்டுசென்றால் அது செல்லுபடியற்றது எனத் தட்டிக்கழிக்கப்படுகின்றது.
வவுனியா மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் எனப்பலரிடம் மனுக்கள் கையளிக்கப்பட்டபோதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்தவருடம் வவுனியா நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வுக்கு வருகை தந்த அரசதலைவரின் கவனத்துக்கும் கொண்டுசென்றோம். எவ்வித பயனுமில்லை என்று ஆதங்கத்துடன் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
இதுதொடர்பாக வவுனியா பிரதேச செலயாளர் கா.உதயராசாவிடம் தொடர்புகொண்டு கேட்டபோது:
இப்பகுதி மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எங்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும், மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தில் குடியேற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்ளுக்கு ஆளணிப்பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்றார். (ய)



பாக்கியம் அறக்கட்டளை நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் ஓமந்தை மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. திருமதி நல்லதம்பி பாக்கியத்தின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பாக்கியம் அறக்கட்டளை நிறுவனம் ஓமந்தையை அண்மித்துள்ள கிராமப்புற மக்களுக்குக் கண்பரிசோதனை, நீரிழிவு நோய், உயர்குருதிஅழுத்தம், காசநோய், சிறுநீரகநோய், தோல் நோய்கள் தொடர்பான இலவசமருத்துவ பரிசோதனைகள் வழங்கப்பட்டன. இதில் 350க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,402)

# குப்பைமேட்டில் தீ மன்னார் சாலையில் பெரும் புகைமண்டலம்

மன்னார், ஜன.23
மன்னார் பொது மயானத்தின் பின் பகுதியில் குவித்து வைக்கப்பட்டிருந்த குப்பைமீது தீ பரவியதால் நேற்றுமுந்தினம் மாலை முதன்மைச் சாலையூடான போக்குவரத்து நீண்டநேரம் பாதிக்கப்பட்டது. அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.
மன்னார் தலைமன்னார் முதன்மைச் சாலையில் பொது மயானத்துக்குப் பின் பகுதியில் நகரசபையால் சேகரிக்கப்படும் கழிவுகள் கொட்டப்படுகின்றன. இந்தக் கழிவுப்பொருள்கள் மீது நேற்றுமுன்தினம் மாலை திடீர் என தீ பரவியது. குவிக்கப்பட்டிருந்த குப்பைகள் எரியத் தொடங்கியதும் அப்பகுதி பாரிய புகை மண்டலமாக காணப்பட்டது.
இதனால் போக்குவரத்து நீண்டநேரமாகப் பாதிப்படைந்தது. அப்பகுதியில் வசித்துவரும் மக்கள் மூச்சுத்திண றலுக்கு உள்ளாகினர்.

இரும்புகளை எடுப்பதுக் கு சில சிறுவர்கள் முயற்சி செய்தனர் என்றும், அவர்கள் பற்ற வைத்த தீயே குப்பை மேட்டில் பரவியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் என அனைவரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.
பின்னர் இவ்விடயம் மன்னார் நகரசபை செயலாளரின்கவனத்துக்குகொண்டு செல்லப்பட்டது. உடனடியாக பௌசர் மூலம் நீர் கொண்டுசெல்லப்பட்டு தீ அணைக்கப்பட்டது.
குப்பைகளில் காணப்பட்ட இரும்புகளைஎடுப்பதுக்கு சில சிறுவர்கள் முயற்சி செய்தனர் என்றும், அவர்கள் பற்றவைத்த தீயே குப்பைமேட்டில் பரவியது என்றும்நகரசபை செயலாளர் தெரிவித்தார். (ய-56)

# வவுனியா பேருந்துநிலையத்தில் குழாய்க்கிணறு சீரமைக்கப்படும்

வவுனியா, ஜன.23
வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு அண்மையில் காணப்படும் பாவனைக்குதவாத குழாய்க்கிணறு திருத்தி மக்கள் பாவனைக்கு விடப்படும் என நகரசபை செயலாளர் ஆர்.தயாபரன் தெரிவித்தார்.
புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் காணப்படும் குளாய்க்கிணறு நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. அப்பகுதியில் கால்வாய் அமைக்கும் போது குளாய்க்கிணறு கீழிறங்கியது. இதுதொடர்பாக பயணிகள் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.
இதுதொடர்பாக நகரசபைச் செயலாளர் தெரிவித்ததாவது:
குளாய்க்கிணறு பழுதடைந்த விடயம் தொடர்பாக நகரசபைக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. தற்போது அப்பகுதியில் பேருந்து நிலையம் செயல்பட்டு வருகின்றது. பொதுமக்களின் தேவைகருதி குளாய்க்கிணற்றைத் திருத்தி அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ய-4)

# ஐயனார்புரம் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள்



கிளிநொச்சி, ஜன.23
ஆரோகணம் சிறுவர் இல்லப் பொறுப்பாளர் அருட்பணி யூட் அமலதாஸின் வேண்டுகோளுக்கிணங்க, கனேடிய அமைப்பொன்றின் உதவும் கரங்கள் திட்டத்தின் கீழ் வன்னேரிக்குளம் ஐயனார்புரம் அ.த.க. பாடசாலைக்கு சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் கனடாவிலிருந்து வருகைதந்த அருட்பணி யூட் நிக்சன், ஓய்வுநிலை அதிபர் இராஜேந்திரம் கணபதி மற்றும் பாடசாலை அதிபர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ய)

# தேர்தல் விழிப்புணர்வுச் செயலமர்வு

வவுனியா, ஜன.23
சமூகத்துக்கு உகந்த அரசியல் தலைவர்களை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளிலான அறிவூட்டல் செயலமர்வொன்று வவுனியாவில் சனிக்கிழமை இடம்பெற்றது.
இளைஞர் காப்பகம் தன்னார்வு தொண்டர் அமைப்பு, தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம், வவுனியா மாவட்ட தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம், அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு ஆகியவற்றின் உதவியுடன் உக்கிளாங்குளம் கனறா முன்பள்ளி மண்டபத்தில் செயலமர்வு நடைபெற்றது.
உள்ளூராட்சி தேர்தல் பற்றிய தெளிவான பார்வை பெறவும்,சமூகநலன் முன்னேற்றத்தை கருத்தில்கொண்டு வன்முறையற்ற அமைதியான தேர்தலை இலக்காகக்கொண்டும்




இடம்பெற்ற செயலமர்வுக்கு வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலயப் பங்குத்தந்தை லக்சன் டீ சில்வா தலைமை தாங்கினார். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்துகொண்டனர். (ய-4)

# கிளிநொச்சியில் அதிகாரிகளால் கவனிக்கப்படாத இராதா பாலம்

கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இருந்து பன்னங்கண்டிக்குச் செல்லும் வழியில் (எமர்சன் சாலை) இருக்கும் இராதா பாலம் இன்னமும் சீரமைக்கப் பட வில்லை. அதிகாரிகள் அசட்டையாக இருக்கின்றனர் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.பாலத்தின் இருபுறமும் உடைந்து சேதமடைந்த நிலையில் நடுவில் பெரிய பள்ளங்களும் காணப்படுகிறன. மழைகாலத்தில் ஆறு நிரம்பி வழிவதுண்டு. இதுகுறித்து ஊடகங்கள் மூலம் பலதடவைகள் சுட்டிக்காட்டியும் பயனில்லை என்றும் குறிப்பிட்டனர்.





இப்போது நெல் அறுவடைக்காலம் தொடங்கி விட்டது. அரிவிவெட்டும் இயந்தி ரங்களும், உழவியந்திரங்களும், நெல்மூ டைகளை ஏற்றிய லொறிகளும் இச்சாலை யூடாக அடிக்கடி சென்றுவருகின்றன. இந் தப் பாலத்தின்மீது பயணிக்கையில் அச்சம் ஏற்படுகின்றது என்று வாகனச் சாரதிகள் குறிப்பிடுகின்றனர்.

நெல்மூடைகளை ஏற்றிவரும் வாகனங் கள் பள்ளத்தில் தாழ்ந்து எழுந்து மிகுந்த பிரயத்தனங்களுக்கு மத்தியிலேயே செல் லவேண்டும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் வாகனங்கள் சரிந்தால் பாலத்திலிருந்து கீழே ஆற்றுக்குள் விழுந்து பாரிய விபத்து ஏற்பட நேரும்.

அண்மையில் இவ்விடத்தில் மிதிவண்டி யில் வந்த ஒருவரை நாய்கள் துரத்தின. நாய்களிடமிருந்து தப்புவதுக்காக வேகமா கப் பயணித்த அவர் நிலை தடுமாறி பாலத் துக்கு கீழே விழுந்தார். இதுவே மோட்டார் சைக்கிளாக இருந்திருந்தால் விளைவு பாரதூராக இருந்திருக்கும்.

அண்மையில் வட்டக்கச்சி பன்னங்கண்டி பகுதி பாலத்தில் விபத்தில் சிக்கிய இளைஞர் ஒருவர் ஆற்றுக்குள் விழுந்து உயிரிழந் தார். பாலத்துக்கு அருகில் ஆற்றில் விழுந்த அவரால் எழுந்திருக்க முடியாத நிலையில் தண்ணீருக்குள் அமிழ்ந்து உயிரிழந்தார். எனவே. இந்தப்பாலத்திலும் அவ்வாறான அசம்பாவிதம் ஒன்று ஏற்படுவதுக்கு முன் னர் இதனை சீரமைக்குமாறு பொதுமக் கள் கோருகின்றனர்.

இவ்விடத்தில் அண்மையில் மின்விளக்கு ஒன்று பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ய)





விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் மன்னார் உட்பட பல மாவட்டங்களில் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் உறவுப்பாலம் நிகழ்ச் சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட் டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் முன்னெ டுக்கப் பட்ட நான்குநாள் நிகழ்வில் பங்குபற்றியவர்களைப் படத்தில் காணலாம். (ய)

## பளையில் தாக்குதல் முயற்சி

கிளிநொச்சி, ஜன.23

பளை கச்சார்வெளி பகு தியில் கடந்தவாரம் இரு வர்மீது தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடுசெய்யப்பட்டுள்ளது. சம்பவதினம் இரவு மேற் படி இருவரும் பளையில் இருந்து கச்சார்வெளி யில் உள்ள தமது வீட் டுக்கு மோட்டார் சைக்கி ளில் சென்றுகொண்டி ருந்தனர். அப்போது மகேந்திரா ரக வாகனத் தில் வந்த இனந்தெரி யாத நபர்கள் இவர்களை தாக்க முற்பட்டு, பொல்லு களால் ஏறிந்துள்ளனர். எனினும் அவர்கள் சுதா கரித்துக் கொண்டுள்ள னர். இதற்கிடையில் சந் தேகநபர்கள் வாக னத்தை எடுத்துக் கொண்டு யாழ்ப்பா ணத்தை நோக்கிச் சென் றுவிட்டனர் என முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளது. சந்தேகத்துக்கிட மான ' வாகனத்தின் இலக்கமும் பொலிஸாரி டம் கொடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக பளை பொலிஸ் நிலையத்தில் கேட்டபோது:

வாகன இலக்கத்தைப் பரிசோதனை செய்த போது அவ்வாறான இலக்கத்தில் வாகனங் கள் எவையும் பதிவுசெய் யப்படவில்லை என அறி விக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ச்சியான விசார ணைகள் முன்னெ டுக் கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட் டது. (ய-6)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி.ஜன.23

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் சிறுவர் கழகங்களுக்கிடையில் கடந்த வருடம் நடத்தப்பட்ட சிறுவர் கெக்குளு கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்க ளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப் பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 10 மணிக்கு நடை பெறுமென மாவட்ட சமுர்த் தித் ஆணையாளர் க. மகேஸ்வரன் அறிவித்துள் ளார்.

மாவட்டச் செயலர் தலை மையில் நடைபெறும் நிகழ் வில் சமுர்த்தி கெக்குளு சிறுவர் கழகங்களுக்கி டையே நடத்தப்பட்ட பாட்டு, பேச்சு, ஓவியம், நாட்டார் பாடல், சிறுவர் கதை, அறி விப்பாளர், செய்யுள், உறையுள் ஆகிய போட்டிக ளில் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்ற 25 சிறு வர்களுக்கும் மற்றும் தேசிய நிலையில் கிராமிய நடனம், கிராமியப் பாடல், அறிவிப்பாளர், நாடகம், பேச்சு, ஓவியம், சிறுவர் கதை, செய்யுள் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் பணப்பரி சில்களும் வழங்கப்படும்.

நிகழ்வில் பிரதேச செயலர் கள், உதவிப் பிரதேச செய லர்கள்;, கணக்காளர்கள், பிரதி உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் ஆகி யோரைக் கலந்து கொள்ளு மாறும் அறிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதே சத் தைச் சேர்ந்த த.சிவசுயன் ஓவியப்போட்டியிலும் வி.பிரவீன், த.தாரணி ஆகி யோர் சிறுவர் கதை போட் டியிலும் வெற்றி பெற்றுள்ள னர் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது. (எ-9)

## மணல் ஏற்றிய இரு உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டன

கிளிநொச்சி.ஜன.23

பளை-முகமாலைப் பகு தியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு உழவியந்திரங்கள் நேற்றுமுன்தினம் கைப் பற்றப்பட்டுள்ளன என பளைப் பொலிஸ் நிலை யத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

கிளிநொச்சி மாவட்டத் தின் பளை பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இரண்டு உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது டன் அவற்றைச் செலுத் திய வாகனச் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ள னர். அவர்களிடம் விசா ரணைகள் மேற்கொள் ளப்பட்டு பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள் ளது. இவர்களை நீதி மன்றில் முற்படுத்துவ தற்கான நடவடிக்கை யும் எடுக்கப்பட்டுள்ளது என பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரி விக்கின்றன. (எ-6)

## கொட்டிலில் வாழ்ந்த குடும்பத்துக்கு வீடு

### பொலிஸ்மா அதிபர் கையளிப்பு

முல்லைத்தீவு. ஜன.23

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் தற்காலிக கொட்டிலில் வசித்து வந்த வறுமைக்கோட்டுக்கு உட் பட்ட குடும்பம் ஒன்றுக்கு சுமார் 10 லட்சம் ரூபா பெறு மதியான வீடு ஒன்று அமைக்கப்பட்டு பொலிஸ்மா அதிபரால் கையளிக்கப்பட் டது.



புதுக்குடியிருப்பு பொலிஸா ரின் நடமாடும் சேவைமூ லம் இந்தக் குடும்பம் இனம் காணப்பட்டது. பொலிஸ் திணைக்களம் வீடு கட்டிக் கொடுப்பதுக்கு முன்வந்தது. பத்துலட்சத்துக்கும் அதிக பெறுமதிகொண்ட இந்தவீடு சனிக்கிழமை பெலிஸ்மா அதிபர் பூஜித்ஜெயசுந்தரவினால் கையளிக்கப்பட் டது. இந்த நிகழ்வின் போது சில குடும்பங்களுக்கு உலருணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

வள்ளிபுனம் கிராமத்தில் தற்காலிக கொட்டிலில் பிள் ளைகளுடன் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வசித்துவரும் அன்ரனிதாஸ் என்ற வயோதிபரின் குடும்பத்துக்கே வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டது. (ய-ரி3)

## இராமநாதபுரத்தில் கசிப்பு உற்பத்தி ஆறு பேர் கைது

கிளிநொச்சி. ஜன.23

இராமநாதபுரம் சம்புக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை இடப் பட்டு 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர் என பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித் தார்.

கடந்த வெள்ளிக்கிழமை தகவல் ஒன்றுக் கமைய சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த பகுதியில் இரு கசிப்பு உற்பத்தி நிலையங்களை சுற்றிவளைத்தனர். சந் தேகத்தின்பேரில 6 பேரைக் கைது செய்த னர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து 48 போத்தல் கசிப்பு மற்றும் கோடா. கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் மற்றும் மூன்று மோட்டார் சைக்கில்களையும் கைப்பற்றி னர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் கள் சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-6)

## குடாநாட்டில் வெங்காய பூவுக்கு மவுசு

யாழ்ப்பாணம்.ஜன.23
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயப் பூவுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்தே குடாநாட்டின் முதன்மைச் சந்தைகளுக்கு வெங்காயப் பூக்கள் அதிகளவில் எடுத்து வரப்படுகின்றன.

குறிப்பாக திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் ஆகிய சந்தைகளுக்கு இந்த வெங்காயப் பூக்கள் கட்டுகட்டாக வந்து சேர்கின்றன. அவை கிலோ 200 ரூபாவாக விற்கப்படுவதோடு சில மணி நேரங்களில் விற்றுத் தீர்ந்தும் விடுகின்றன. (எ-17)

வடமாகாண

## போக்குவரத்துக் கட்டணங்களை மீள்பரிசீலனை செய்யுமாறு மாகாண சபையில் முன்மொழிவு

யாழ்ப்பாணம்.ஜன.23
வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளில், அதிகார சபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் இதுவரை தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் பெறப்பட்ட கட்டணங்களை விடப் பன்மடங்கு அதிகமாக காணப்படுகிறது. அதனைச் சீர் செய்து மீளவும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுகோரி வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் பிரேரணை முன்மொழியப்படவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா இதனை முன்மொழியவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தனது பிரேரணை தொடர்பாகத் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரனால் கடந்த வருட மே மாதம் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட 2019ஃ5 ஆம் இலக்க வர்த்தமானிக்கான பிரேரணைவடக்குமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளில் அதிகார சபையால் நடைமுறையில் ஒரு கட்டணம் உள்ளது.

ஆனால் நிரல்படுத்தப்பட்டு இருக்கும் கட்டணங்கள் இதுவரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் பெறப்பட்ட கட்டணங்களை விடப் பன்மடங்கு அதிகமாகவும், மாவட்டங்களுக்கு இடையில் முரண்பட்ட கட்டணங்களாகவும் உள்ளன. அவற்றை சீர் செய்து மீளவும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சரும், நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத் மற்றும் போக்குவரத்து அமைச்சை இந்த சபை கோருகின்றனர்என்றுதனது பிரேரணையை முன்மொழியவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-4-8)

அரச உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயணத்துக்கு

# ஒரு வாரத்துக்கு முன்னரே ஆளுநரின் அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்.ஜன.23
வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு விடுமுறைக்காக விண்ணப்பிக்கும்போது விண்ணப்பங்களை ஆளுநரின் அனுமதி பெறுவதற்காக ஒரு வாரத்துக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அமைச்சுக்களுக்கு ஆளுனர் செயலகத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள அதிகளவான உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு விடுமுறைகள் பெற்றுச் செல்கின்றனர்.

சில அதிகாரிகள் ஏற்கனவே திட்டமிட்ட நிகழ்ச்சிகளுக்கு செல்வதற்காக விடுமுறை பெறுகின்றனர். இந்த விடுமுறைகள் தொடர்பில் ஆளுனரின் அனுமதி பெறப்பட்டு வருகின்றது. அதிகாரிகள் விடுமுறைக்கு விண்ணப்பிக்கும் காலம் குறுகியதாகக் காணப்படுகின்றது.

வெளிநாடுசெல்வதற்காகவிண்ணப்பிக்கின்றனர். எனினும் அதற்கான அனுமதி கிடைப்பதற்கு முன்னரே அவர்கள் தேவையின் நிமித்தம் சென்று விடுவார்கள். இதனால் பல சிக்கல் நிலைமை தோன்றுகின்றது. விடுமுறைக்கான அனுமதி ஒரு வார காலத்துக்கு முன்னர் செயலகத்துக்கு கிடைத்தால்தான் பதில் கடமை உத்தியோகத்தர்களை நியமிக்கலாம். வெளிநாட்டு விடுமுறைக்காக சரியான காரணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

ஆகவே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு விடுமுறை அனுமதி தொடர்பில் அவர்களின் திணைக்களங்கள், அமைச்சுகளுக்கு முற்கூட்டியே தெரியப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு விடுமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.23
வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மகா சிவராத்திரி புண்ணிய தினத்தன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டிலும் சிவராத்திரி தினத்துக்கு வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சால் விடுமுறை வழங்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கான கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அங்கிகரிக்கப்பட்ட விடுமுறை நாள்களை வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் விடுமுறை நாள்கள் வருமாறு:

தைப்பொங்கல் தேசிய தினம், சிங்கள தமிழ் புதுவருடத்துக்கு முன்தினம், சிங்கள தமிழ் புதுவருடம், மே தினம், வெசாக் பூரணை தினத்துக்கு மறுதினம், மிளாதுன் நபிகள் நாயகம் பிறந்ததினம், நோன்பு பெருநாள், நத்தார் தினம், ஒவ்வொரு மாதங்களிலும் வரும் பூரணை தினம், மகா சிவராத்திரி, ஹஜ்ஜிப் பெருநாள், தீபாவளி விடுமுறை, பெரிய வெள்ளி போன்றன கூட்டுறவாளர் தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (எ-17)

யாழ்.பல்கலைக்கழகத்தின்

## பன்னாட்டு சித்த மருத்துவ கண்காட்சியும் மாநாடும்

யாழ்ப்பாணம்.ஜன.23
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவப்பிரிவின் பன்னாட்டு சித்த மருத்துவக் கண்காட்சி மற்றும் மாநாட்டு நிகழ்வில் தமிழ்நாட்டு சித்த மருத்துவத்துறை சார்ந்தவர்களும் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கண்காட்சியும் மாநாடும் கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவ வளாகத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி தொடர்ச்சியாக நான்கு நாள்கள் நடைபெறவுள்ளது. இதில் 9 மாகாண சபைகளின் கீழ் உள்ள சித்த மருத்துவத் துறை சார்ந்தவர்களின் காட்சிக் கூடங்கள் அமையவுள்ளன. துறை சார்ந்த மருத்துவ விரிவுரைகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் மூலிகைச்செடிகள், மருத்துவ முறைகள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன. நிகழ்வில் இந்தியாவின் தமிழ் நாட்டைச் சேர்ந்த துறைசார்ந்தவர்களும் பங்குபற்றவுள்ளனர். வர்மம், யோகா போன்ற கலைகளுக்கான பயிற்சிப் பட்டறையும் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## திருட்டுக் குற்றச்சாட்டு 4 மாணவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.23
கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆய்வு கூடத்தில் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 மாணவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த பொங்கல் தினத்தன்று பகல் ஆய்வு கூடத்தை உடைத்து சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸாரின் உதவியுடன் விசாரணை நடத்தப்பட்டது.

அந்தச் சுற்றாடலை அண்மித்திருந்த வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி கமராவில் களவாடியவர்கள் அகப்பட்டனர்.

அந்த ஆதாரத்தின் அடிப்படையில் அதே கல்லூரியின் 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் கடந்த வியாழக்கிழமை அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களை 7 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (எ-4)

ஆசிரியரைத் தாக்கினரென

# கிளி. ஆறு மாணவர்கள் சீர்திருத்தப் பள்ளியில்

யாழ்ப்பாணம், ஜன. 23
கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் ஆசிரியரைக் கதிரையால் தாக்கி காயப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் 6 மாணவர்களையும் சீர்திருத்தப் பள்ளியில் தடுத்து வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த புதன்கிழமை உயர்தர மாணவன் பாடவேளையில் வகுப்பறைக்கு வெளியில் சக மாணவன் ஒருவனுடன் உரையாடிய வேளையில், ஆசிரியர் 'விரைவில் வகுப்புக்குச் செல், அல்லது அடிவாங்குவாய்' என எச்சரித்தார். ஆசிரியருடன் மாணவன் முரண்பட்டான். மாணவனுக்கு ஆசிரியர் கையால் அடித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சக ஆசிரியர்கள் மாணவனுக்கு அறிவுரை கூறி விடயம் முடிவுறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் மதியம் ஒரு மணியளவில் சக ஆசிரியர்களுடன் இருந்த ஆசிரியரை ஆறுமாணவர்கள் இணைந்து கதிரைகளால் தாக்கியுள்ளனர். 6 கதிரைகளும் உடைந்து நொருங்கியுள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தலையில் 4 இழை போடப்பட்டது. தொடர்ந்து இன்றுவரை மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த விடயம் கிளிநொச்சி பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் ஆறு மாணவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். உடனடியாகவே பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கிளிநொச்சி நீதிமன்றில் அவர்கள் நேற்று முற்படுத்தப்பட்டனர். வழக்கை ஆராய்ந்த பதில் நீதிவான் சிவபாதசுப்பிரமணியம் ஆறு மாணவர்களையும் சீர் திருத்தப்பள்ளியில் இணைக்குமாறு உத்தரவிட்டார். இந்த வழக்கு எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த 6 மாணவர்களில் மூவர் ஏற்கனவே சீர் திருத்தப்பள்ளியில் இருந்து வெளியேறியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-4)

## கிவுள் ஓயா திட்டத்தை நிறுத்தக்கோரி பிரேரணை

### உறுப்பினர் ரவிகரன் முன்மொழிவு

யாழ்ப்பாணம்.ஜன.23
முல்லைத்தீவு மாவட்டத்தில் கிவுள் ஓயாத் திட்டம் என்ற பெயரில் இடம் பெறும் சிங்கள மயமாக்கல் நடவடிக்கையை உடனடியாக தடுத்து நிறுத்தக் கோரி வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் எதிர்வரும் வியாழக் கி ழமை இடம்பெறவுள்ள மாகாண சபை அமர்வில் பிரேரணை ஒன்றை கொண்டுவரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக தெரியவருவதாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிவுள் ஓயாத் திட்டம் என்ற பெயரில் சிங்கள மயமாக்கல் நடவடிக்கை துரித கதியில் நடைபெற்று வருகின்றது. இந்த நடவடிக்கைகள் தொடர்பான ஆதாரங்களை சபையின் கவனத்துக்கு கொண்டு வருவதுடன் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை உடனடியாகஎடுக்கவேண்டும்என தனது பிரேரணையை முன்மொழியவுள்ளார்என தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி எல் வலயம் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணியில் கிவுள் ஓயா என்ற பெயரில் ஆயிரம் மில்லியன் ரூபாயில் 6 ஆயிரம் ஏக்கர் நிலப்ப ரப்புக்கு நீரை வழங்கக்கூடிய வகையில்அங்குள்ளசிங்கள மக்களுக்காக அபிவிருத்தி திட்ட வேலைகள் இடம் பெற்று வருகின்றன என குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## இந்.வர்த்தக சந்தையில் கலந்து கொள்ளும் பெண்ணுக்கு உதவி

வவுனியா.ஜன.23
இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் இடம்பெறவுள்ள வர்த்தக சந்தையில் கலந்துகொள்வதற்காக வவுனியா பெண் தலைமை தாங்கும் குடும்பப்பெண் ஒருவருக்கு பணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா திருநாவற்குளம் அற்றலரசி பனையோலை உற்பத்தி குழுவின் சார்பாக கலந்துகொள்ளும் ஐந்து பிள்ளைகளின் தாயாரான காஞ்சனா மகேந்திரன் என்பருக்கு வவுனியா வர்த்தகர் சங்கத்தலைவர் தலைமையில் வர்த்தகப் பிரமுகர்களால் ஒரு தொகைப்பணம் வவுனியாவாடிவீட்டில் வைத்து நேற்று வழங்கிவைக்கப்பட்டது.

குறித்த பெண்மணி வெளிநாட்டு வர்த்தக சந்தையில் கலந்துகொள்வதற்கு விமானப் பயணச்சீட்டின் 50வீதத்தொகையான 45ஆயிரம ரூபாவை செலுத்தவேண்டும் என்பதால் அந்தப்பணத்தைப் பெற்றுக்கொள்வதில் பலரிடம் உதவி கோரியுள்ளார்.

அதையடுத்து வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினூடாக ஒரு தொகைப் பணம் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது.

வவுனியா வர்த்தகப்பிரமுகர்கள் ஒன்றிணைந்து மிகுதிப்பணத்தை வழங்கி வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

### தமிழ் பெண் அதிபரை

# முழந்தாளிடச் செய்த முதலமைச்சரை அரசியலில் இருந்து அகற்ற வேண்டும்

## இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் காட்டமான கோரிக்கை!

பதுளை,ஜன.23
பதுளை தமிழ் மகாவித்தியாலய அதிபர் ஆர்.பவானியை முழந்தாளிடச் செய்த ஊவா மாகாண முதலமைச்சரை அரசியல் அரங்கில் இருந்து அகற்ற வேண்டும். அதற்குக் காரணமான ஊவாமாகாண கல்வி அமைச்சின் செயலாளரையும், மாகாணக் கல்விப் பணிப்பாளரையும் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என அரசதலைவரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வினயத்துடன் கேட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

காலம் காலமாக தமிழ்பேசும் அதிபர்களும் ஆசிரியர்களும் பெரும்பான்மை இனம் சார்ந்த அரசியல்வாதிகளால் அடக்கப்பட்டே வருகின்றனர். அதன் உச்சக்கட்டமாக பதுளை தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஆர்.பவானி ஊவா மாகாண முதலமைச்சரால் முழந்தாளிடப் பணிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டுள்ளார்.

கைகூப்பி வணங்கும் தெய்வங்களாக மதிக்கப்படவேண்டிய அதிபர், ஆசிரியர்களை மதிக்காமல் காட்டுமிராண்டித்தனமாக நடந்துள்ளவர்களை அரசியல் அரங்கில் இருந்து முற்றாக வெளியேற்ற வேண்டும்.

தமிழர்கள் என்றால் எதையும் செய்யச் சொல்லலாம் என்ற எண்ணம் பெரும்பான்மை இனம் சார்ந்த உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களிடம் இருப்பதையே முதலமைச்சரின் இந்த நடவடிக்கை வெளிப்படுத்தியுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மத்திய கல்வி அமைச்சின் சுற்றறிக்கையைப் பின்பற்றிய அதிபருக்கு இவ்வாறு தண்டனை வழங்கியிருப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். ஆகையால் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் அதிபர்களும், ஆசிரியர்களும் அரசியல் சார்ந்த எவரையும் மதிக்கமுடியாத நிலை ஏற்படும். அத்துடன் குறித்த அதிபரிடம் முதலமைச்சர் மன்னிப்புக் கோர வேண்டும்-என்றுள்ளது. (எ-4)

## மண்அணை அகழப்பட்டுள்ளது பொலிஸில் முறைப்பாடு

தென்மராட்சி.ஜன.23
தென்மராட்சி மேற்கு தனன்களப்பு அம்மன் கோவிலுக்கு அருகில் கடலேரி நீர், குடியிருப்புக்குள் வராமல் தடுப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மண் அணையை வாகனங்களில் வந்தவர்கள் அள்ளிச் சென்றுள்ளனர் என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

உழவு இயந்திரங்கள், டிப்பர்கள் மற்றும் ஜேசீபி வாகனங்களில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வந்தவர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த மண் அணையை வெட்டி ஏற்றிச் சென்றுள்ளனர். மறுநாள் காலையில் அவதானித்த மக்கள் இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அங்கு வந்த பொலிஸார் இடத்தைப் பார்வையிட்ட பின்னர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## வழிகாட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜன.23
அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 2018ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்குஇடம்பெறவுள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்துப் பரீட்சார்த்திகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் எஸ்.ரி. குமரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்களும் பிரதி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 1மணி வரை மேற்குறித்த பாடசாலையில் இடம்பெறும். வழிகாட்டல் வகுப்பில் இலக்கணம், சாத்திரம், உரை நடை, இலக்கியம், வரலாறு ஆகிய ஐந்து பாடங்கள் இளஞ் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுவோர் என இரு பிரிவாக இடம்பெறவுள்ளன. பரீட்சை சித்திரை மாதம் 3ஆவது வாரத்தில் இடம்பெறும்- என்றார். (எ-4)

## பொலிஸ் நிலையத்தில் நஞ்சருந்திய நபர்

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் வைத்து நஞ்சருந்திய நபர் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலைய வட்டாரங்களை வினவிய பொழுது, குறித்த சம்பவம் இடம்பெற்றதை உறுதிப்படுத்தினர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், பொலிஸ் நிலையத்தில் வேலை செய்கின்ற பெண் பொலிஸ் கொஸ்தாபல் ஒருவருடைய கணவன் பகல் அவருடன் வந்து உரையாடினார். பின் திடீரென அவர் நஞ்சு அருந்தினார். அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதற்கு குடும்பத்தகறாரே காரணம் என அவர்கள் தெரிவித்தனர். (எ-4)

## வவுனியாவில் பொலிஸ் கீதம் தமிழில் வெளியிட்டு வைப்பு



வவுனியா.ஜன.23
வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழிகாட்டலில் இலங்கை பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவினால் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலய சமாதான விகாரையில் வைத்து பொலிஸ் கீதம் முதன்முறையாக நேற்றுக் காலை தமிழ் மொழியில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், வடக்கு மாகாண மூத்த பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னன்டோ, வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பாதிகாரி, மற்றும் பொலிஸ் அதிகாரிகள், எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பொலிஸ் கீதத்தைத் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பு செய்த பொலிஸ் உத்தியோகத்தர் எம்.என்.ஜெயப்பிரகாஷ், இசையமைப்பு கந்தப்பு ஜெயந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். நிகழ்வில் தமிழ்கீதம் பொலிஸ் நிகழ்வுகளில் இனிவரும் காலங்களில் தமிழ் மொழியில் ஒலிபரப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-4)



இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களது நடிப்பில் உருவான சீதா சுயம்வரம் என்ற நாட்டிய நாடகம் இந்தியாவின் கோயம்புத்தூரில் கடந்த மாத இறுதியில் இடம்பெற்ற கலைச் சங்கமம் நிகழ்வில் மேடையேற்றப்பட்டது. அது அங்கு பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. இணுவில் மத்திய கல்லூரியின் ஆசிரியை சோபனா சுதாகரனின் நெறியாள்கையிலும், கிருஸ்ணபிள்ளை சுதாகரன், மகாலஸ்மி ஜெயநாதன் ஆகியோரது வாய்ப்பாட்டிசையிலும், இணுவையூர் பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளையின் எழுத்துருவாக்கத்திலும் இது மேடையேற்றப்பட்டது. (4)

## நூல் கொள்வனவுக்கு விண்ணப்பம் கோரல்

அச்சுவேலி.ஜன.23
நடுவண் அரசின் கலாசார அலுவல்கள் திணைக்களம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் வெளியிட்ட நூல்களை கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இலக்கிய படைப்புக்கள், சிறுவர் இலக்கியம் மற்றும் விமர்சன நூல்கள், நடனக்கலை, சங்கீதம், சமயம், சித்திரக்கலை, ஊடகத்துறை தொடர்பாடல், கல்வி தொடர்பான நூல்கள், பாரம்பரிய ஆய்வு வழக்காறு மற்றும் பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கிய துறைசார் நூல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட நூல்கள் 2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் உட்பட்ட முதலாவது பதிப்பாக இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நூல் கொள்வனவு தொடர்பான விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களில் பணியில் இருக்கும் நடுவர் அரசு கலாசார அலுவலர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

முழுமைப்படுத்திய விண்ணப்பங்களை 'பணிப்பாளர், கலாசார அலுவலர்கள் திணைக்களம், 8ஆம் மாடி செத்சிரிபாய, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)





# சமாதான ஆர்வலர்களுக்கு இந்த ஆண்டு சவாலானது

## தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.23

அரசியல் ரீதியான மாற்றங்கள் வரும் என எதிர்பார்த்திருக்கின்ற இந்த வேளையில் சமாதானத்துக்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற ஆர்வலர்களுக்கு இந்த ஆண்டு சவால் நிறைந்த ஒன்றாக இருக்கப்போகின்றது என தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் விஜயநாதன் துஷாந்த்ரா தெரிவித்தார்.

மட்டக்களப்பு கிறீன் கார்டன் விடுதியில் நேற்று இடம்பெற்ற சர்வ மதப் பேரவை உறுப்பினர்களின் மாதாந்த செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எதிர்வரும் மாகாண சபை மற்றும் பொதுத் தேர்தலும் சமாதான செயற்பாட்டுக்கு எவ்வாறு சாதமாக இருக்கப் போகின்றன? இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளிலும் இனவாதச் சிந்தனைகளை விதைத்தே ஆட்சி கைப்பற்றப்படும் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பல நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான கருவியர்க இனவாதம் பயன்படுத்தப்படுகின்றது. சமாதான செயற்பாட்டாளர்களுக்குச் சவாலான இந்தஆண்டில் சமாதான ஆர்வலர்களின் பங்களிப்பு மிக முக்கியம். நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக இன்னும் இன்னும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியிருக்கின்றது- என்றார்.

தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வமதப் பேரவைக்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இராசையா மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ பௌத்த சமயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகவாழ்வும் இன ஐக்கியத்துக்குமான சர்வமத ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (ற-ரி5)

### எரிவாயு அடுப்பு வெடித்து விபத்து: ஒருவர் காயம்

மன்னார்,ஜன.23

சமையல் எரிவாயு அடுப்பு திடீரென வெடித்ததில் பெண்ணொருவர் காயமடைந்தார்.

மன்னார், மடு பண்டிவிரிச்சான் பகுதியிலுள்ள வீட்டிலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. பெண் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்த வேளையே எரிவாயு அடுப்பு வெடித்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



கொழும்பு,ஜன.23

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெஞ்சர் தோட்டத்தில்,தோட்ட நிர்வாகத்தினருக்கு எதிராக நேற்று அந்தப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தோட்ட அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தத் தோட்டத்தில் தொழிலுக்காக பயன்படுத்தப்படும் உழவு இயந்திரம், லொறிகள் என்பன மிகவும் பழைமையடைந்து போக்குவரத்து பாவனைகளுக்கு உதவாது உள்ளதால் விபத்துக்கள் ஏற்படுகிறது என்று தெரிவித்தே போராட்டம் நடத்தப்பட்டது.

இவ்வாறான அசம்பாவிதங்களைத் தடுக்குமாறும், அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்ட இடத்துக்கு வந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தோட்ட நிர்வாகத்தினர் மக்களுடன் பேச்சில் ஈடுபட்டதன் பின்னர் போராட்டக்காரர்கள் தற்காலிகமாக தமது போராட்டத்தைக் கைவிட்டுச் சென்றனர். (ற-ரி5)

### நூல் வெளியீட்டு விழா

திருகோணமலை, ஜன.23

திருகோணமலையில் நிலாவெளியூர் கெஜதர்மா எழுதிய 'அந்த மூன்று நாள்கள்' குறுநாவல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. குளக்கோட்டன் மண்டபத்தில் கவிஞர் க. கோணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர். (ற.ரி4)



### கற்பிட்டிக் கடலில் கரையொதுங்கியது டொல்பின் மீன்

புத்தளம்,ஜன.23

புத்தளம், கற்பிட்டி கடற்கரையில் பெரியளவிலான டொல்பின் மீன் ஒன்று நேற்றுக் கரை ஒதுங்கியது. இந்த மீன் 10 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்டது என கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். சுறா இனத்தைச் சேர்ந்த இந்த டொல்பின் மீன், டொல்பின் மீன்களை விடவும் புத்திகூர்மையானது எனத் தெரிவிக்கப்பட்டது. பெரிய அலைகளில் சிக்கியே இந்த மீன் கரையொதுங்கி இருக்கலாம் எனவும், விஷத் தன்மை காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனவும் மீனவர்கள் சந்தேகிக்கின்றனர். (ற-ரி5)



யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் 53 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மல்வத்த பீட மகாநாயக்க தேரர் அவரை நேரில்அழைத்து ஆசி வழங்கியுள்ளார். (ற-ரி5)



### பாலை மரங்களுடன் ஒருவர் கைது

மன்னார்.ஜன.23

மடுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இரண்டாம் கட்டைப் பகுதியில் பாலை மரங்களுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி4)

# லீ சிசெயன் இலங்கையில்

கொழும்பு, ஜன.23

சிங்கப்பூர் தலைமை அமைச்சர் லீசிசெயன் லுன்க் இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

இன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கவுள்ளதுடன், இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு கலந்துரையாடலும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவுள்ளன. இந்தப் பயணத்தின் போது சிங்கப்பூர் தலைமை அமைச்சரின் பாரியார் திருமதி லீ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் , வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ் ஈஸ்வரன் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவினரும் வருகைதந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற)

# கதிர்காமம் துப்பாக்கிச் சூடு; 63 பேருக்குப் பிணை

கொழும்பு, ஜன.23

கதிர்காமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஏற்பட்ட பதற்றநிலை காரணமாக கைது செய்யப்பட்ட 63 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 20 ஆம் திகதி இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்றவர் மீதே சூடு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதி மக்கள் இந்தச் சம்பவத்தை அடுத்து பொலிஸாருக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது.

கதிர்காமம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக எதிர்ப்பில் ஈடுபட்டவர்களைக் கலைக்க கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட 63 பேர் கைது செய்யப்பட்டனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்று கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ற)



## மன்னிப்பு கேட்கவேண்டும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்

*பாக். தலைமை அமைச்சர் காட்டம்*

"பாகிஸ்தான் பொய், வஞ்சகம் ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் அளித்ததில்லை" என தெரிவித்த கருத்துக்கு அமெரிக்க அதிபர்டொனால்ட்ட்ரம்ப்மன்னிப்புக் கேட்க வேண்டும் என பாகிஸ்தான் தலைமை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.
தீவிரவாத ஒழிப்பு மற்றும் நாட்டின் உள்கட்டமைப்பு என்ற பெயரில் அமெரிக்காவிடம் இருந்து பாகிஸ்தான் ஏராளமான நிதி உதவிகளைப்பெற்றுவந்தது. ஆனால் தம்மிடம் இருந்து பெறப்படும் உதவிகளுக்கு ஏற்ற கைமாறு ஒன்றையும் அதாவது பெறும் பணத்துக்கு ஏற்ற செயற்திட்டங்களை எதையும் பாகிஸ்தான் முன்னெடுக்கவில்லை என்று அமெரிக்கா குற்றம் சுமத்தியது. இதைய்டுத்து பாகிஸ்தானுக்கு வழங்கிவந்த மில்லியன் கணக்கான டொலர் நிதியுதவியை நிறுத்த உத்தரவிட்டார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
"கடந்த 15 ஆண்டுகளாக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா முட்டாள்தனமாக 33 பில்லியன் டொலர்களுக்கு மேல் வழங்கியுள்ளது. ஆனால், எமது தலைவர்களை முட்டாள்களாக நினைக்கும் பாகிஸ்தான்பொய், வஞ்சகம்ஆகியவற்றை தவிர எமக்கு வேறு எதையும் அளித்ததில்லை. ஆபகானிஸ்தான் மண்ணில் நாம் வேட்டையாடிவரும்தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அடைக்கலமும் அளித்து வருகிறது" என ட்ரம்ப்தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தை ட்ரம்ப் வெளிப்படுத்தி சுமார் மூன்று வாரங்கள் கடந்து விட்ட நிலையில், தனது கண்டனத்தைத் தெரிவித்தார் பாகிஸ்தான் தலைமை அமைச்சர்.
"தீவிரவாதிகளுக்குஎதிராகபாகிஸ்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லைஎன்றுட்ரம்ப்தெரிவித்ததைஏற்கமுடியாது. ட்ரம்ப்தனது கருத்துக்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று அவர்மேலும் தெரிவித்தார். (ம)

## இவரும் மன்னரே!

ரியோ டி ஜெனிரோ, ஜன. 23
பிரேசில் நாட்டில் மன்னர் ஒருவர் கடற்கரையோரம் மணல் கோட்டை அமைத்து அங்கு 22 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார். பிரேசிலின் வர்த்தகநகரானரியோடிஜெனீரோவில்பாராடா திஜீகா பகுதியைச் சேர்ந்தவர் மார்சியோ மிஷயல் மடோலியாஸ் (வயது- 44). அவர் அங்கு மன்னராக உள்ளார். ஆனால் இவர் கோட்டை கொத்தளங்களால் செய்யப்பட்ட அரண்மனையில்வசிக்கவில்லை. மாறாகமணல்கோட்டையில் வசிக்கிறார்.
மணல்சிற்பங்கள் செய்வதில் வல்லவரான இவர் சிறு வயதில் இருந்தேகடற்கரையில்வாழ்ந்துவந்தார். எனவேஇவர் வேறு இடத்துக்கு செல்ல மனமில்லாமல் கடற்கரையிலேயே மணல்கோட்டைஒன்றைஅமைத்து அங்கேயேதங்கிவிட்டாராம் என்றாலும் இவரும் மன்னர்தானே. (ம)



## மக்கள் போராட்டத்தில் சூடு ஆறு பேர் பரிதாபச் சாவு

*காங்கோவில் சம்பவம்*

சின்ஷாசா, ஜன. 23
காங்கோ அதிபர் ஜோசப் கபிலா பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர்.
கபிலாவின் பதவிக்காலம் முடிவடைந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. ஆனால் அவர் தேர்தல் நடத்தாமல் தொடர்ந்து பதவியில் நீடித்து வருகிறார். அவர் பதவி விலக வலியுறுத்தி காங்கோ நாட்டில் தொடர்ந்து போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்தபலதினங்களாகஇரவுபகலாகநடத்தப்பட்டுவரும்இந்தப் போராட்டத்தில்நேற்றுமுன்தினம்துப்பாக்கிச்சூடுநடத்தப்பட்டது என்றும் அதில் 6 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பொலிஸாரேதுப்பாக்கிச்சூட்டைநடத்தினர்என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம்சுமத்தியுள்ளனர். எனினும் பொலிஸ் தரப்பு இதை மறுத்துள்ளது. (ம)





பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் உள்ள எரிமலையொன்று தனது உ... குழம்புகளை வெளியிட ஆரம்பித்துள்ளது. இதையடுத்து அங்குள்ள மக்கள் ப... இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆப்கானில் தாக...
# 43 பேர் துயரச்...




காபூல், ஜன. 23
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள சொகுசு விடுதியில் ஆயுததாரிகள் நேற்றுமுன்தினம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 43ஆக அதிகரித்தது.

காபூல் நகரின் மையப்பகுதியில் உள்ள இன்டர்கான்டினென்ட்டல் என்ற சொகுசு விடுதியின் சமையலறை வழியாக நேற்றுமுன்தினம் பின்னிரவு நுழைந்த ஆயுததாரிகள் அங்கிருந்தவர்களை நோக்கிச் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். பொலிஸாரும் சிப்பாய்களும் விடுதியைச்சுற்றிவளைத்துநடத்திய தாக்குதலில் 4 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். 6 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று முதல் கட்டத் தகவல் வெளியிடப்பட்டது. நேற்றைய இரண்டாம் கட்டத் தகவலின்படி சாவு எண்ணிக்கை 43ஆக அதிகரித்தது. இந்தத் தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கனி கடும் கண்டனம் தெரிவித்தார். (ம)



நிபந்தனைகளுக்கு உட்பட்டது
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி.எல்.சி-PQ118 | பிச் ரேடின் A(lka) | நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இலங்கை மத்திய வங்கியி...



...து உறங்குநிலையைக் கலைத்து நெருப்புக்
...கள் பலர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான (ம)

# ...க்குதல்
# ...ச் சாவு





## ஹெலிகொப்டர்விபத்தில் 2 சிப்பாய்கள் உயிரிழப்பு

லொஸ்ஏஞ்சல்ஸ், ஜன. 23
அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான'அப்பாச்சி'உலங்குவானூர்திநேற்று முன்தினம் விபத்துக்கு உள்ளானதில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர். பயிற்சியில் ஈடுபட்டபோதே உலங்கு வானூர்தி வீழ்ந்து விபத்துக்கு உள்ளானது என்றும் தெரியவருகிறது. விபத்துத் தொடர்பில் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)



# சிரியாவுக்குள்புகுந்துதாக்குதல் துருக்கித்தரைப்படை நடத்தியது


குர்திஸ் ஆயுதக்குழுவுக்கு எதிராக

இஸ்தான்புல், ஜன. 23
குர்திஷ்ஆயுதக்குழுவைவிரட்டியடிக்கும்முயற்சியாகசிரியாவின் எல்லைக்குள் சென்று துருக்கித் தரைப்படை தாக்குதல்நடத்தியது.
சிரியாவின்வடக்குப்பகுதியில் உள்ளஅப்ரின்பிராந்தியத்தில் குர்திஷ் ஆயுதக்குழு செயல்பட்டு வருகிறது. இந்தப் பகுதி துருக்கியின் தெற்கு எல்லையில் உள்ளது. சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் ஈடுபடும் அமெரிக்க ஆதரவு படையில் குர்திஷ் அமைப்பும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், தங்கள்நாட்டில்தடைசெய்யப்பட்ட குர்திஷ்தான் தொழிலாளர்கட்சியுடன்குர்திஷ்ஆயுதக் குழுவுக்கு தொடர்புள்ளதாகத் தெரிவித்து அந்தக் குழுவினரை ஆயுததாரிகள் என்று துருக்கிதெரிவிக்கிறது. இந்தப் பின்னணியில் துருக்கி அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருவதும் வழக்கம். இந்த நிலையில்எதிர்பாரா விதமாக சிரிய எல்லைக்குள் ஊடுருவி குர்திஷ் அமைப்புக்கு எதிராக துருக்கி தாக்குதல் நடத்தியுள்ளமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)




## ஜேர்மனிய பெண்ணுக்கு ஈராக்கில் தூக்கு

பக்தாத், ஜன. 23
ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு உதவிசெய்தகுற்றச்சாட்டில்ஜேர்மனிப் பெண்ணுக்கு ஈராக்கில் தூக்குத் தண்டனைநிறைவேற்றப்பட்டது.
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் மிகவும் அகப்பட்டிருந்தது ஈராக். மோசூல் உள்ளிட்ட பல நகர்களைக் கைப்பற்றி தனிநாடு அமைத்திருந்தது அந்தஅமைப்பு. இந்தநிலையில்அமெரிக்காவின்உதவியுடன்ஈராக்இராணுவம் கடந்த ஆண்டு ஜூலையில் மோசூல்உள்ளிட்ட பகுதிகளைக்கைப்பற்றியது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கம்ஈராக்கில்மிகையாகஇருந்தபோதுஅந்தஅமைப்புக்குஉதவிசெய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஜேர்மனியப்பெண்ணின்குற்றம்உறுதிசெய்யப்பட்டதை அடுத்தே நேற்று முன்தினம் அவருக்குத் தூக்குத் தண்டனைநிறைவேற்றப்பட்டது. (ம)



## சிலியில் நிலநடுக்கம்

தென்னமரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றுபன்னாட்டுஊடகங்கள்செய்திவெளியிட்டன.
அமெரிக்கப் புவியியல் ஆய்வுமையம் இந்தத் தகவலைஉறுதிப்படுத்தியுள்ளது. ரிச்டர்அளவுகோலில் 6.3 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது என்று அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. பூமிக்கு அடியில் 110 கிலோமீற்றர் ஆழத்தில் உணரப்பட்ட இந்த நிலநடுக்கம் அண்டைநாடான பெருவிலும் உணரப்பட்டதுஎன்றும்தெரிவிக்கப்பட்டது. (ம)






...தற்போது உங்களது வழக்கமான வட்டிக்கு
...மேலாக 60%
...மேலதிக வட்டியையும்,
...இலவச ஆயுட் காப்புறுதித் திட்டத்தையும்
...பெற்று அனுபவியுங்கள்!
...tionstrust.com
...ள்
Nations Trust Bank
Nations MaxBonus
...யினால், மேற்பார்வைசெய்யப்படும் ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## தேவையானது நடவடிக்கையே

இலங்கையில் 50 சதவீதமான அரசியல்வாதிகள் மக்களின் பணத்தைச் சூறையாடுகின்றனர். இவ்வாறு மிகவும்காட்டமாகசிலகருத்துக்களைமுன்வைத்துள்ளார் இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

ஊழல் மோசடிகளைக் கண்டறிய அமைக்கப்பட்ட ஆணைக்குழு குற்றவாளிகள்என்று அடையாளப்படுத்தியிருக்கும் அனைவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அபிவிருத்தி என்ற பெயரில் மக்களின் பணத்தைக் கொள்ளையிட ஒருபோதும்அனுமதிக்கமுடியாது. மக்கள் பணத்தைச்சூறையாடிய எந்தக்கட்சியினருக்கும் மன்னிப்பில்லை. நாட்டில் சுத்தமான அரசியல் கலாசாரத்தை உருவாக்க மக்களுக்கு அழைப்பு விடுக்கிறேன் என்றும் தனது பரப்புரையில் முழங்கியுள்ளார் மைத்திரி.

அரச தலைவரிடம் இருந்து ஊழலுக்கு எதிரான பேச்சு வெளிப்படுவது இதுவொன்றும் முதல் முறையல்ல. நாட்டையே உலுக்கிப் போட்டுள்ள பிணைமுறி மோசடி விவகாரத்தில் சிலர் குற்றவாளிகள் என்று அது தொடர்பில் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ளது. கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் தான் ஆற்றிய உரையொன்றில் 'வாள் வீச்சு நடத்தப்படவுள்ளது. எந்தக் கட்சி, எந்த வர்ணம் என்ற பாகுபாடு இல்லாமல், ஊழல் மோசடிக்காரர்கள்தண்டிக்கப்படுவார்கள்' என்று தெரிவித்திருந்தார் மைத்திரி. மைத்திரியின் இந்தக் கருத்து அப்போது மிகப்பெரும் எதிர்பார்ப்புக்களைஏற்படுத்தியிருந்தது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு மைத்திரியின்வாள்வீச்சு குற்றவாளிகளைக்காயப்படுத்தவில்லை. குறைந்தபட்சம் அவர்களைத் தனது இலக்காகவேனும் அந்த வாள்வீச்சு கொண்டிருக்கவில்லை என்பதே இன்று பொதுமக்கள் பலரின் விமர்சனமாக அமைகிறது.

பிணைமுறி மோசடி தொடர்பான விவாதத்துக்காக நாடாளுமன்றம் கூடியபோது பெரும்களேபரமே அங்கு ஏற்பட்டிருந்தது. இலங்கையின் சட்டவாக்க மன்றம் தனது உன்னதத்தை மற்றுமொருதடவை இழந்தசம்பவமாக இந்தக் குடுமிபிடிச் சண்டை அமைந்திருந்தது. இத்தகைய பின்னணியில் மைத்திரி மீண்டுமொரு தடவை தனது பார்வையை ஊழல் மோசடிவாதிகள் பக்கம் திருப்பியுள்ளார். இம்முறை அவர் சொல்லிக்கொள்ளும்படியான அல்லது திருப்திப்படும்படியான காத்திரமான நகர்வுகளை, திட்டங்களை முன்னெடுப்பாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளஅதேநேரம், பத்துடன்பதினொன்றாகஅவரது இந்த உரைஅமைந்துவிடுமாஎன்றசந்தேகமும் மனதில் வலுப்பெறாமல் இல்லை.

'அபிவிருத்தி என்ற பெயரில் மக்களின் பணத்தைச்சூறையாடியவர்களாகவே பலரும் உள்ளனர். இன்று வேறு எந்தக் கட்சியின் தலைவர்களும் அரசியல் மேடைக்கு வந்து தம்மைத்தூய்மையானவர்என்று சொல்லமுடியாதுள்ளது' என்றும் குறித்த உரையில் மைத்திரி குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம் அவர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின்நிதிமோசடிகளையும், பிணைமுறிவிவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலையும் சீண்டியுள்ளார். கட்சித் தலைவர்களின் என்னைவிடவும் தூய்மையானவர்கள்எவருமில்லைஎன்று அவர்சொல்லாமல் சொல்லியுள்ளார். அரச தலைவர் கட்சித் தலைமைகளை கேள்விக்குஉட்படுத்தியுள்ளமையின்பின்னணியில் அவரது இந்தக் கருத்துக்கள் அனைத்தும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான முழங்கங்களே. அதாவது வாக்குவங்கியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையே தவிர பயனுடைத்ததாக ஒன்றுமில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது.



# அரசியல் சண்டித்தனமும் ஆன்மிக சண்டித்தனமும்

கருடன்

ஒரு நாட்டின் உயர்ந்த பீடங்களாகக் கருதப்படுபவை நாடாளுமன்றமும் மதபீடங்களுமாகும். இவையிரண்டும் மிகமிகப்புனிதமாகப்போற்றப்படவும், மதிப்பளிக்கப்படவும் வேண்டியவையாகும். இவ்விரு பீடங்களாலும் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளையும்முழுஉலகமும் மிகவும் உன்னிப்பாக அவதானித்துத் தீர்ப்புச் சொல்லும் அளவுக்குநன்குபடித்தும்பார்த்தும் உணர்ந்தும் வைத்துள்ளது. காரணம், பாமரமக்களிலிருந்து அனைவருமே தினந்தோறும் ஊடகங்களை நன்றாகவாசித்துவிமர்சனம்செய்யும்படியாகப் பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உலகில் நிலவுகிறது.

### தனிப்பட்ட செல்வாக்குக்கு வாக்களிக்கும் போக்கு மாற வேண்டும்

இலங்கையில் (x) புள்ளடி போடுவதுஎன்பது தேர்தலில் இன்னுமேசரியாகப்பேணப்படவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. அம்மா அழகாக இல்லை என்பதற்காக அழகான பெண்ணொருத்தியை அம்மா என்று சொல்லஇயலுமா?அரசியலில் முகங்களைப்பார்த்துப்புள்ளடி போட்டதனால் நாடாளுமன்றத்தில் அடிதடிப்பிரயோகம், கன்னங்களில் பளார் பளார், மேலாடைகள் கிழியக்கிழிய மோதல், போத்தல்வீச்சுக்கள், பிணைமுறி இழுபறிகள். அடேயப்பா, துச்சாதனகலாசாரமும், இராவணசம்காரமும் மேலோங்கியிருந்தமையை அவதானித்து நாடும் உலகமும் கவலையடைந்தது.

### நிதி மோசடிக் குற்றச்சாட்டுக் குறித்து கோபம் கொள்வது நியாயமானதே

கோடிக்கணக்கான ரூபா பெறுமதியானநிதிமோசடிகள் இடம்பெற்றதான குற்றச்சாட்டுகளில்பெரும்பெருங்கைகள் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்படுவதே இந்த அடிதடிக்கும், மோதலுக்கும் காரணமாகும். நியாயமானபோராட்டந்தான். ஆனால் எல்லாவற்றிற்கும் பாரம்பரிய அணுகுமுறை என்று ஒன்று இருக்கிறது என்பதை மதிப்புக்குரியவர்களாகச் சுட்டப்படுவோர்உட்பட அனைவருமே மறந்து விட்டார்கள். உன்னதமானபீடத்தில்அடாவடிகளும் சண்டித்தனமும் கோலோச்சுவது நாட்டுக்கும் அழகல்ல! வீட்டுக்கும் அழகல்ல! படிப்புக்கும் அழகல்ல! தெய்வங்களுக்கும் இது வந்தனமுமல்ல.

பல்லாயிரக்கணக்கான மக்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அசிங்கத்தனமான மோதல்களைக் காணொளியில் பார்த்து வெட்கப்பட்டு விரக்தியடைந்திருப்பார்கள். ஊழல் அம்பலமாகி விட்டது. தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கான சட்டப்படியான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

பென்னம் பெரிய புள்ளிகள் மாட்டிக்கொண்டு விட்டனர். மைத்திரி இனிப் பின்வாங்க மாட்டார். ஆதலால்இந்தச்சண்டியர்களெல்லாம் கொஞ்சம் அடக்கி வாசித்திருக்கலாம். அடிதடி தேவைதானா? பளார் பளார், அளவுக்கு அதிகமாகக் கூடியே போய்விட்டது. அநாகரிகமானதும் அருவருக்கத்தக்கதுமான இந்தச் செயற்பாடுகள் தான் புதிய ஆண்டுக்கான கொழும்புதந்த பரிசு போலும். இனிமேலாவதுபுள்ளடிபோடும்போது முகம் பார்த்துப் போடாதீர்கள். முன்னுதாரணமாகச் செயற்பட முனைபவர்கள் மற்றும் கறை படாத கரங்களுக்கு சொந்தக்காரர்கள் எவரோ அவர்களை இனம் கண்டு பார்த்துப் புள்ளடி போட வேண்டியதற்கான காலம் கனிந்துள்ளது.

### அரசியல் மட்டுமன்றி ஆன்மிகத்திலும் கோலோச்சும் சண்டித்தனம்

சண்டித்தன வேட்பாளர்களையும், திருட்டுத்தனமானகும்பல்களையும், பாலியல் தொடர்பான பலவீனமானவர்களையும் சமூகம் காதோடு காதாகச் சொல்லி மிகவும் எச்சரிக்கையாக நடமாடுகிறது. உண்மையானதிருடரைமக்கள்நன்கறிவார்கள்என்பதுமைத்திரியின் வேதாந்தம். உண்மைதானே? இலங்கையில் மதங்களிலும் அரசியல்போலச்சமயசண்டித்தனம் கோலோச்சுகிறது.

கூலிக்கு மாரடிப்பதும், கூக்குரல்போடுவதும், விளம்பரப்படுத்துவதும் பயில்வான் போலப் பரிவாரங்களை உருவாக்குவதும்அறமல்ல;அதர்ம காரியங்களாகும். வேறொன்றுமல்ல, சண்டித்தனமே.



# பேருந்து சேவைகளை புதிய பேருந்து நிலையத்துக்கு மாற்றியதால் களையிழக்கும் வவுனியா நகரம்



ஜே. அருள்மதி

வடபகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற போரின்போது வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப்பாலமாகவும், பலருடைய பயணங்களைச்சுமந்து போர் இடம்பெற்ற காலகட்டத்தில் வரலாற்றுப்பதிவான கேந்திர நிலையமாகவும் வவுனியா நகரம் இருந்து வந்ததுண்டு. போரின் இறுதிக்கட்டத்தில் பல இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்து தஞ்சமடைந்ததன் காரணமாக வவுனியா நகரம் பல இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்லக்கூடிய இடமாகவும் போர்ப் பாதிப்புக்குள்ளான மக்களை காப்பாற்றிய இடமாகவும் மாறியிருந்ததுடன், வவுனியாவிலிருந்து உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு தப்பிப்பிழைத்தால்போதும் என்றும் பலர் நாடு கடந்து சென்றுவிட்ட வரலாறுகளும் நிறை யவே உள்ளன. போர் இடம்பெற்ற காலகட்டத்திலும் வவுனியாவில் தூர இடங்களுக்கான பேருந்து வசதிகள், புகையிரத வசதிகள், வெளிநாட்டு பணப்பரிமாற்றம், தொலைத்தொடர்பு வசதிகள் என அனைத்து வசதிகளும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

### புதிய இடத்தில் நிறுவப்பட்ட பேருந்து நிலையம்

காலப்போக்கில் மெல்ல மெல்ல நகரம் வளர்ச்சியடைந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக வவுனியா பகுதியில் வசித்தவர்கள் பலரின் சொந்த இடமாகவும் வவுனியா மாறியதையடுத்து, வடக்கின் முக்கிய நகரொன்றாகவும் வவுனியா மாற்றம் பெற்றுள்ளது. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் வவுனியாவிற்கு புதிய பேருந்து நிலையம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அப்போதைய மாவட்ட செயலாளராக இருந்த சார்ள்ஸ் அம்மையாரின் தலைமையில் அமைச்சர்கள் மட்டத்தில் சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள் இடம்பெற்று சிலரின் எதிர்ப்புக்கு மத்தியில் பேருந்து நிலையத்துக்கான அடிக்கல்லும் நடப்பட்டது. அதையடுத்து புதிய பேருந்து நிலையத்தின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி மத்திய போக்குவரத்து அமைச்சரினால் உத்தியோகபூர்வமாக புதிய பேருந்து நிலையம் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டது. அன்றிலிருந்து இ.போ.ச சாலை ஊழியர்கள், தனியார் பேருந்து உரிமையாளர்களின் இணக்கம் இன்றி புதிய பேருந்து நிலையத்திலிருந்து சேவைகளை மேற்கொள்வதில் இழுபறி நிலை நிலவியதுடன் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறும் ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் இருதரப்பினரது இணக்கப்பாட்டுடன் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் தலைதூக்கின.

### களையிழந்து போன பழைய பேருந்து நிலையச்சுற்றாடல்

இதையடுத்து வடமாகாண முதலமைச்சரின் அதிரடி நடவடிக்கையினால் 2017 நவம்பர் 24ஆம் திகதி நள்ளிரவு 12மணி முதல் புதிய பேருந்து நிலையத்தில் இ.போ.ச மற்றும் தனியார் சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என முதலமைச்சர் வவுனியா நகரசபையினரின் கவனத்திற்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்தார். நகரசபையினர் முதலமைச்சரின் உத்தரவை நடைமுறைப்படுத்தினர். பழைய் பேருந்து நிலையத்தை 2017 டிசம்பர் 31ஆம் திகதி நள்ளிரவு 12மணியுடன் மூடிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் புதிய பேருந்து நிலையத்திலிருந்தே சேவைகள் இடம்பெற்று வருகின்றன. பழைய பேருந்து நிலையத்தில் இருந்து இரு தரப்பினர்களது சேவைகளும் மேற்கொள்ளப்பட்ட வேளையில் நகரைச் சூழவிருந்த வர்த்தக நிலையங்கள், 1ஆம் 2ஆம் குறுக்குத் தெருக்களிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் என மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வருவதும் தமது தேவைகளை நிறைவேற்றிச் செல்வதும் வெளியூர்களிலிருந்து வரும் பயணிகள் வேறு இடங்களுக்கான பேருந்துகளில் மாறி வேறு இடங்களுக்குச் செல்வது போன்ற செயற்பாடுகள் இடம்பெற்று வந்ததால் வவுனியா நகரம் 24மணி நேரமும் சுறுசுறுப்பாகவே செயற்பட்டு வந்துள்ளது.

தற்போது பேருந்து நிலையம் இடம்மாற்றப்பட்டன. பழைய மத்திய பேருந்து நிலையப்பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் அவற்றுக்கு அண்மையிலுள்ள வங்கிகளுக்கு மக்கள் தமது தேவைகளுக்கு வருவது கணிசமான அளவு குறைந்துள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியால் நகரின் மத்திய பகுதிகள் பல சோபையிழந்து மதியத்துடன் மத்திய நகரம் சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக்காணப்படுகின்றது. வவுனியா நகரைவிடவும் பல பகுதிகளிலிருந்து வவுனியா ஊடாக செல்வோரின் எண்ணிக்கை அதிமானது என்பது குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதொன்று. வடபகுதியில் பணியாற்றும் இராணுவப்படைத் தரப்பினரும் விடுமுறையில் தமது வீடுகளுக்குச் செல்லும்போது வவுனியா ஊடாகவே செல்வதுண்டு. புகையிரத சேவைகள் இடம்பெற்றாலும் பேருந்தில் தமது பயணங்களை மேற்கொள்வது பலரது வழக்கமாக இருந்து வந்துள்ளது.



நீண்டகாலமாக வவுனியா நகர்ப்புறம் இவ்வாறான கட்டமைப்பிலிருந்து இந்த மாதம் முதலாம் திகதி முதல் புதிய ஒரு கட்டமைப்பிற்குள் மாற்றமுற்றபோது வியாபாரரீதியாக நீண்டகாலமாகத் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வந்த வியாபார நிலையங்களது உரிமையாளர்கள், பணியாளர்கள், வியாபார நிலையங்களை நம்பி வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் பணியாளர்கள் என பலதரப்பட்டவர்கள் திடீரெனப்பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கான மாற்றுவழிகளை உடனடியாகத் தேடிக் கொள்வதில் பல சிக்கல்கள் உருவாகியுள்ளன. பல கோடி ரூபாய்களை தமது வியாபார நிலையங்களுக்குள் முதலிட்டுள்ள வியாபார நிலைய உரிமையாளர்கள், வங்கியில் கடன் பெற்ற பலர், தினமும் தமது காசோலைக்கு 11மணிக்குள் வங்கிகளுக்கு இலட்சக்கணக்கில் பணத்தை வைப்பிலிடும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் எனப்பலர் சொல்லொணாத் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

### மாற்று வழிமுறையால் பின்னடைவு நிலை நிவர்த்திக்கப்படுமா?

இந்த நிலையிலிருந்து விடுபடுவதற்கு , தற்போது பழைய பேருந்து நிலையம் இடமாற்றப்பட்டதால் ஏற்படும் பாதிப்புக்கு ஒரு மாற்றுவழியாக பழைய பேருந்து நிலையச் சூழலில் வர்த்தக நிலை யங்களை நடத்திவரும் அவற்றின் உரிமையாளர்கள் ஒரு முக்கிய கோரிக்கையை முன்வைக்கின்றனர். உள்ளூர் பேருந்து சேவைகளில் ஈடுபடும் இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்துக்குள் சென்று சற்று நேரம் தரித்து நின்று அங்கிருப்பவர்களை ஏற்றிக் கொண்டு செல்வதுடன் வெளியூர்ப் பேருந்துகளில் இருந்து வருபவர்களையும் பழைய பேருந்து நிலையத்தில் இறக்க வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே இந்தக் கோரிக்கையாகும். அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படல் அவசியமாகும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# மீண்டும் தொடங்கும் மிடுக்கு

உதயனின் 'கலை இலக்கிய பொங்கல் மலர்' காத்திரமாக மணம் வீசியது. முதல் பக்கம் விடைபெற்று மொட்டவிழ்ந்தது பலே! நொத்தார்க்கு நீயன்றி நோவழிப்பார் யாருளரோ?

செத்தவன் நாக்கிலும் நீரூறும்! எதிரி முகம் அடிபட்டு விழும். தொழில்கள் மிகப் பெருக விழிகள் திறப்படைக. "அள்ளிவர உனக்கேன் ஆசை வரவில்லை? இழந்தவற்றைமீளப்பெறஎழும்பு. சபாஷ். கவிச்சக்கரவர்த்திகளின்தலைவாசல்வாசகர்களைவரவேற்று உள்ளே அழைத்துச்சென்று உட்காரவைக்கிறது. 132 பக்கங்களையும் வாசித்து முடிக்க வேணியும் தபீந்திரனும் அடிக்கடி வந்து எம்மைக் கவனிக்க வைத்து மிகுந்த பாராட்டைச் சம்பாதித்திருக்கிறார்கள். 48 கட்டுரைகள் , 40 கவிதைகள், 24 சிறுகதைகள், 2 நேர்காணல்கள். யாவுமே சோடை போகாத படைப்புக்கள் மட்டுமல்ல ,33 வயதிலும் மீண்டும் தொடங்கிய மிடுக்கு எனலாம். எல்லாமே கடின உழைப்பினது சுகப் பிரசவங்களே. மொத்தத்தில் அனைத்து அம்சங்களும் வாசிப்போரை அரவணைத்து ஆற்றுப்படுத்த வல்லவை. அடேயப்பா!

இத்தனை விடயங்களையும் பொங்கல் பிரசாதமாக அனுபவிக்க உழைத்த அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும் நிறைவதாக. இதனை ஒரு நூலாக்கினால் ஆவணமாகும். புதுவை சொன்னதுபோல ஏன் அந்த ஆசை வரவில்லை?

2019 எப்போது விடியும்?

கே.எஸ்.சிவஞானராஜா



# தை மாத ராசி பலன்

## கன்னி

**நாளை**

**24.01.2018**

புதன்கிழமை

**தை - 11**

திதி: ஸப்தமி பி.ப. 12.21
நட்சத்திரம்: அச்சுவினி பி.இ. 04.39 வரை
சுபநேரம்: 05.06–06.36 வரை
ராகுகாலம்: 12.36–02.06 வரை

எந்த ஒரு விடயத்தையும் தள்ளிப் போடாமல் உடனே முடிவு காணத் துடிக்கும் குணமுடைய கன்னி ராசிக் காரர்களே! இந்த மாதம் தெளிவான சிந்தனை தோன்றும். எந்தக் காரியத்தையும் செய்யும் முன் ஆலோசனை செய்து அதில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். சாமர்த்திய மான உங்களது செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள். முக்கிய நபர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் நட்பு கிடைக்கும். அதனால் மதிப்பு அதிகரிக்கும். புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தரும்.

தொழில்; வியாபாரம் தொடர்பாகப் புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதனால் நன்மை உண்டாகும். உங்கள் கீழ் பணியாற்றுபவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து உங்கள் நிலையை உயரச் செய்வார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்பு கிடைக்கப் பெறுவார்கள். சக பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். அலுவலகம் மூலம் வாகனம் கிடைக்கலாம். என்றோ செய்த ஒரு வேலைக்கு இப்போது பாராட்டுக் கிடைக்கலாம். திருமணம் தொடர்பான பேச்சு சாதகமாக முடியும். குடும்பத்தில் உள்ளவர்களால் வருமானம் கிடைக்கலாம். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டுப் பேசி எடுக்கும் முடிவுகள் குடும்ப முன்னேற்றமடைய உதவும். பிள்ளைகளின் நலனின் அக்கறை காட்டுவீர்கள்.

பெண்களுக்கு அடுத்தவர் ஆச்சரியப் படும் வகையில் சாமர்த்தியமாக காரியங்களை செய்து வெற்றி பெறுவார்கள். புதிய நட்பு மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

**அரசியல்வாதிகளுக்கு:** இலாபமான காலமாக இருக்கும். எதிர்பார்த்த பணவிஷயங்கள் நல்ல முறையில் நடந்து முடியும். மேலிடத்திலிருந்தும் பணம் சம்பந்தப் பட்ட விஷயங்கள் உங்களை வந்தடையும்.

**கலைத்துறையினருக்கு:** புகழ் சேர்க்கும் விதமாக வேலைகள் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் பணத்தை எதிர்பார்த்ததை விட புகழ் சேர்க்கும் விதமாக அமையும்.

**மாணவர்களுக்கு:** படிப்பில் முன்னேற்றம் காணப்படும். விளையாட்டு மற்றும் பொழுது போக்குகளில் ஆர்வம் உண்டாகும்.

**பரிகாரம்:** நாலாயிர திவ்ய பிரபந்தங்களைப் பாராயணம் செய்து வர எல்லா நன்மைகளும் உண்டாகும்.

### திருத்தி வாசிக்கவும்

உதயனின் நேற்றைய 20ஆம் பக்கத்தில் வெளியான 'வீழ்வது மேலோங்கி எழுவதற்கே' என்ற கட்டுரையை எழுதியவர் ஏ.ஜே.ஞானேந்திரன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரையை உதயனுக்கு அனுப்பி வைத்தவர் அ.அஜந்தன் என்பவரே. தவறுதலாகப் பிறிதொரு எழுத்தாளரின் பெயரில் கட்டுரை வெளிவந்துவிட்டது. தவறுக்காக வருந்துகிறோம்...



# பித்ருதோசம் போக்கும் கால பைரவர் வழிபாடு

ஒவ்வொரு மாதமும் வரும் தேய்பிறை அஷ்டமி திதி பைரவருக்கு உகந்த நாள். அந்த வகையில் ஒவ்வொரு அஷ்டமி திதிக்கும் ஒரு பெயர் உண்டு. இதில் கார்த்திகை மாத தேய்பிறை அஷ்டமி ருத்ராஷ்டமி என்றும் கால பைரவாஷ்டமி என்றும் சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு சிவன் கோவிலிலும் வடகிழக்குப் பகுதியில் தனிச்சந்நிதியில் காலபைரவர் எழுந்தருளி இருப்பார். சில கோவில்களில் சூரியன், பைரவர், சனி பகவான் என்ற வரிசையில் காட்சி தருவதும் உண்டு. சிவபெருமான் வீரச் செயல்களை செய்யும் காலங்களில் ஏற்கும் திருவுரு வங்களை பைரவர் திருக்கோலம் என்று புராணம் சொல்லும். காலமே உருவான பைரவரின் திருவுருவத்தில் பன்னிரண்டு ராசிகளுமே அடக்கமாகியுள்ளன.

தலையில் மேஷ ராசியும், வாய் பகுதியில் ரிஷப ராசியும், கைகளில் மிதுனமும், மார்பில் கடகமும், வயிற்றுப்பகுதியில் சிம்மமும், இடையில் கன்னியும், புட்டத்தில் துலாமும், லிங்கத்தில் மகரமும், தொடையில் தனுசும், முழுந்தாளில் மகரமும், காலின் கீழ்ப்பகுதியில் கும்பமும், அடித்தளங்களில் மீன ராசியும் அமைந்துள்ளதாக ஜாதக நூல்கள் விவ ரிக்கின்றன.

கால பைரவர் பாம்பைப் பூணுலாக கொண்டு, சந்திரனை சிரசில் வைத்து, சூலம், மழு, பாசம் தண்டம் ஏந்தி காட்சி தருவார்.

காசி மாநகரில் காவல் தெய்வமாகவும் காக்கும் கடவுளாகவும் கால பைரவர் திகழ்கிறார். காசியில் பைரவருக்கு வழிபாடுகள் முடிந்த பிறகு தான் காசி விஸ்வநாதருக்கு வழிபாடுகள் நடைபெறும் வழக்கம் உள்ளது.

காசி யாத்திரை செல்பவர்கள் கங்கையில் நீராடி வழிபட்டு இறுதியாக கால பைரவரையும் வழிபட்டால் தான் காசி யாத்திரை செய்ததன் முழுப் பயனும் கிட்டும். கால பைரவருக்கு ராகு காலத்தில் பூஜை செய்வது சிறப்பாக கருதப் படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு ருத்ராபிஷேகம் செய்தபின், புனுகு சாந்நி, எலுமிச்சம் பழ மாலை அணிவித்து, எள் கலந்த சாதமும் இனிப்புப் பண்டங்களும் சமர்ப்பித்து முன்னோர்களை நினைத்து பிதுர் பூஜைக்காக மந்திரங்களைச் சொல்லி அர்ச்சித்து வழிபட்டால் பிதுர் தோஷம் நீங்கும். அன்று அன்னதானம் செய்வது நல்லது.

## பத்தி எழுத்து

# பல்கலையில் கைகலப்பா?

யாழ்ப்பாணம் பல்கலையில் ஒரு சில மாணவர்களுக்கு இடையே அண்மையில் கைகலப்பு இடம் பெறுகிறது. யாழ்ப்பாணப் பல்கலையின் மகத்துவத்தைச் சிதைக்கும் வகையிலேயே ஒருசில மாணவர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இத்தகைய செயற்பாடுகள் பல்கலைக் கழகங்களில் இடம்பெறுவது இதொன்றும் முதன் முறையானதல்ல. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்லாமல் பெருவாரியான பல்கலைக் கழகங்களில் இத்தகைய பதிவுகள் தராளமாகவே பதிவாகியுள்ளன. வகுப்புத் தடைகள் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை நிர்வாகம் எடுத்துள்ள போதிலும் இந்த அடாவடித் தனங்கள் தொடர்ந்துதான் வருகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஏகப் பட்ட புரட்சிகளுக்கும், போராட்டங்களுக்கும் வித்தி ட்ட உன்னத பூமி. தமிழ் மக்களின் போராட்ட வாழ்வில் இன்றியமைதான இடத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கொண்டிருந்தது. தமிழ் மக்களின் கோரிக்கையாகவுள்ள காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல், காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம் ஆகியவற்றில் இன்றும் கூட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் வெளிப்படுத்தும் பேராதவுக்குரல் இன்றியமையாததாக உள்ளது. மாவீரர் தினம், முள்ளி வாய்க்கால் படுகொலை, தியாகிகளின் நினைவு தினங்கள் என அத்தனையும் பல்கலைக் கழக வளாகத்தில் புத்துயிர் பெறுகின்றன. இது விடயங்களில் மிகப்பெரும் பங்களிப்பை வழங்கிய வழங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில், 'யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மாணவர்களிடையே கைகலப்பாம்' என்று வரும் செய்திகள் ஏனோ மனதைக் கனக்கச் செய்கின்றன.

மாணவர்களிடையே ஏற்படும் இந்தக் கைகலப்புக்கள் அவர்களிடையே ஒற்றுமை இல்லை என்ற பிம்பத்தை வெளியுலகுக்கு காட்டிவிடும். அவ்வாறான மோசமான பதிவு ஒன்று ஏற்படுத்தப் பட்டுவிட்டால் பிறகு எமது உரிமைக்காக யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் பேரணிகளும், போராட்டங்களும் பயனற்றவையாக ஆகிவிடும்.

பல்கலைக் கழகம் என்றது கற்றறிந்த இடம் எனும் உயரிய அங்கீகாரம் பெற்ற பூமி. அதன் மாணவச் செல்வங்கள், தமது துர்நடத்தையால் ஏற்படப்போகும் பாதிப்புக்களையும், விளைவுகளையும் தூரநோக்கோடு ஆய்ந்தறிந்து செயற்பட வேண்டும். குறுகிய வட்டத்துக்குள் தமது கற்றலையும் பிற செயற்பாடுகளையும் அவர்கள் மட்டுப்படுத்தி விடக் கூடாது.

## வான் விற்பனைக்கு

Toyota Townace PB இலக்க பெற்றோல் KR - 42 வாகனம் முதலாவது உரிமையாளர். **தொடர்பு - 077 934 5711**

(AIA 359/15/17)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**கமலேஸ்வரி பத்மநாதன்**

தோற்றம் 20.04.1964 — மறைவு 05.02.2014

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!
ஆண்டுகள் நான்கு
ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
**கமலா அகம்**
**8ஆம் வட்டாரம், மடத்துவெளி,**
**புங்குடுதீவு,**

(es/13057)(11,17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 24.12.2017 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்

**அமரர்**

**கந்தையா சிவம் சண்முகலிங்கம்**

(ஓய்வு பெற்ற மருந்தாளர்)

தோற்றம் .10.01.1940 — மறைவு 24.12.2017

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்தும் நேரிலும், தொலைபேசி மூலமாகவும் தமது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும் அஞ்சலி உரை ஆற்றியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்தோருக்கும் , இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (23.01.2018) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

**தாளையம்பதி வீதி,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.**

(CS 00301)(14,17)

**குடும்பத்தினர்.**
**077 958 1741**

## மரண அறிவித்தல்

### சுப்பையா செல்வரத்தினம் (சின்னத்தம்பி)



பிறப்பு 20.04.1939 — இறப்பு 21.01.2018

கொக்குவில் மேற்கு கொக்குவிலைச் சேர்ந்த சுப்பையா செல்வரத்தினம் 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் மருமகனும், சிவாசினி (ஜேர்மன்), கிருபாலினி (லண்டன்), மாலினி (லண்டன்), விமலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீபாஸ்கரன், தயாபரன், கபிலன் ஆகியோரின் மாமனும், பரமேஸ்வரி, இராசரத்தினம் மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் கமலாதேவி, மகாலட்சுமி, சின்னராசா (கனடா) ஆகியோரின் சகோதரனும், நிருஜா, அருண்யா, அருணன், அனுஜன், லக்ஷன், மினோஷன், தனுஸ்க்கா, சாருஜன், சுருத்திகா, அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2018) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி,**
**கொக்குவில் மேற்கு.**

தகவல்:
**செ.விமலன் (மகன்)**

**077 187 7726**

(ano 9090) (13.17)

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka




Pearson BTEC WOLVERHAMPTON UNIVERSITY OF CANBERRA RICS CIOB
UGC Recognized TVEC Approved

20 YEARS
ISO 9001:2015 CERTIFIED



BCAS Ranked "Platinum Partner" No.1 once again

**COMPUTING**
- Access (Degree Foundation Programme)
- BTEC HND in Computing
  - Network Engineering
  - Software Engineering
  - Applications Development
- BSo (Hons) in Computing
- BSc (Hons) in Management of IT

**MANAGEMENT**
- Diploma in Business Management (BMAC)
- BTEC HND in Business Management
- BTEC HND in Marketing
- BTEC HND in HR Management
- BA (Hons) in Business Management

**BUILDING STUDIES**
- CAD & BS
- BTEC HND in Quantity Surveying
- BSc (Hons) in QS (RICS)

**LEGAL STUDIES**
- LLB (Hons) in Law

**ENGINEERING**
- BTEC National Diploma in Engineering
- BTEC HND in Civil Engineering
- HND in Electrical & Electronic Engineering
- BSc / BEng (Hons) in Civil Engineering

**BIOMEDICAL SCIENCE**
- Foundation in Science
- BTEC HND in Biomedical Science
- BTEC HND in Biotechnology
- BSc (Hons) in Biomedical Science

**LANGUAGE & TEACHING**
- Diploma in English
- Certificate in English

**POSTGRADUATE STUDIES**
- Extended Postgraduate Diploma Level 7
- MBA
- MSc in Construction Project Management

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318

Jaffna Campus, 16, Point Pedro Road, Jaffna.

Mount Campus: 54, Galle Road, Mt. Lavinia. T : 011 272 8082
Kandy Campus: 344, Peradeniya Road, Kandy. T : 081 222 4731
Kalmunai Campus: 392/1, Main Street, Kalmunai. T : 067 222 6899
Corporate Office: 32, Dharmarama Road, Colombo 6. T : 0112597217

021 221 9910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 09 . 1930 — மறைவு 22 . 01 . 2018

### திருமதி கியூறி இராசமணி சிவலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை)

துன்னாலை கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கியூறி இராசமணி சிவலிங்கம் நேற்று (22.01.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வேதநாயகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முன்னாள் பிரதி அதிபர் பொன்னம்பலம் சிவலிங்கத்தின் (யா/ புன்னாலைக்கட்டுவன் - ஆங்கில மகாவித்தியாலயம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகாம்பிகை, காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் பத்மாவதி, காலஞ்சென்ற அரியதம்பி மற்றும் அருளானந்தம், அரியநாதன் ஆகியோரின் சகோதரியும், திரு.திருமதி சச்சிதானந்த சிவம் காமினிதேவி (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), மகாதேவன், கேதீஸ்வரன் ஆகியோரின் சிறிய தாயும், துஷ்யந்தன், சோபிகா ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி இறைவழிபாடு இன்று (23.01.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்க ஆராதனை கட்டைவேலி மெதடிஸ்த சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"மணிமகால்"**
**துன்னாலை கிழக்கு, கரவெட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

077 167 9896


(cs. 336) (13.17)

# தின வணிகம்

## சந்தைப் பரம்பலில் கவனம் கொள்ள வேண்டிய காரியங்கள்

செ.கயல்

பங்கு தரகு நிறுவனங்களில் வணிகம் செய்யாமல், அலுவலகங்களிலிருந்தோ அல்லது வெளியிலிருந்து (On the go) 'தின வணிகம்' செய்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கிய விதிகள் குறித்து இந்தப் பகுதியில் நோக்குவோம்.



- தங்க விதி (The Golden Rule) தின வணிகம் செய்வதை தவிர்க்கவும். பங்கு சந்தையில் இலாபமீட்ட தின வணிகம் மட்டுமே வழியல்ல. வேறு பல வழிகளும் உள்ளன. பங்கு சந்தையின் நிலைகளை தொடர்ந்து பார்க்க இயலாத பட்சத்தில் தின வணிகம் செய்வதை தவிர்ப்பதே நல்லதாகும்.

பொதுவாக தங்க விதி என்பது நடைமுறை வாழ்வில் கடைபிடிக்க முடியாத ஒன்றாகும். எனவே பிற விதிகள் குறித்து பார்ப்போம்.

- அதிகாலையில் அலுவலகத்துக்கு செல்லும் முன்பாக அன்றைய தின வணிகத்துக்கான தீர்மானத்தை மிகத் தெளிவாக திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். உதாரணமாக, "இன்றைக்கு இலாபம் என்று வந்தால் இவ்வளவு, நஷ்டம் என்று வந்தால் இவ்வளவு எனவும், நாளின் நடுவில் இன்னும் சிறிது உயர்த்தி விற்கலாம்." என்ற எண்ண மேலீட்டினை கொண்டிருக்கக்கூடாது. அதேபோன்று, விலை உயர்ந்துவிடும் நஷ்டத்தை குறைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணமும் கூடாது.
- அதிகாலையில் தின வணிகத்துக்குரிய திட்டங்களை மேற்கொள்ளும் போது, இலக்கு விலை (Target Price) இவ்வளவு என நிர்ணயிக்கயிக்கும்போது, அதே விலைக்கே உங்களின் விலையும் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உதாரணமாக, காலையில் 'டெக்னிகல் சார்ட்' வைத்து பார்க்கும் போது ஐடியா செல்லுலார் முந்தைய விலை 83.55 என்றும், இன்றைக்கு அதன் இலக்கு விலை 88 என தோன்றினால், சந்தையின் ஆரம்பத்தில் அதனை நீங்கள் 83.85 என்ற விலைக்கு வாங்கினால் இலக்கு விலையான 88 என்ற விலைக்கு பதிவுகளை மேற்கொள்ளாது 87.50 மற்றும் 87.75 என்ற விலை கேள்விக்கு இடைப்பட்ட விதமாக செயற்படுவது சிறந்தது. நீங்கள் பங்கு தரகு நிறுவனத்தில் இருந்து வணிகம் செய்தால்,இறுதி நேரத்தில் 'பதிவுகளை' (Orders) மாற்ற முடியும். அவ்வாறு இயலாத பட்சத்தில் வாங்கிய உடன் உங்கள் இலக்கு விலையை போட்டுவிடுவது நல்லது. உங்கள் கேள்விக்கான 'பதிவு விலை வரிசையில்' (Order Queue) முதலில் (Priority) இருக்கும்.

அதேபோன்று குறுகிய கேள்வி நிலை (s_ort Positions) இருக்கும் போது, அதே இலக்கு விலைக்கு ஏற்ப செயலாற்ற வேண்டும் என்பதில்லை. அதற்கு முந்தைய நிலையிலும் அதனை ஈடு செய்துவிடலாம். இவை அனைத்தையும் தெரிந்துகொண்டும் பலர் இந்த இடத்தில் தடுமாறுகின்றனர்.

- மிக மிக முக்கியமான விதிகளில் ஒன்று, தின வணிக திட்டம் இலாபத்திலோ அல்லது நஷ்டத்திலோ முடிந்தவுடன் அப்படியே விட்டுவிட்டு வேறு வேலைகளை செய்ய முற்படுவது உத்தமம். இலாபத்தை அதிகரிப்பதையோ, நஷ்டத்தை குறைக்கும் பொருட்டோ அன்றைய தின அலுவலக வேலைப் பளுவில் மேற்கொள்ளும் அவசர கால திட்டங்கள் (Emergency Contingency Plans) அனைத்தும் 99 வீதமும் நஷ்டத்தையே மேலும் அளிக்கக் கூடும்.
- டெக்னிகல் சார்ட் (Technical Charts) 100 வீதமும் நம்பகமானது கிடையாது. தொழில்நுட்ப பகுப்பாய்வை நீங்கள் செய்தாலும் சரி அல்லது அனுபவம் வாய்ந்த நிபுணர் ஒருவர் செய்தாலும் சரி குறிப்பிட்ட இலக்கு விலையை 100 வீதமும் அன்றைய தினத்தில் எய்தவேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம். தொழில்நுட்ப பகுப்பாய் என்பது தேவையற்றது. அவை உபயோகமற்றவையல்ல. இருந்தபோதும் அவற்றின் மீது அதீத நம்பிக்கை கொள்ளக்கூடாது.

ஆக, பங்கு சந்தையில் நுழைந்த ஒவ்வொருவரும் முதலில் ஈர்க்கப்படுவது தின வணிகத்தில்தான். குறிப்பாக எந்த அனுபவமும் இல்லாமல், குழுமங்களை பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்கள் கூட, இதில் மிகுந்த உற்சாகமாக ஈடுபடுவார்கள். சிலருக்கு முதல் சில தின வணிகங்களில் இலாபம் கூட கிடைக்கலாம்.

இவர்கள் நினைவில் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. குறிப்பாக, 'வாரன் பப்பெட்' என்பவர் பங்கு சந்தை முதலீட்டை மட்டுமே மேற்கொண்டு உலக கோடீஸ்வரர்களில் ஒருவரானவர். ஆம், 1960 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் முதலீடு செய்ய அவரிடம் தொகை இருந்தபோதிலும், சரியான விலையில் மட்டுமே முதலீடு செய்ய வேண்டுமென்ற எண்ண மேலீட்டோடு ஏறத்தாழ 10 வருடங்கள் காத்திருந்தார். அதன் பின்பாக வந்த ஒரு பெரும் அமெரிக்க பங்கு சந்தை சரிவில் அனைவரும் பங்குகளை விற்றுவிட்டு அதிலிருந்து விலகிச் சென்றனர். ஆனால் 'வாரன் பப்பெட்' பெரும் தொகையுடன் நுழைந்தார். வெற்றி கண்டார். பத்து வருடங்கள் காத்திருக்கும் அளவுக்கு அவர் கொண்டிருந்த பொறுமை என்ற அளவு கருவியின் தனித்துவத்தை நாம் அனைவரும் கடைபிடிக்க வேண்டியது மிக முக்கியமான ஒன்று என்பது புரிகிறது.





> பங்கு சந்தையில் நுழைந்த ஒவ்வொருவரும் முதலில் ஈர்க்கப்படுவது தின வணிகத்தில்தான். குறிப்பாக எந்த அனுபவமும் இல்லாமல், குழுமங்களை பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்கள் கூட, இதில் மிகுந்த உற்சாகமாக ஈடுபடுவார்கள். சிலருக்கு முதல் சில தின வணிகங்களில் இலாபம் கூட கிடைக்கலாம்.




# பெப்ரவரி 16இல் ‘நாச்சியார்’ ரிலீஸ்

இயக்குநர் பாலா தயாரித்து இயக்கியுள்ள படம் ‘நாச்சியார்’. ஜோதிகா, ஜி.வி.பிரகாஷ் முன்னணி கதாபாத்திரத்தில் நடித்துள்ள இந்தப் படத்தில் ஜோதிகா முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில், பொலிஸ் அதிகாரியாக நடித்திருக்கிறார். ராக்லைன் வெங்கடேஷ், காவ்யா உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ‘நாச்சியார்’ படத்தின் முன்னோட்டக் காணொலிக்கு நல்ல வரவேற்புக் கிடைத்திருப்பதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்த நிலையில், படம் பெப்ரவரி 16ஆம் திகதி வெளியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உண்மை சம்பவத்தை மையமாக வைத்து உருவாகி இருக்கும் இந்தப் படத்துக்கு இளையராஜா இசையமைத்திருக்கிறார்.

**இலக்கணம் படிச்சவன்**
**யோசிச்சுப் பேசுவான்**



**தலைக்கனம் புடிச்சவன்**
**யோசிக்காமப் பேசுவான்**

## ஸ்மார்ட் போன்

மனிதர்களை
போட்டோ கிராபராக்கியது
விமர்சகராக்கியது
போராளியாக்கியது
பாடகராக்கியது
மீண்டும் எப்போது
மனிதராக்கும்

**ஆண் குழந்தை என்பது**
**“வாரிசு”**



**பெண் குழந்தை என்பது**
**“பரிசு”**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனக்குழப்பம் உருவாகி மறையும். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். சுமாரான வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** முக்கிய பணி நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் சராசரி அளவில் இலாபம் இருக்கும். பெண்கள் தேவை அறிந்து செலவு செய்வது நல்லது.

**மிதுனம்:** நீண்டநாள் தடை விலகும். தொழில், வியாபார வளர்ச்சிக்கான பணியில் ஈடுபடுவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.

**கடகம்:** கலை உணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கும். தாராள பணவரவு இருக்கும்.

**சிங்கம்:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பைப் பயன்படுத்தவும். பணவரவு சராசரி அளவில் இருக்கும்.

**கன்னி:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல் பணிபுரிவது அவசியம். பணவரவு சுமாராக இருக்கும்.

**துலாம்:** புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க உரிய வாய்ப்பு வரும். வருமானம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**விருச்சிகம்:** குடும்பத்தேவை ஓரளவு நிறைவேறும். பிறருக்காக வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறுவது நல்லது.

**தனுசு:** வெற்றிக்கான வாய்ப்பு உண்டாகும். நண்பர்களின் உதவி ஊக்கமளிக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். வரவு, செலவில் முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** அந்தஸ்தை காப்பதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதமாகலாம். குடும்பநலனுக்காகப் பாடுபடுவர்.

**கும்பம்:** சாந்த குணத்தால் சாதனை புரிவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சிப் பணி எளிதாக நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும்.

மது
மாது
சூது

இவற்றில் இறுதி
எழுத்துக்கள் ‘து’
என்று முடிகின்றது.
ஏன் தெரியுமா?
இவை முடிவில்
‘து’ன்பத்தைத்
தருவதால்...



twitter.com/lxnibiOwviSIgYZ

பண்ணை வீட்டில்
இருந்தால் அவன்
பணக்காரன்..
திண்ணை வீட்டில்
இருந்தால் அவன் ஏழை...

twitter.com/Ashok_Apk

நம் சிந்தனைக்கு
மூளையே
முதலாளியாக
இருக்கிறது...

twitter.com/SrilaksmanO

கண்கள் அற்ற பணம்
பலர் கண்களில்
கண்ணீர்வர
காரணமாகிறது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 9 | | | | 6 | 3 | |
| 5 | | | | | | | | 8 |
| 4 | | | | 8 | | | | 9 |
| | | | 4 | | 7 | | | |
| | | 2 | 6 | | | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| 2 | | | | 6 | | | | 5 |
| 1 | | | | | | | | 3 |
| | 4 | 6 | | | | 7 | 1 | |

**நேற்றைய விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 3 | 8 | 6 | 2 | 7 | 9 | 4 |
| 2 | 8 | 4 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 |
| 9 | 7 | 6 | 1 | 3 | 4 | 8 | 2 | 5 |
| 7 | 6 | 8 | 5 | 9 | 3 | 1 | 4 | 2 |
| 3 | 4 | 9 | 2 | 1 | 6 | 5 | 7 | 8 |
| 5 | 2 | 1 | 7 | 4 | 8 | 9 | 6 | 3 |
| 6 | 1 | 2 | 3 | 5 | 7 | 4 | 8 | 9 |
| 4 | 3 | 5 | 6 | 8 | 9 | 2 | 1 | 7 |
| 8 | 9 | 7 | 4 | 2 | 1 | 3 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

## பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்



பூவோடு சேர்ந்த நாரும்மணம்பெறும் என்பது பழமொழியாகும்.
அழகும் மணமும் கொண்ட பல மலர்களை வாழை நாரில் அல்லது நூலில் கட்டி மாலை ஆக்குவோம்.
இயல்பாக மணம் இல்லாத அந்த நாரில் அல்லது நூலில் தொடுக்கப்பட்ட மலர்கள் உதிர்ந்த பின்னரும் கூட அந்தப் பூக்களின் மணம் இருக்கும் என்பதுவே இந்தப்பழமொழியின் நேர் பொருள்.
இந்தப் பழமொழியின் உட்பொருள் சாதாரண மனிதரும் சமூகத்தில் அறிவில், ஆற்றலில், பண்பில் நற்செயல்களில் சிறந்த சான்றோர்களுடன் சேர்ந்து பழகினால் அவர்களது குண நலன்களில் ஓரளவாவது பெற்று விளங்குவர் என்பதாகும்.
இந்தக் கருத்தை ஔவையார் தான் எழுதிய மூதுரை என்ற நூலில்

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க*
*நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே-நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் நன்றே*

எனக் கூறுகின்றார்.
நல்லகுணம் உள்ளவரைக்காண்பதும் அவர் கூறிய நல்ல வழிகளைக் கேட்பதும், அவர்களுடைய நற்பண்புகளை எடுத்துச் சொல்வதும் அத்தகையவரோடு சேர்ந்திருப்பதும் நன்மை தரும் என்பதே இந்தப் பாடலின் பொருளாகும்.
பூவோடு சோர்ந்த நாரும் மணம்பெறுவதைப் போல சான்றோரைச் சார்ந்தாரும் நற்குண சீலர்களாகத்திகழ்வர் என்பதற்கு இந்தப்பாடல் ஒரு எடுத்துக்காட்டாகும்.
பாடசாலை மாணவராகிய நாமும் சிறு வயதிலிருந்தே நல்லவர்களோடு சேர்ந்து நற்குணசீலர்களாக வாழ்வோமாக.

# மனமாற்றம்

கலிங்கம் என்ற நாட்டின் மன்னன் பேராசை பிடித்தவன். பல சிறிய சிறிய நாடுகளைத் தன் வசப்படுத்தி வைத்திருந்தான். இருப்பினும் திருப்தி அடையாது பல பேரரசுகளை வெற்றிகொள்ளவும் முயன்று கொண்டிருந்தான். அதன்படி அவன் அஸ்வமேத யாகம் செய்யப்புறப்பட்டான் அஸ்வம் என்பது குதிரையாகும். ஒரு அலங்கரிக்கப்பட்ட குதிரையை முன்னே போகும் படி செய்து அதன் பின்னே போர் வீரர்கள் காவல் புரிந்து செல்வர். வழியில் எவராவது அந்தக் குதிரையைப் பிடித்துக் கட்டினால் அந்தக் குதிரைக்குரிய மன்னனிடம் போருக்குத் தயார் என்று அர்த்தமாகும். அப்போது அந்த அரசன் அந்த நாட்டவருடன் போர் செய்து கடந்து செல்வான். அந்தக் குதிரையை எதிர்க்காமல் தொடர்ந்து செல்ல அந்த நாடுகளை அவன் வென்றதாக அர்த்தப்படும். இதுவே அஸ்வமேத யாகம் ஆகும் அந்த மன்னன் செய்த அஸ்வமேத யாகத்தில் எவரும் அரசசை எதிர்க்கவில்லை. இதனால் கர்வம்கொண்ட மன்னன் இறுமாப்போடு வீர நடைபோட்டான்.



அப்போது துறவி ஒருவர் எதிரில் வந்து கொண்டிருந்தார். அவன் எதையும் பொருட்படுத்தாமல் மன்னனின் படைகளுக்கு எதிரில் வந்துகொண்டிருந்தார். யார் இந்த சாது? கொஞ்சமும் அச்சமின்றி எனது படைகள் எதிரே வந்து கொண்டிருக்கிறாரே என்று கோபம் கொண்டான் மன்னன்.
"ஏய் ஆண்டிப் பண்டாரமே! என் யாகக் குதிரைக்கு வழிவிடாமல் எதிரே வர உனக்கு என்ன துணிச்சல்? உன் உயிர் மீது ஆசை இல்லையா?" என்று வினவினான். "மன்னர் பெருமானே! நீ பிறக்கும் போது மன்னனாகவே பிறந்தாயா? இல்லையே! மக்களால் தான் ஆக்கப்பட்டாய். நீ பிறக்கும்போது என்ன கொண்டு வந்தாய்? அல்லது போகும் போது என்ன கொண்டு போகப் போகிறாய்? பல நாடுகளைக் கைப்பற்றியுள்ளாய் மலைபோல் பொன்னும் பொருளும் சேர்த்து விட்டாய். இதற்கு மேலும் உன்னை ஆசை விடவில்லையா? செத்த பாம்பை அடிப்பது தான் உன் வீரமா? எல்லா அரசர்களும் உனக்குக் கப்பம் கட்டுகின்றார்கள். அப்படி இருக்க மேலும் போர் எதற்கு? போரில் பலர் உயிரிழக்கின்றனர். அதனால் எத்தனை குடும்பங்கள் நாசமாகின்றன. அனாதைக் குழந்தைகள்; கணவனை இழந்த விதவைகள்; இவர்கள்தான் இனி உன் குடிமக்கள். குடி மக்களை மகிழ்ச்சியோடு வாழ நாட்டைச் செழிப்பாக வைத்துக் கொள்வதுதான் அரசனின் கடமை. அது தான் ஆண்டவன் கட்டளை" என்று சாந்தமாகக் கூறினார். துறவி கூறிய இந்த வார்த்தைகளைக் கேட்ட மன்னன் மனம் வருந்தி துறவியின் கால்களில் விழுந்தான்.
"சுவாமி தாங்கள் என் கண்களைத் திறந்து விட்டீர்கள். அறியாமையாலும் பேராசையாலும் மாபெரும் தவறு செய்து விட்டேன். இந்தப் பாவச் செயலில் இருந்து மீள தாங்கள் தான் எனக்கு வழி கூற வேண்டும்" என வணங்கினான்.
"மன்னா தவறு செய்வது மானிடனின் இயல்பு. நீ அதை உணர்ந்து விட்டாய். உனக்கு ஆண்டவன் பாவ மன்னிப்பு அளிப்பார். நீ செய்ய வேண்டியதெல்லாம் அபகரித்த நாடுகளை அந்த நாட்டு அரசர்களிடம் ஒப்படைத்துவிடு. கொள்ளையடித்த பொருள்களைக் கொண்டு ஏழை, எளியவர்களுக்கு மற்றும் போரினால் நாசமடைந்த குடும்பங்களுக்கு உதவி, மறுவாழ்வு கொடு. உண்ண உணவு உடுக்க உடை, தங்கவீடு ஆகியவை மக்கள் மகிழ்ச்சியோடு வாழ அத்தியாவசியமானவையாகும்.
அரசன் துறவியின் அறிவுரைப்படிதன் வீரர்களை, நாடு திரும்பக் கட்டளையிட்டான் தான் கொள்ளையடித்த பொருள்களை ஏழை எளியவர்களுக்கு வாரி வழங்கினான். அமைச்சரை அழைத்து துறவி கூறியவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கட்டளையிட்டான்.



## குரங்கு

குரங்கு நல்ல குரங்கு - இது
குச்ச வெளிக் குரங்கு
மரங்கள் மீது தாவும் - பின்பு
மண்ணின் மீது பாயும்

பல்லைப் பல்லை இளிக்கும் - இது
பாலரைக் கண்டால் சிரிக்கும்
காசு பணமும் கேட்கும் - நல்ல
காவடியும் ஆடும்

குட்டிக்கரணம் போடும் - பல
குளப்படிகள் செய்யும்
கையைக் கையை நீட்டும் - நல்ல
கடலை பழமும் தின்னும்

வேடிக்கை பலவும் செய்யும் - பல
வித்தைகளும் காட்டும்
குரங்கு நல்ல குரங்கு - இது
குச்ச வெளிக் குரங்கு

## அடைப்புக்குள்ளிருந்து பொருத்தமான சொல்லை தெரிவோம்

1. சமையலுக்கு உதவுவது. (புளி / புழி)
2. முட்டை இடுவது. (கோலி / கோழி)
3. எருது இழுப்பது. (வண்டி / வன்டி)
4. பசு மேய்வது. (புள் / புல்)
5. காட்டில் வாழ்வது. (யானை / யாணை)
6. பழங்களில் ஒன்று. (பளா / பலா)
7. வானில் இருப்பது (நிலா / நிளா)
8. மரத்தில் இருப்பது (இலை / இளை)
9. கையில் இருப்பது (விறல் / விரல்)
10. மழைக்கு உதவுவது (குடை / கூடை)





## வர்ணம் தீட்டுவோம்

## மனிதன் செய்யும் ஆறு தவறுகள்



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உரோமானிய தத்துவஞானி சிசரோ மனிதனுடைய தவறுகளாக அல்லது குறைகளாக ஆறு விடயங்களைக் குறிப்பிடுகிறார்.

1. மற்றவர்களை இருட்டடிப்புச் செய்தால் தங்களுடைய மதிப்பு உயர்ந்து விடும் என்று எண்ணுவது.
2. மாற்ற முடியாத அல்லது திருத்த முடியாத விஷயங்களுக்காக வீணாகக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது.
3. தன்னால் செய்யமுடியவில்லை என்பதற்காக அந்தக் காரியத்தை எவருமே செய்ய முடியாது என்று எண்ணுவது.
4. அற்ப விடயங்களை ஒதுக்கித்தள்ள மனமில்லாமல் சஞ்சலப்படுவது.
5. படித்துப் பயின்று மனதைப் பண்படுத்திக் கொள்ளாமல் காலத்தை விரயமாக்குவது.
6. தான் நம்புவதை மற்றவர்களும் நம்பவேண்டும் என்றும் தான் வாழ்கின்றபடி மற்றவர்களும் வாழ வேண்டும் என்றும் கட்டாயப்படுத்துவது.

Galaxy Star
வெற்றி வாரம் 231 / திகதி 21.01.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 07 30 31 47
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,408,900/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1435
சீட்டிழுப்பு திகதி 22.01.2018
வெற்றி இலக்கங்கள்
01 26 29 42 W
ஆங்கில எழுத்து
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்போட்
ரூ. 15, 526, 924/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்கள்

## திருமதி சறோஜினி துரைராசா



*(கீரிமலை வீதி, சித்தன்கேணி)*

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி துரைராசா கடந்த (20.01.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கைச்சியம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற அப்புக்குட்டி மற்றும் இரத்தினம் தம்பதியரின் மருமகளும் துரைராசாவின் மனைவியும் வனஜா (இத்தாலி), சசிக்குமார் (இத்தாலி), புஸ்பலதா (ஜேர்மன்), ஜெயக்குமார் (அப்புக் காத்து), யசோதா ஆகியோரின் தாயாரும் பரராசசிங்கம் (இத்தாலி), கல்பனா (இத்தாலி), சுதாகரன் (ஜேர்மன்), காலஞ்சென்ற சுதாராணி ஆகியோரின் மாமியும் பிரின்ஸிகா, பிரவின், சஜித், சஞ்சய், சந்தோஸ், அபிஷேக், அக் ஷயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கீரிமலைவீதி, சித்தன்கேணி. 0774724038** (CS 13169/15/17) **குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமதி பராசக்தி சுப்பிரமணியம்



**தோற்றம்** 10.05.1928 **மறைவு** 19.01.2018

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சுப்பிரமணியம் (19.01.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கைலாசப்பிள்ளை மாரிமுத்து தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற முருகேசு வள்ளியம்மை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், கனகரத்தினம், சரஸ்வதி ( ஆங்கில விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்), பொன்னுத்துரை (பொறியியலாளர்) மற்றும் பொற்கொடி (கனடா), இராசபாக்கியம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், செல்லம்மா, இரத்தினம், இராசையா, வேலாயுதம், கந்தசாமி, தங்கரத்தினம் மற்றும் கனகமணி, மாலினி (கனடா), திருநாவுக்கரசு, சாந்தினி ஆகியோரின் அன்புமைத்துனியும் தணிகாசலம், தவராசா, திலகவதி காலஞ்சென்ற மங்கையற்கரசி கௌரி மனோகரி (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி) .செந்தூர்லிங்கம் மற்றும சத்தியலிங்கம் (இந்தியா), நந்தகுமார் (பிரான்ஸ்), பத்மநிதி .கலாநிதி ஆகியோ ரின் அன்புத் தாயாரும் பாலகௌரி, சாரதாதேவி, செல்வராசா (துரை கராஜ்), பவளநாதன், இந்திரா (இந் தியா), தபோநிதி (பிரான்ஸ்), தேவகுலசிங்கம் ஆகியோரின் அன்புமாமியும் கபில்ராஜ் (பிரான்ஸ்), பிரியராஜ், பானுரேகா (லண்டன்), சுபாங்கினி (கன்டா), ஹேமலதா, சங்கீதா, துவாரகா , தாரகை, பிர தீபா (கனடா), சுரேஸ்குமார் (கனடா), விஜிதா (லண்டன்), பகீரதி (பிரான்ஸ்), இந்துகா (கனடா), சிந்தியா, லவகாந்த் ( அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், நல்லூர்), கோபிநாத் (லண்டன்), செந்தூர்க்காந்த் . பிரதீப் (இந்தியா),சுகன்யா (இந்தியா), பிரதீஸ் (இந்தியா), அபிராம் (பிரான்ஸ்) , லக்சிகா (பிரான்ஸ்), துவாரகன், விவே தரன், ஹரிகரன், ஸ்ரீவித்யா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பெனநாத் (லண்டன்), கிரிஸ்நாத் (லண்டன்), அஜீன் (கனடா), சுபீன் (கனடா), மனுஸ்ரீ (கனடா), சேரன் (கனடா), யுவன் (கனடா), நேத்ரா (கனடா), ஸ்ருதி (லண்டன்), ஆருதி (லண்டன்), கிஷன் (பிரான்ஸ்), கிஷாரா (கனடா), ரிஸ்விகன் (லண்டன்), ரக்ஷயா (லண்டன்) ஆகி யோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2018) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்திரகாளி கோயிலடி,**
**திருநெல்வேலி மேற்கு**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**தணிகாசலம் (075 0289 899),**
**தவராசா ( 077 4979 373),**
**நந்தகுமார் ( பிரான்ஸ் 0033 768 708 624)**

(cs/13176)(16)

### வான் விற்பனைக்கு

செல் மொடல் வான் (Toyota) 51xx விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-
**077 969 7472 (யாழ்ப்பாணம்)** (C31837.16)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 இல் பிறந்த பொறியியலாளர், சிங்கப்பூரில் தொழில் புரிபவருக்கு மணமகள் தேவை செவ்வாய், சூரியன், சந்திரன் 4 ஆம் வீட்டில் உள்ளது.
**தொடர்பு-077 656 5258** (CS 13178.16)

### வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிநின்று வீட்டுவேலை செய்வதற்கும் பிள்ளையை பராமரிப்பதற்கும் 35 - 60 வயது வரையான பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
**தொடர்பு - 077 2246 887** (CS 13172/15/17)

### வாகனம் வாடகைக்கு விடப்படும்

10 1/2 நீளமுள்ள JMC வாகனம் (லொறி) மூடிய நிலையிலுள்ளது.
**தொடர்பு - 077 844 8797** (CS 13184/15)

### விற்பனைக்கு

சாம்சங் J5ஆறு மாத(Warranty) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 075 082 4530 (C.8371,16)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:2985 திகதி:22.01.2018 திங்கட்கிழமை
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 37 50 60 67 F
போனஸ் இலக்கம் 34
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 41,571,985/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AKண டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 145
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.01.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,687,365/-
வெற்றி இலக்கங்கள் 21 29 48 52 M
ஆங்கில எழுத்து
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### படிப்பகம் புத்தக நிலையம்

- அரிதான புத்தகங்களை மலிவான விலையில் கொள்வனவு செய்யலாம்.
- இந்தியாவில் இருந்து வெளிவரும் புத்தகங்கள் மலிவு விலையில் கொள்வனவு செய்யலாம்.
- உசாத்துணை/இரவல் சேவைகள் இடம்பெறும்.

**ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதற்கான கல்வியியல்சார்ந்த நூல்களையும் பெற்றுக் கொள்ளலாம். (MEd, BEd, PGOM)** (CS 13177/15)
**No. 52, Palaly Road, Thirunelvely (Near Sampath Bank), Jaffna. 021 205 2240, 077 386 7458**

### திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்

ஆங்கில ஆசிரியர் தேவை. தகைமையுடையோர் விண்ணப்பிக்கவும்.
சம்பளம் ரூபா 13500 இற்கு மேல்.
நேர்முகதெரிவு : 27.01.2018 சனி 3.00 மணி

**தொடர்பு :**
**021 221 6933, 077 656 5258**
**077 386 7458** (CS13179.15)

**ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி**
**(150 m திருநெல்வேலி சந்தி)**

## மரண அறிவித்தல்

## மரியாம்பிள்ளை இராசேந்திரம்



ஊராவில், காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை இராசேந்திரம் நேற்று (22.01.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - அருளம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற ஞானம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் மரியம்மா, நேசம்மா, காலஞ்சென்ற பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற யோசவ் மரியாம்பிள்ளை, பத்திநாதர், மரியதாஸ் ஆகியோரின் மைத்துனரும், அலோசியஸ், அருள்ராஜ், மாலா, மகேந்திரன், சுரேஷ்,யூட், யூலி, யூலியன், நீகன், பிறின்சிலி, காலஞ்சென்ற பயஸ் மற்றும் அருட்சகோதரி மேரி வினோதா (அ.கா), வினி, அருட்சகோதரி Dr. வேஜினி பப்ரிஸ்ரா (தி.சி) ராஜன், ஜோர்ஜ், காலஞ்சென்ற யோய் மற்றும் ஜோஜியா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.01.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆன்ம சாந்தி வழிபாட்டைத் தொடர்ந்து தூய அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, தூய அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**Sr. Mary Vinodha (மருமகள்)**

021 205 1992

உதயன்
advt@uthayan.com, 021 493 1111
விளம்பர தொடர்புகளுக்கு




ES Printers
பனர் பிரிண்ட் (Banner), 35/=
மணியம் கபே
சைவ உணவகம்
Maniyam Cafe
Vegetarian Hotel
347, Kasthuriyar Road, Jaffna.
075 054 3823
JUICE
சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.
Premier
Travels & Tours
அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்
மக் பிரிண்ட் (MUG) 450/=
Special Promotions
Mon - Sat 7 AM - 10 PM
Sun & Bank Holiday 8 AM - 9 PM
Thank you for your custom, see you again
K'si
காசி
Jaffna
Premier express
Just 1 Minute Walk
OPENING HOURS
Mon-Sat 7 AM - 10 PM
Sunday & Bank holidays 8 AM - 9 PM
The National Lottery
ALL MAJOR DEBIT AND CREDIT CARDS ACCEPTED
FREE CAR PARKING
Your Local Convenience Store
BATTLE NORTH
Rubber stamp
பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்
# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor, Chavakachcheri
esprintersjaffna@gmail.com
021 492 7432

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 500 | 500 | 300 |
| கணவாய் | 700 | 900 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 1000 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 500 | 400 | 500 | 800 |
| விளை | 500 | 400 | 500 | 800 |
| முரல் | 350 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 350 | – |
| கிளாக்கன் | 800 | – | 400 | – |
| ஒரா | 350 | 300 | 500 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | – |
| சூடை | 150 | 150 | 200 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 400 | 300 |
| மதனம் | 200 | 250 | 250 | 500 |
| கொய் | 150 | 100 | 80 | 100 |
| பாலை | 150 | 300 | 400 | 400 |
| வாளை | 108. | 200 | 300 | 400 |

# கர்ப்ப காலத்தில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டிய உணவுகள்



கர்ப்பமாக இருக்கிறார்கள் என்பதற்காக பலர் பெண்களுக்கு அதிக உணவுகளை சாப்பிடக் கொடுப்பது வழக்கம். அது தவறு. பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் உடலின் நிறை அதிகரிப்பதை கவனமாகக் கண்காணிக்க வேண்டும். பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் அதிகரிக்க வேண்டிய நிறையைவிடகூடுதலாகவோஅல்லதுமிகவும்குறைவாகவோ எடை இருக்க கூடாது.

கர்ப்ப காலத்தில் சில உணவுகளைக் கட்டாயம் பெண்கள் தவிர்க்க வேண்டும். கர்ப்பிணிகள் அதிகம் டீ, கோப்பி அருந்தக்கூடாது. கர்ப்ப காலத்தில் குருதி அழுத்தம் மாறக்கூடும். அதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதால் மருத்துவர் ஆலோசனைப்படி தேவைப்பட்டால் உப்பின் அளவை மாற்றலாம். குருதிக் கொதிப்பு இருக்கிறது என உப்பை ஒரேயடியாக குறைத்து விடவோ தவிர்க்கவோ கூடாது. அது மிகவும் ஆபத்தானது.

பொதுவாகவே மனிதர்களுக்கு உப்பு அவசியம். கர்ப்ப காலத்தில் பெண்கள் உப்பைத் தவிர்த்தால் அது பெண்களின் உடல்நலனையும் குழந்தையின் வளர்ச்சியையும் பாதிக்கும். பெண்களுக்கு கைகால்கள் வீக்கம் அதிகரிக்கும். நரம்பு மண்டலம் பாதிக்கப்படும். எனவே கவனம் தேவை.

கர்ப்ப காலத்தில் பெண்கள் புகையிலை போடக்கூடாது. மது அருந்துதல். புகை பிடித்தல் போன்ற பழக்கம் உள்ள பெண்கள் அதை உடனடியாக நிறுத்துவது நலம். பின் எந்த காலத்திலும் அதை தொட வேண்டாம். ஏனென்றால் அவை பெண்களை மட்டுமல்ல குழந்தையின் உடல்நலனையும் கடுமையாகப் பாதிக்கும்.

வீட்டில் உள்ள வேறு யாருக்காவது புகை பிடிக்கும் பழக்கம் இருந்தால் கூட கர்ப்பிணிகளுக்கு அது ஆபத்தாகும். எனவே வீட்டில் எவரையும் புகை பிடிக்க அனுமதிக்க வேண்டாம்.

தெருவோர கடைகளில் விற்கும் உணவுகள், பொதிசெய்யப்பட்ட உணவுகள், ஜூஸ் ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது. சுகாதாரமான சூழ்நிலையில் தயாரிக்கப்பட்ட உணவுகளை மட்டுமே சாப்பிட வேண்டும். குறிப்பாக அசைவ உணவுகளை வீட்டில் தயாரித்து சாப்பிடுவது நலம்.

கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு திடீரென்று சில உணவுகள் மீதுஆர்வமும்வெறுப்பும்ஏற்படும். அப்போதுஆரோக்கியமற்ற எதையும் சாப்பிடாமல் கவனமாக இருக்க வேண்டும்.

மேலும் பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய், குருதிக் கொதிப்பு. போன்ற பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்பதால் அச்சமயத்தில் மருத்துவர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களின் ஆலோசனைப்படி உணவு கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும்.

மருத்துவர்களின் ஆலோசனைகள் இல்லாமல் சுயமாக எந்த மருந்தையும் வாங்கி சாப்பிடக்கூடாது.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 100 | 40 | 100 | 40 |
| கத்தரி | 100 | 150 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 30 | 40 | 30 |
| பயிற்றை | 140 | 150 | 140 | 140 | 140 |
| பாகல் | 120 | 240 | 160 | 120 | 200 |
| க.கிழங்கு | 60 | 60 | 50 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 120 | 140 | 120 | 160 | 140 |
| சி.வெங்காயம் | 230 | 350 | 250 | 240 | 140 |
| பூசணி | 45 | 50 | 45 | 50 | 40 |
| தக்காளி | 50 | 80 | 50 | 80 | 40 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 70 | 60 |
| கீரை | 20 | 40 | 30 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 30 |
| ப.மிளகாய் | 110 | 180 | 120 | 120 | 100 |
| புடோல் | 65 | 70 | 80 | 80 | 80 |
| கோவா | 50 | 80 | 50 | 50 | 40 |
| வெண்டி | 100 | 100 | 140 | 100 | 80 |
| போஞ்சி | 130 | 180 | 140 | 160 | 200 |
| லீக்ஸ் | 220 | 200 | 220 | 200 | 240 |
| தேங்காய் | 75 | 80 | 95 | 100 | 70 |
| உ.கிழங்கு | 50 | 60 | 60 | 80 | 60 |
| தேசிக்காய் | 50 | 40 | 50 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 60 | 20 | 20 |
| கறிமிளகாய் | 160 | 250 | 160 | 160 | 140 |
| கரட் | 100 | 150 | 120 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 800 | – | 1200 | – | – |

# தலைமுடி வளர்ச்சிக்கு உதவும் கறிவேப்பிலை

தலைமுடியின் ஆரோக்கியம் குறித்து ஆண்களும் பெண்களும் அதிகம் கவலைகொள்கின்றனர். அவர்களுக்கு அருமருந்தாக விளங்குகிறது கறிவேப்பிலை.

பொதுவாக உணவுகளில் வாசனைக்கும், சுவைக்கும் கறிவேப்பிலை பயன்படுத்தப்படுகிறது. அதில் பலவிதமான பயன்களும் அடங்கியிருக்கின்றன.

முக்கியமாக, தலைமுடி வளர்ச்சிக்கு கறிவேப்பிலை வெகுவாக உதவுகிறது. ஆரோக்கியமான, பிரகாசமான கேசத்தைப் பெறுவதற்கு கறிவேப்பிலை கைகொடுக்கிறது.

பாதிப்படைந்துள்ள முடி வேர்களைச் சீர் செய்யும் இரசாயன சிகிச்சைகள், வெப்பமாக்கும் கருவிகள், மாசு போன்ற பல காரணங்களால் முடியின் வேர்கள் பாதிப்படையலாம். இதனால் முடியின் வளர்ச்சி நின்றுகூடப் போகலாம். அப்படி பாதிக்கப்பட்ட தலைமுடி வேர்களைச் சீர்செய்யும் திறனைக் கொண்டுள்ளது கறிவேப்பிலை. அதற்குக் காரணம். இவை முடிக்குத் தேவையான ஊட்டத்தை அளிக்கின்றன.



கறிவேப்பிலை விழுதை நேரடியாக தலைச்சருமத்தில் தடவிக் கொண்டால், வேர்களை அது சீர்செய்யும். மேலும் முடித்தண்டுகளின் வலுவை மீண்டும் பெறச் செய்யும். முடிந்தால் கறிவேப்பிலை விழுதை அப்படியே உண்ணலாம். கேசத்தின் வேர்களை கறிவேப்பிலை வலுவடையச்செய்வதால், முடியின் வளர்ச்சியும் வேகம் பிடிக்கும்.

கறிவேப்பிலையைத் தொடர்ந்து பயன்படுத்தி வருவதால் முடி கொட்டுதல் குறையும். இதில் புரதமும் பீட்டாகரோட்டினும் வளமையாக உள்ளன. இது முடி உதிர்வைக் குறைத்து, அதன் வளர்ச்சியை அதிகரிக்கும். புரதச்சத்துக் குறைபாட்டினால்கூட முடி உதிர்வு ஏற்படலாம். அதனால், கறிவேப்பிலையை சீரான முறையில் எடுத்துக் கொண்டால், முடி வளர்ச்சி அதிகமாகும்.


கறிவேப்பிலையில் ஆன்டிஆக்சிடென்டுகளும் நிறைந்திருக்கின்றன. அதனால் அது தலைச்சருமத்துக்கு ஈரப்பதத்தை அளிக்கும். இறந்து போன முடித்தண்டை நீக்கவும், பொடுகைத் தடுக்கவும் இது உதவும்.

இவையெல்லாம் தவிர, கறிவேப்பிலை வயிற்றுப்போக்கைத் தடுக்கும், சமிபாட்டு அமைப்புக்கு நல்லது. கெட்ட கொலஸ்ட்ராலை குறைக்கவும் கறிவேப்பிலை உதவுகிறது. இப்படி இதன் பயன்களை கூறிக்கொண்டே போகலாம்.

இனிமேலாவது கறிவேப்பிலையை உணவில் இருந்து எடுத்தெறிந்து விடாமல் உட்கொண்டு பயன்பெறுவோம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 04 . 1962



இறப்பு 22 . 01 . 2018

### செல்வராசா சிறிகாந்தராசா (சிறி)


5ஆம் ஒழுங்கை, அரசடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வளாக வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சிறிகாந்தராசா (சிறி) நேற்று (22.01.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னு செல்வராசா - பூமணி தம்பதியரின் அன்பு மகனும்குமார்-சந்திரதேவிதம்பதியரின்அன்புமருமகனும்அருந்ததி (குண்டு) இன் அன்புக் கணவரும் கயந்திரன் (கயன்), கௌசிதரன் (கௌசி)ஆகியோரின்அன்புத்தந்தையும்ஆனந்தராசா,செல்வராணி, விசயா, மதி, செல்வி, வாவா, காலஞ்சென்றவர்களான கிளி, றஞ்சன், சின்னதம்பி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2018) புதன் கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## காலிறுதியில் பெடரர்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரர்.

காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து ஹங்கேரியின் புக்சோவிக்ஸ் மோதினார். ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 6:4, 7:5, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் பெடரர். (ம)

# டிப்போர்டிவோவை நொறுக்கியது ரியல்



ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

மட்ரிட்டை எதிர்த்து டிப்போர்டிவோ மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் என்னவோ டிப்போர்டிவோவுக்குச் சாதகமாகவே அமைந்தது. 23ஆவது நிமிடத்தில் அந்த அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார் அட்ரெய்ன். 32ஆவது நிமிடத்தில் நாச்சோ மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 42ஆவது நிமிடத்தில் பேல் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது ரியல் மட்ரிட்.


இரண்டாவது பாதியின் 58ஆவது நிமிடத்தில் பேல், 63ஆவது நிமிடத்தில் லூக்கா கோல்களைப் பதிவுசெய்ய 4:1 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது மட்ரிட். ரியல் மட்ரிட்டின் நட்சத்திர வீரர் 78ஆவது மற்றும் 84ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தார். மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்த நாச்சோ 88ஆவது நிமிடத்தில் இறுதிக் கோலையும் பதிவுசெய்தார். முடிவில் 7:1 என்ற கோல் கணக்கில் டிப்போர்டிவோவை நொறுக்கியது ரியல் மட்ரிட். (ம)




## ஏப்ரல் 7ஆம் திகதி ஐ.பி.எல். தொடர்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் 7ஆம் திகதி ஆரம்பமாகும் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதைவிட மேலும் சில மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. ஐ.பி.எல். தொடரின் 11ஆவது சீசன் இந்த வருடம் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. நடப்பு வருடத் தொடரில் சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகள் களமிறங்குவது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தொடர் தொடர்பான அறிவிப்புக்கள் அடுத்தடுத்து வெளிவரும் நிலையில் நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் 7ஆம் திகதி முதல் மே மாதம் 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது ஆட்டமும் கடைசி ஆட்டமும் மும்பை வான்கடே மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இரவு 8 மணிக்கே ஐ.பி.எல். ஆட்டங்கள் நடத்தப்படுவது வழமை. ஆனால் இனிவரும் காலங்களில் இரவு 7 மணிக்கு அந்த ஆட்டங்கள் நடத்தப்படவுள்ளன. (ம)

## காயமடைந்தார் றொனால்டோ




லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற டிப்போர்டிவோவுக்கு எதிரான ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் றொனால்டோவுக்கு குருதி காயம் ஏற்பட்டது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் றொனால்டோ இரண்டு தனிநபர் கோல்களைப் பெற்றிருந்த நிலையில் அவர் தனது ஹற்றிக் கோலுக்காக முயற்சி செய்தபோது எதிரணி வீரருடன் மோதுண்டே இந்தக் காயம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)



## ஜோகோவிக் வெளியேற்றம்

ஆஸ்திரேலியத் தொடரில் இருந்த வெளியேற்றப்பட்டார் சேர்பிய வீரர் நொவக் ஜோகோவிக். பன்னாட்டுத் தரப்படுத்தலில் 17ஆம் இடத்தில் உள்ளவரான சேர்பிய வீரர் ஜோகோவிக்கை எதிர்த்து கொரிய வீரர் ஹியி மோதினார். ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களிலும் வலுவான ஆதிக்கம் செலுத்தினார் கொரிய வீரர். அவர் அந்த செற்களை முறையே 7:6, 7:5, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற் கணக்கில் ஜோகோவிக்கை வெளியேற்றினார். (ம)



# புர்மாவின் வேகம் புயல் வேகம் பெருமிதப் படுகிறார் டொனால்ட்

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் பும்ராவின் பந்துவீச்சு மட்டில் மிகவும் பெருமிதப்பட்டு தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் நட்சத்திரப் பந்துவீச்சாளர் டொனால்ட்.

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர் பும்ரா மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருகிறார். மிக அண்மையிலேயே டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகமான அவரின் பந்துவீச்சு பலரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது. இந்த நிலையில் தனது பாராட்டைத் தெரிவித்தார் டொனால்ட்.

'இந்தியாவின் வேகப்பந்து வீச்சைப் பற்றிப் பேசுவதற்கு பும்ராதான் முக்கிய காரணம். அவரது பந்து வீச்சு என்னை ஈர்த்தது. புதிய பந்தில் வேகம் மற்றும் துல்லியமான பந்து வீச்சால் மாயாஜாலம் காட்டினார். இரண்டாவது டெஸ்டில் இருந்து புவனேஸ்வர் குமார் நீக்கப்பட்டதை கண்டு ஆச்சரியம் அடைந்தேன்'' என டொனால்ட் மேலும் தெரிவித்தார். (ம)

## பாடும்மீன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 23
யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி சம்பியனானது.

பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## கலைமகள் மகுடம்

யாழ்ப்பாணம், ஜன. 23
நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் அரியாலை கலைமகள் அணி கிண்ணம் வென்றது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. அரியாலை கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடி அரியாலை கலைமகள் விளையாட்டுக் கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து 2 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது கலைமகள் அணி. (ம-23)

## யங்ஹென்றிஸ் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 23
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியின் ஞானரூபன், தொடராட்ட நாயகனாக ஊரெழு றோயல் அணியின் எழசன், சிறந்த கோல் காப்பாளராக யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியின் கோல்காப்பாளர் அமல்ராஜ் தெரிவானார்கள். (ம-23)



# நியூசிலாந்து அணி இலகுவான வெற்றி

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது ரி20 ஆட்டத்தில் நியூசிலாந்து அணி பதற்றம் ஏதும் இல்லாமல் மிகவும் இலகுவான வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 105 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அசாம் 41 ஓட்டங்களையும், ஹசன் அலி 23 ஓட்டங்களையும், அஹமட் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ராஞ்சி, சவுத்தி இருவரும் தலா 3 இலக்குகளையும், சான்நெர் 2 இலக்குகளையும், ஹைட்டின், முன்றோ இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 15.5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை 106 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அதிகபட்சமாக முன்றோ 49 ஓட்டங்களையும், போல்ஸ் 26 ஓட்டங்களையும், ரெய்லர் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாக முன்றோ தெரிவானார். (ம)



## ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 23
நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில், அரியாலை ஐக்கிய அணி கிண்ணம் வென்றது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காமாட்சி விளையாட்டுக் கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக் கழகம் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. (ம-23)

## ஆஸ்திரேலியத் தொடரில் நடால் காலிறுதியில்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால்.

பன்னாட்டுத் தரப்பத்தலில் முதலிடத்தில் உள்ள நடாலை எதிர்த்து ஆர்ஜென்ரினா வீரர் டீகோ மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். இரண்டாவது செற்றை 7:6 என்ற அடிப்படையில் இழந்தார். முதலிரு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றிருந்தன. அடுத்த இரண்டு செற்களையும் முறையே 6:3, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் நடால். (ம)




# ஆஸியின் தலைவராக வோர்னர் நியமனம்

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி-20 தொடரில் ஆஸ்திரேலிய அணியின் தலைவராக வோர்னர் நியமனம் பெற்றார்.

எதிர்வரும் மூன்றாம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகிறது. ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா இரண்டு தடவைகள் மோதவேண்டும். புள்ளிப்பட்டியலில் முதலிரு இடங்களையும் பிடிக்கும் அணிகள் இறுதிக்குத் தகுதிபெறும். இந்தத் தொடர் முடிந்த பின்னர் ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவுக்குச் சென்று நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. தென்னாபிரிக்கத் தொடரைக் கருத்திற் கொண்டு ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித்துக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது. இதையடுத்தே வோர்னர் ஆஸ்திரேலிய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஆஸ்திரேலிய அணி விவரம் - வோர்னர் (தலைவர்), ஆரோன் பின்ச் (துணைத் தலைவர்), அகர், அலெக்ஸ் கேரே, பென் வார்சுயிஸ், ஹெட், கிறிஸ்லின், மக்ஸ்வெல், றிச்சட்சன், ஷிர்ட், பில்லி ஸ்டான்லேக், ஸ்ரொய்னிஸ், டை, சாம்பா. (ம)



"ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவுக்குச் சென்று நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. தென்னாபிரிக்கத் தொடரைக் கருத்திற் கொண்டு ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித்துக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது.

**பணிப்பெண் தேவை**
வீட்டில் தங்கியிருந்து பிள்ளைப்பேறு பார்ப்பதற்கு உடனடியாக பணிப்பெண் தேவை. சம்பளம் - 35.000 /=
தொடர்பு - 077 788 5175,.077 307 2393

**இன்சுவை யாழ்.ஒடியல் கூழ்**
**தினமும் மு.ப. 11 மணிமுதல்**
யாழ் பாடி.
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868.
(CS 13184/15) 0777 360 353, 075 9875 800

**காணி விற்பனைக்கு**
வட்டக்கச்சியில்கட்சன்வீதிக்குஅண்மையில் 5 1/2 ஏக்கர் காணி. புதிய வீடு. கிணறு. வயல். 50 தென்னை மரங்களுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - கி.தர்மலிங்கம் (வவுனியா)
(CS 13184/15) 075 082 4530

# ரியல் பெடிஸ் அணியை வீழ்த்திய பார்சிலோனா



லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து ரியல் பெடிஸ் மோதியது. ஆட்டத்தின் முதல் பாதியில் இரண்டு அணிகளும் சீரான போராட்டத்தை வெளிப்படுத்தின. இதனால் கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 59ஆவது நிமிடத்தில் ராகிடிக் பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 64ஆவது மற்றும் 80ஆவது நிமிடங்களில் மெஸ்ஸி பார்சிலோனாவின் சார்பாக இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய அந்த அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. 82ஆவது மற்றும் 89ஆவது நிமிடங்களில் சுவாரஸ் இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அபார வெற்றிபெற்றது. (ம)



**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**
O/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள் கலந்துகொள்ளும்
இலவச ஆங்கில வகுப்பு [English Workshop]
27. 01. 2018 சனிக்கிழமை
பிரிவுகள் [இரண்டு பிரிவுகளில் ஏதாவதொன்றில் பங்குபெறமுடியும்]
1.காலை 10-12 2.மாலை 03-05
பங்குபற்றியமைக்கான சான்றிதழ் மற்றும் கையேடு இலவசம்.
SAAMSON
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவிலடி) யாழ்நகர்.
021 320 3313 077 1570 486

**BBA. BCom வெளிவாரிக்கான**
புதிய ஆண்டுக்கான பதிவு
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன
**Medium Tamil**
A/L -2017 ஓகஸ்ட் பரீட்சை எடுத்தவர்களும் அதற்கு முற்பட்டவர்களும் விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் ஆவர்.
விண்ணப்ப முடிவு திகதி - 12.02.2018
மேற் குறிப்பிட்ட கற்கைநெறிகள் யாவும் மூன்று ஆண்டுகளாகும்.
விரிவுரைகள் ஆரம்பம்: 17.02.2018
(வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிடம் இலவசம்)
021 222 8148
077 607 1954
077 314 4762
(C 8357)(13.17)
புதிய உயர் கல்லூரி
ஆரிய குளம்,
யாழ்ப்பாணம்.

# பிளாசிஸின் முகத்தில் வெற்றிக்கான புன்னகை



இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டம் ஜோகன்ஸ்பார்க் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. ஆட்டத்துக்கான ஆடுகளத்தில் புற்கள் அதிகம் விடப்பட்டுள்ளதால் பொதுவாக இன்னுமொரு 'கப்டன் கூல்' ஆக இருக்கும் பிளாசிஸின் முகத்தில் வெற்றிக்கான புன்னகை தவழ்கிறது.

இந்த ஜோகன்ஸ்பார்க் ஆடுகளத்தில் வேகம் அதிகம் இருக்கும் என்பது ஏற்கனவே திணறி வரும் இந்தியதுடுப்பாட்ட வீரர்களுக்கு ஒரு கெட்ட செய்தி. ஆனால் இந்தியப் பந்துவீச்சாளர்களுக்கும் புன்னகை வருவிக்கும் ஆடுகளமாக இது அமைந்துள்ளது என்பதால் தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட வீரர்களுக்கும் பிரச்சினைதான். ஆனால் ஏற்கனவே சின்னாபின்னமாகியுள்ள இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு மேலும் சில சுயபரிசோதனைத் தேடல்களை இந்த ஆடுகளம் ஏற்படுத்தும் என்பதே உண்மை.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான செஞ்சூரியனில் தயாரிக்கப்பட்ட ஆடுகளம் குறித்து டுபிளெசிஸ் தனது அதிருப்தியையும் அதிர்ச்சியையும் தெரிவித்திருந்தார். இந்திய பிராண்ட் கிரிக்கெட்டுக்கு ஒத்துவரும் ஆடுகளமாக அது இருந்தும், மோசமான அணித்தேர்வு உள்ளிட்ட பலபிரச்சினைகளால் இந்திய அணி தோல்வியடைந்தது.

இந்தியாவில் நடுநிலையான ஆடுகளத்தை அமைக்காமல் பந்துகள் கடுமையாகத் திரும்பும் ஆடுகளங்களை அமைத்து தங்கள் அணியை வீழ்த்தியது பற்றி பிளாஸிசின் கோபம் அவரது செஞ்சூரியன் ஆடுகளம் பற்றிய கருத்தில் வெளிப்பட்டது. பிளாசிஸின் தலைமைத்துவம் ஆக்ரோஷமானது ஆனால் அதற்காக தாறுமாறான நடத்தையைக் கொண்டதல்ல. அவர் தனது உத்திகளில் கருணையற்ற ஒரு தலைவராக இருக்கிறார். ஆட்டத்தைத் தீர்மானிக்கும் கணங்களை பிளாசிஸ் தனக்குச் சாதகமாக மாற்றுவதில் வல்லவராகத் திகழ்கிறார்.

தனது களவியூகத்தின் மூலம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சவால் விடுக்கிறார், கோக்லியும் விதிவலக்கல்ல. தென்னாபிரிக்கப் பந்துவீச்சு மாற்றம் ஒவ்வொரு முறையும் வெற்றியடைந்துள்ளது. தற்போது ஆடுகளமும் தமக்குச் சாதகமாக அமைந்ததை அடுத்து பிளாசிஸின் முகத்தில் வெற்றிப்புன்னகை வருவதில் என்ன வியப்பு. (ம)

**6 மாத தொழிற்பயிற்சி கற்கைநெறி**
தையல்
கேயர்ஸ்ரையில்
பிளவர்
பியூட்டிபாலர்
குக்கரி
ஐஸ்சிங்
மௌலர்
கைவினை பொருள்கள்
மேக்கப்



9 வகை கற்கைநெறிகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் திங்கள் முதல் வெள்ளிவரை 10.00 மணிக்கு நடைபெறும்.
இடம் : உதயவாழ்வு (உதயன் பணிமனையருகில்)
55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொடர்புகளுக்கு : 021 492 7425
(IN 5499/15)

**மரண அறிவித்தல்**



தோற்றம்: 28 . 09 . 1998
மறைவு: 22 . 01 . 2018

**இராசேந்திரகுமார் (சந்திரன்) ஜெயந்தன்**

பாண்டவெட்டை சுழிபுரத்தைச் சேர்ந்த இராசேந்திரகுமார் ஜெயந்தன் (22.01.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராசேந்திரகுமார் ஜெயறஞ்சினி தம்பதியரின் அன்புமகனும் டிசேந்தினி, சயந்தன், நுயிந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராசேந்திரகுமார் (சந்திரன்)**
**(துயந்தன், கட்டட ஒப்பந்தகாரர்)**
**பாண்டவெட்டை, சுழிபுரம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 104 3178**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.